பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 16 சனிக்கிழமை (02.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 310

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

# சிங்களக் கட்சிகளின் அலட்சியம்

# குடாநாட்டு மக்கள் கடும் அதிருப்தி

## தமிழருடன் அதிகாரங்களைப் பகிரத் தயாரில்லை என்றும் சந்தேகம்

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்2

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இலங்கையின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் நடந்து கொள்ளும் விதம் குறித்து யாழ். குடாநாட்டு மக்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள சிங்களத் தலைமைகள் ஒருபோதும் தயாராகப் போவதில்லை என்றும் அவர்கள் அச்சம் வெளியிட்டனர்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப் பட்டதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி அண்மையில் தெரிவித்திருந்தது. அதேவேளை 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவந்த ஜனாதிபதி மஹிந்தவின் அரசு அதில் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வைப் புறக்கணித்தது. அத்துடன் இந்திய - இலங்கை ஒப்பந்தத் தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களும் கூட திரும்பப் பெறப்பட்டன.

சுமார் மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த போர் முடிவுக்கு வந்து தீர்வுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என உலக நாடுகள் கூறிவரும் நிலையில் இரு பிரதான அரசியல் கட்சிகளும் போக்குக் குறித்து யாழ். குடாநாட்டு மக்களின் கருத்தை அறிய ''உதயன்'' முயன்றான்.

சமூகத்தின் பல்வேறு அடுக்கு

(24ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் வீதி விபத்து இரு சிப்பாய்கள் பலியாம்

கொழும்பு,ஒக்.2

திருகோணமலை எப்பாவல மஹா இலுப்பலம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று லொறி ஒன்றுடன் மோதியதில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த விபத்து நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றது எனத் தெரிய வருகிறது.

4 இராணுவத்தினர் இரண்டு

(24ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட இலங்கையர்களை விடுவிக்கப் பேச்சு

கொழும்பு,ஒக்.2

கடந்த ஒகஸ்ட் மாதம் சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கைக் கப்பல் பணியாளர்களை விடுவிப்பது தொடர்பில் எகிப்திய அதிகாரிகளுடன் எகிப்திலுள்ள இலங்கைத் தூதரகம் தற்போது கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு ஆதரவாக அணிதிரள ஜே.வி.பி. அழைப்பு

### இன்று முதல் நாடளாவிய ரீதியில் போராட்டம்

கொழும்பு,ஒக்.2

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து 46 லட்சம் வாக்குகளைப் பெற்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக மக்களையும், கட்சிகளையும் அணி திரளும்படி ஜே.வி.பி. நேற்று பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை பெலவத்தையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க அங்கு செய்தியாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா 46

(24ஆம் பக்கம் பார்க்க)

## கட்டில் இல்லை, மின் விசிறி இல்லை சிறை வாழ்வு ஆரம்பம்

கொழும்பு,ஒக்.2

வெலிக்கடைச் சிறைச்சாலையில் முன்னாள் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அறையிலிருந்த கட்டிலும் மின்விசிறியும் அகற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தில் 30மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

இவர் இப்போது வைக்கப்பட்டிருக்கும் அறை முன்னர் விஜயகுமாரதுங்க வைக்கப்பட்டிருந்த அறை என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதே

(24ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

**கருஜெயசூரியவின் சந்தேகம்**
முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை தூக்கிலிடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கையே தற்போது வழங்கப்பட்டுள்ள 30 மாத கால சிறைத்தண்டனை. பக்கம் 2

**நாடாளுமன்ற சபைக்கு தமிழ் - முஸ்லிம் உறுப்பினர்**
நாடாளுமன்ற சபைக்கான முஸ் லிம் உறுப்பினராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தேசிய பட்டியல் உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வரும் தமிழ் உறுப்பினராக ஐ.தே.க.தேசிய பட்டியல் உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதனும் நியமனம் பக்கம் 5

**மீள்குடியமர்வுக்கு ஐ.நா. உதவி**
ஐக்கிய நாடுகள் சபை மக்களின் மீளக்குடியமர்வுக்கு சகல வழிகளிலும் பூரண ஒத்துழைப்பை வழங்கும். பக்கம் 9

**அயோத்தியில் இராமருக்கு கோயில்**
அயோத்தியில் இராமர் பிறந்த இடத்தை நீதிமன்றம் உறுதி செய்திருப்பதால் அங்கு இராமருக்கு பிரமாண்டமான கோயில் கட்டப்படும். பக்கம் 19

## மன்னிப்புக் கேட்டால் தண்டனை குறையலாம்

### கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.2

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தி னால் விதிக்கப்பட்ட தீர்ப்பு அரசியல் அழுத் தங்களுக்காக மாற்றிக் கொள்ளப்படமாட்டாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சரத் பொன்சேகா மன்னிப்புக் கோரினால் மாத்திரமே தண்டனையை தளர்த்துவது தொடர்பில் ஆராய முடியும். - இப்படிப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஊடகங்களுக்குத் (24ஆம் பக்கம் பார்க்க)



கணவரின் உடைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு அழுதவண்ணம் வெளியேறும் அனோமா

## மீள்குடியமர்வு, அபிவிருத்தி குறித்து அரசுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தும்

### மாவை எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு,ஒக்.2

வடபகுதியில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் அப்குதிகளில் மேற்கொள் ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக அரசு அழைப்பு விடுக்கும் பட்சத்தில் பேச்சு நடத்துவதற்குத் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாகப் பேச்சுகளை நடத்துவதற்கு எதிர்வரும் வாரமளவில் அரச தரப்பிலிருந்து அழைப்பு விடுக்கப்படும் எனத் தாம் நம்புகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடபகுதி மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் ஏற்கனவே ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு(24ஆம் பக்கம் பார்க்க)

அதிர்ச்சி! அதிர்ச்சி!!
குடாநாட்டு மாணவர்கள் சமூகவிரோதச் செயல்களில்!!!
3ஆம் பக்கத்தைப் புரட்டுங்கள்

### கிளிநொச்சி, முல்லைத்தீவில் பணிபுரிய

## அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட கட்டுப்பாட்டில் தளர்வு

யாழ்ப்பாணம், ஒக். 2

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அரசசார்பற்ற நிறுவனங்கள் பணிபுரிவதற்கு பாதுகாப்பு அமைச்சு விதித்திருந்த கட்டுப்பாடுகளை ஓரளவு தளர்த்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலை வர் வி.கேசவன்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியதாவது:-

(24ஆம் பக்கம் பார்க்க)

இப்பொழுது யாழ் நகரில்...



என்றென்றும் மக்களின் நன்மதிப்புப் பெற்ற ஸ்தாபனம் நவீன் செரமிக்
Naveen Ceramic (Pvt) Ltd.
212, Palaly Road, Jaffna.
Tel : 212220033 / 212220044

## விசுவமடு பெண்கள் மீது வல்லுறவு: சிப்பாய்களின் பிணை நிராகரிப்பு

கிளிநொச்சி, ஒக்.2

கிளிநொச்சியில் தனியாக இருந்த இரண்டு பெண்கள் மீது கடந்த ஜூன் மாதம் 6ஆம் திகதி பாலியல் வல்லுறவு புரிந்தனர் என்று குற்றம்சாட்டப்பட்ட நான்கு இராணுவச் சிப்பாய்கள் சம்பந்தப்பட்ட வழக்கு, நேற்றுமுன்தினம் முதல் முறையாக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.சிவகுமார் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இரண்டு சாட்சிகள் சாட்சியமளித்தனர்.

அத்துடன், அவர்களால் பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட வாக்கு மூலம் நீதிவான் முன்னிலையில் வாசித்துக்காட்டப்பட்டது. இதனையடுத்து, மேற்படி வழக்கு விசாரணையை நவம்பர் 10 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவைத் தூக்கிலிடுவதற்கான முதற்கட்ட நகர்வே சிறைத்தண்டனை!



## சந்தேகிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக். 02

**முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைத் தூக்கிலிடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கையே தற்போது வழங்கப்பட்டுள்ள 30 மாத கால சிறைத் தண்டனை - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜய சூரிய சந்தேகம் வெளியிட்டுள்ளார்.**

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு-

18 மாதங்களுக்கு முன்னர் உலகின் தலைசிறந்த இராணுவத் தளபதி என பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் வர்ணிக்கப்பட்ட சரத் பொன்சேகா இன்று வெலிக்கடைச் சிறைச்சாலையில் சாதாரண கைதியைப்போல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கும் 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் சர்வாதிகார போக்கையும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தையும் இந்நடவடிக்கை பறைசாற்றுகின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பிரதான எதிர்க்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டதன் காரணமாகவே சரத் பொன்சேகாவுக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தண்டனை சரத் பொன்சேகாவை தூக்கிலிடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இருக்கலாம் என மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இராணுவ நீதிமன்றம் பொன்சேகாவுக்கு விதித்த தீர்ப்பிற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்க மாட்டார் என்று தான் நாட்டு மக்கள் கருதினர்.

முன்னாள் இராணுவ அதிகாரியாக நாட்டுக்குச் சேவையாற்றிய ஒருவருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்பதால் நேற்றைய தினத்தை (30 ஆம் திகதி) எனது வாழ்நாளில் துக்கதினமாக அனுஷ்டித்தேன்.

-இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## ஐ.நாவின் சமாதானப் படைக்கு 43 இலங்கைப் பொலிஸார் தெரிவு

கொழும்பு, ஒக். 02

இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் 43 பேர், ஐ.நா. சமாதானைப் படைக்காக ஐ.நாவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. தேர்வு உதவிக்குழு அணியொன்று நியூயோர்க்கிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்து இத்தெரிவை மேற்கொண்டுள்ளது.

மொழி, வாகனம் செலுத்துதல், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியனவை தொடர்பாக சோதனைகள் நடத்தி, இத்தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.கல்வி நிலைய உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் நேற்று பிணை அனுமதி

### அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிசாருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக்.02

வெளிநாட்டில் கல்வி பயில ஏற்பாடு செய்து தருவதாகத் தெரிவித்து ஏமாற்றியதாக. யாழ். பொலிஸ் நிலையத்தில் மூன்று பேர் செய்த முறைப்பாடு தொடர்பாக விசாரணைகளை நடத்தி பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

வெளிநாட்டில் கல்வி பயில்வதற்காக பணம்பெற்று தம்மை ஏமாற்றியதாக பாதிக்கப்பட்ட மூவர் யாழ்கல்வி நிலையமொன்றிற்கு எதிராக யாழ்பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்படு செய்தனர்.

இந்த முறைப்பாட்டை அடுத்து சம்பந்தப்பட்ட கல்வி நிலையத்தின் உரிமையாளர்களை நேற்று லிசாரணை செய்த போலிஸார் அவர்களில் ஒருவரை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த யாழ் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா,இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரனைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட நபரை 75 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு மூன்று பேரின் சரீரப்பிணையில் செல்ல அனுமதித்து வழக்கு விசாரணையை நீதிவான் ஒத்திவைத்தார். (ஒ-ஐ)

## விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு வடகொரியா ஆயுதம் வழங்கியது

### றொஹான் குணரட்ண தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 02

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு வட கொரிய அரசு 1997 ஆம் ஆண்டு முதல் ஆயுதங்களை விற்பனை செய்து வந்துள்ளது - என்று பயங்கரவாத விவகாரங்கள் சம்பந்தப்பட்ட சர்வதேச நிபுணர் றொஹான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க ஆணைக் குழு முன்னர் நேற்று சாட்சியம் வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கொடுக்கல், வாங்கல்களின் போது புலிகள் இயக்கத்துக்கும் வட கொரிய அரசுக்கும் இடையிலான முகவராக அவ்வியக்கத்தின் கணக்காளரான பொன்னையா ஆனந்தராஜா என்பவர் தாய்லாந்தில் இருந்து செயறபட்டார் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பூண்டோடு அழிக்கப்பட்டு விட்டனர் என்றும் ஆனால் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் பலமான நிலையிலேயே இயங்கி வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.




முதியோர் தினத்தையொட்டி கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள வயோதிபர்களுக்கு வடக்கு மாகாண சபை ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி அன்பளிப்புப் பொருள்கள் வழங்குய போது எடுக்கப்பட்ட படம். (படம்- அருளன்)

## ரூ. 8,000 சம்பள உயர்வு கோரிக்கை

கொழும்பு, ஒக். 02

அரச, தனியார்துறை ஊழியர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் 8,000 ரூபா சம்பள உயர்வு வழங்கக் கோரும் யோசனை ஒன்றை தொழிற்சங்கங்கள் கூட்டாக ஜனாதிபதியிடம் முன்வைக்கவுள்ளன என தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே இம் முடிவு எடுக்கப்பட்டது. இந்த ஆலோசனைக்கு இலங்கை முழுவதுமுள்ள தொழிற்சங்கங்களிடம் கையெழுத்துப் பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கையெழுத்துப் பெறும் நடவடிக்கை நாளை ஆரம்பிக்கப்படும். இந்த ஆலோசனை எதிர்வரும் 6ஆம் திகதி ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும் என தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தெரிவிக்கின்றது. (சி)

## புற்றுநோய் காப்பக சிறுவர்களுக்கு மருந்துகள், கற்றல் உபகரணங்கள்

### அவர்களுக்கு உலருணவும் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.02

உலக சிறுவர் தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் நேற்று வெள்ளிக்கிழமை மருதனார் மடத்திலுள்ள கேன் புற்றுநோய் காப்பகத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது,50 சிறுவர்களிற்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அம்மா பகவான் ஏகத்துவ இளைஞர் அணி இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சை வைத்திய நிபுணர் என். ஜெயக்குமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் புற்று நோய்க்கு சிகிச்சை பெற்றுவரும் 50 சிறுவர்களுக்கு,கற்றல் உபகரணங்கள் உலருணவுகள்,விளையாட்டுப் பொருள்கள்,சத்துணவு என்பன சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டன.

இவை மட்டுமின்றி புற்று நோய் சிகிச்சைக்குத்தேவையான இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகளையும் அம்மா பகவான் ஏகத்துவ இளைஞர் அணி இயக்கம் வழங்கியது.

வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரிடமே மருந்துகள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்மா பகவான் ஏகத்துவ இளைஞர் அணியின் உறுப்பினர்கள் கேன் புற்றுநோய்,சிகிச்சைக் காப்பக உத்தியோகத்தர்கள்,யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவு வைத்திய அதிகாரி த.சுசிதரன் உள்ளிட்டோர் இதன் போது கலந்துகொண்டனர். (ஒ-14)

## இந்திய வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க பிரதேச செயலகங்களில் படிவங்கள்

### 15ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,ஒக்.02

இந்திய அரசினால், குடாநாட்டில் அமைய உள்ள வீட்டுத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் பயனாளிகள் பிரதேச செயலகங்களிலுள்ள விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டு 18.05.2009 இற்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியவர்களே இந்த வீட்டுத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்களிற்கு சொந்தக் காணி அவர்களது பெயரில் இருப்பதுடன் நிரந்தர வீடு பகுதியளவில் மட்டும் சேதமடைந்திருந்தால் விண்ணப்பிக்க முடியும்.

போரினால் பாதிக்கப்பட்ட விதவைக்குடும்பங்கள்,போரில் இறந்த,காணாமற்போன,காயமடைந்தவர்களைக் கொண்ட குடும்பங்கள், எண்ணிக்கையில் கூடிய அங்கத்தவர்களைக் கொணட குடும்பங்கள் மற்றும் வயது கூடியவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு இந்த விண்ணப்பத்தின் போது கூடிய முன்னுரிமை அளிக்கப்படும்.

இவற்றில் பகுதியளவில் சேதமடைந்த 2 ஆயிரம் வீடுகள் திருத்திக் கொடுக்கப்படஉள்ளன. வீடொன்றுக்கு 2 இலட்சம் ரூபா வரை வழங்கப்படவுள்ளது. இந்நிதி மூன்று கட்டங்களாக வழங்கப்படும்.முதல் கட்டமாக 1 லட்சமும் இதன் பின் 2ஆம் கட்ட மாக 80 ஆயிரமும்,மூன்றாம் கட்டமாக 20 ஆயிரமும் வழங்கப்படும்.

இதேவேளை யாழ்.நகரில் 40 வீடுகளும்,நல்லூர்,அரியாலையில் 50 வீடுகளும் , தெல்லிப்பழையில் 30 வீடுகளும்,காரைநகரில் 30 வீடுகளும் ,விதவைகள் ,ஊனமுற்றவர்களுக்கு முதல் கட்டத் திட்டத் தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்பட உள்ளன.

அடுத்த கட்டமாக முழுதாகச் சேதமடைந்த வீடுகள் 6 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட உள்ளன [illegible] (ஒ-[illegible])

## வேலை நிறுத்தத்துக்கு தாதியர் சங்கம் முஸ்தீபு

கொழும்பு, ஒக். 02

''எமது கோரிக்கைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு பெற்றுத்தராவிட்டால் எதிர்வரும் 26 ஆம், 27ஆம் திகதிகளில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.'' - இப்படி அகில இலங்கை தாதியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அச்சங்கத்தின் தலைவர் எஸ்.பி.மெதவத்த 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

நாம் சுகாதார அமைச்சரிடம் பல தடவைகள் பேச்சு நடத்தினோம். எமது கோரிக்கைகளுக்கான தீர்வுகளை ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன் பெற்றுத் தருவதாக அவர் உறுதியளித்தார். எனினும், இதுவரை எதுவிதத் தீர்வையும் பெற்றுத் தராது அரசு அசமந்தப்போக்கை கடைப் பிடிக்கின்றது.

அரசு எமது கோரிக்கைகளை உதாசீனப்படுத்தியமையைக் கண்டித்தும், எம்மை உடனடியாக பேச்சுக்கு அழைக்குமாறு கோரியும் நேற்று (அதாவது நேற்றுமுன்தினம்) சுமார் 20 வைத்தியசாலையைச் சேர்ந்த தாதிமார்கள் சுகயீனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையும் அரசு பொருட்படுத்தாது அதன் அடாவடித்தனத்தை காண்பித்துக்கொண்டிருக்கின்றது.

எனவே, உடனடியாக அரசு எம்மை பேச்சுக்கு அழைத்து நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தீர்வுகளை வழங்கவேண்டும். இல்லையேல் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இதன்போது நோயாளிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு அரசே முழுமையாகப் பொறுப்பேற்கவேண்டும். - இப்படி அவர் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பாடசாலை மாணவரின் நடத்தைகள் குறித்து அதிர்ச்சித் தகவல்

# கையடக்கத் தொலைபேசி, இணையத்தால் யாழ்.குடாநாட்டில் பெரும் சமூகச் சீரழிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.2

✱மாணவர்கள் மாற்றுடைப் பொதிகளுடன் பாடசாலைக்குச் சென்று பின்னர் அங்கிருந்து வெளியேறி தவறான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர்.

✱இணையத்தள வசதிகள் வழங்கும் நிலையங்களுக்குச் சென்று தவறான வழிநடத்தல்களை வழங்கும் வலையமைப்புக்களைப் பார்வையிடுகின்றனர்.

✱கையடக்கத் தொலைபேசி மூலம் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

✱ஆள்நடமாட்டமற்ற பகுதிகளில், கட்டடங்களில் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுகின்றனர்.

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த அதிர்ச்சித் தகவல்கள் பகிரங்கமாகியுள்ளன.

யாழ்.அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கூட்டம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்.அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் முக்கியமானதாக யாழ். மாவட்டத்தில் சிறுவர்களின் தற்போதைய பாதுகாப்பற்ற நிலைமைகள் தொடர்பாகவும் நோயினால் பாதிக்கப்பட்டு உதவி தேவைப்படும் சிறுவர்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந் நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர் நலன் தொடர்பான வைத்தியர் திருமதி திருமகள் சிவசங்கராலும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முக்கியமான சில விடயங்கள் அவையின் கவனத்திற்கு முன்வைக்கப்பட்டன. அவையானவன:

**மாற்றுடை பொதிகளுடன் பாடசாலைக்கு மாணவர்கள்**

✱பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரம் உட்பட ஏனைய நேரங்களிலும் சில தவறான நடத்தைகளில் ஈடுபடுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இத்தகைய சந்தர்ப்பங்களில் மாணவர்கள் மாற்றுடை பொதிகளுடன் பாடசாலைக்குச் சென்று பின்பு வெளியிடங்களுக்குச் செல்வதாகவும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

✱18 வயதுக்கு உட்பட்டவர்கள் இணையத்தள வசதிகளை வழங்கும் நிலையங்களுக்குச் சென்று தவறான வலையமைப்புக்களில் தமது பொழுதினைச் செலவழிப்பதாகவும் அறியக்கூடியதாக வுள்ளது.

✱கையடக்கத் தொலைபேசியின் தவறான பாவனையும் சிறுவர் துஷ்பிரயோக, சமூக விரோத செயல்களை அதிகரிக்கச் செய்கின்றன. மற்றும் இணையத்தள வசதிகள் உள்ளடங்கிய விலையுயர்ந்த செல்லிடத் தொலைபேசிகள் பாவனை சிறுவர்கள் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

**தற்காலிக விடுதிகளில் சிறுவர் துஷ்பிரயோகம்**

✱தற்காலிக் தங்குமிட விடுதிகளிலும் ஆள் நடமாட்டமில்லாத பகுதிகளிலும் மக்கள் வசிக்காத காலியாகவுள்ள தனித்த வீடுகளிலும் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் சிறுவர்கள் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாபார நடவடிக்கைகளிலும் ஏனைய தொழில் நடவடிக்கைகளிலும் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் ஈடுபடுகின்றனர். குறிப்பாக கடற்றொழிலில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை புறக்கணித்துவிட்டு ஈடுபடுவதை காணக்கூடியதாக உள்ளமை பாடசாலை இடைவிலகலும் மிகவும் அதிகரித்துக் காணப்படுகினறன.

எனவே இத்தகைய நடவடிக்கைகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது எமது தார்மீகக் கடமையாகும் எனவும் இச்சந்தர்ப்பத்தில் பெற்றோர்களின் பொறுப்பு மிகவும் முக்கியமானது எனவும் அரசாங்க அதிபரால் வலியுறுத்தப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

01) பாடசாலை மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக குறித்த வகுப்பாசிரியர் மாணவர்களின் பொதிகளை திடீர் பரிசோதனை செய்தல் வேண்டும். பாடப்புத்தகங்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள், தொலைபேசிகள் ஆகியவற்றை பாடசாலைக்குள் கொண்டு வருவதை பாடசாலை அதிபர்கள் தடை செய்தல் வேண்டும். மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளை கண்டிப்பாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

**பெற்றோர் விழிப்புடன் இருத்தல் வேண்டும்**

பெற்றோரும் பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பாக மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்கின்றமையையும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் ஏனைய தவறான சூழ்நிலைகளிற்குள் ஈடுபடாதிருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்வதுடன் பெற்றோர்களும் சிறந்த முன்மாதிரிகளாக வழிகாட்டியாக இருத்தல் வேண்டும்.

02) இணையத்தள வசதிகளை வழங்கும் நிறுவனங்கள், நிலையங்கள் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் இணையத்தளங்களைப் பார்வையிடும் சந்தர்ப்பங்களில் தடுப்புச்சுவர் நிலைகளில்லாத திறந்தவெளியமைப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அருகில் உள்ளவர்களாலும் கண்காணிக்கக் கூடிய வசதிகளையும் மேற்பார்வையையும் மேற்கொள்ளல் வேண்டும்.

03) கையடக்கத் தொலைபேசிகளை சிறுவர்கள் பாவிப்பதை பெற்றோர்கள் தடுத்தல் வேண்டும். அதிலும் விலையுயர்ந்த நவீன வசதிகள் உள்ள செல்லிடத் தொலைபேசிகளை பாவிப்பதை முற்றாக தடுத்தல் வேண்டும். அவ்வாறு பாவிப்பதாயின் தங்கள் முன்னிலையில் மட்டுமே பாவிப்பதற்கு அனுமதிக்கலாம். மாணவர்கள் தனியாக பாடசாலை, பிரத்தியேக வகுப்புக்கள் போன்றவற்றிக்குச் செல்லும் வேளைகளில் கைத்தொலைபேசிகள் எடுத்துச் செல்வதை அனுமதிக்கக் கூடாது.

04) தற்காலிக தங்குமிட விடுதிகள், Hotel, Restaurant போன்றவற்றிற்கு சிறுவர்கள் தனியாக வரும் சந்தர்ப்பங்களில், சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளில் ஈடுபடும் வேளைகளிலும் குறித்த நிலைய முகாமையாளர்கள் அவற்றை அவதானித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் உரியவர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். தேவைப்படின் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கும் அறிவித்து அவர்களது உதவியையும் பெற்று கொள்ளலாம். இச்சந்தர்ப்பங்களில் தமது பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என கவல்துறையினரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

காவல்துறையினரும் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளல் வேண்டும். மேலும் ஆள்கள் வசிக்காது கைவிடப்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் தென்படின் அப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்டவர்களின் குறிப்பாக கிராம உத்தியோகத்தர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், நன்னடத்தை உத்தியோகத்தர், சமூக சேவைகள் உத்தியோகத்தர், காவல்நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும். கிராம மட்டத்தில் பிரத்தியேக குழுக்களை அமைத்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுதல் வேண்டும்.

**காவல்துறையின் உதவியுடன் திடீர் நடவடிக்கை**

05) இளம் சிறுவர்கள் தொழில்களுக்கு அமர்த்தப்படுவதையும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் தடுக்கும் முகமாக தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட மேற்படி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பிரதேச செயலரின் கண்காணிப்பின் கீழ் குழு ஒன்று உருவாக்கப்பட்டு சிறுவர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் காவல்துறை யினரின் உதவியுடன் பொருத்தமான திடீர் நடவடிக்கைளை மேற்கொண்டு சிறுவர்களின் பாதுகாப்பினையும் உரிமைகளையும் நிலைநாட்டுதல் வேண்டும்.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான் நடவடிக்கைகளைத் தடுக்கும் முகமாக துஷ்பிரயோக நடவடிக்கைகளில் சிறுவர்கள் ஈடுபடும் வேளைகளில் விரைந்து செயற்படுவதற்கும் வசதியாக பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பிரத்தியேக தொலைபேசி இலக்கத்தை ஏற்படுத்தி தருமாறு காவல்துறையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் சிறுவர்கள் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை பிராந்திய சுகாதாரசேவைகள் பிரிவினருடன் இணைந்து கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்பையும் பெற்று பெற்றோர்களுக்கு நடத்துமாறும் துஷ்பிரயோகம் மற்றும் பாடசாலை இடைவிலகல் போன்றவற்றினை தடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரச அதிபரால் வலியுறுத்தப்பட்டது.

தீராத நோயினால்(சிறுநீரக நோய், இதய நோய், புற்று நோய்) பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக தற்போது அடையாளம் காணப்பட்டவர்களின் பூரண தகவல்களை பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து பெற்று அவ் விவரங்களினை யாழ். மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் செய்திப் பத்திரிகைகளிலும் மக்கள் பார்வைக்கு தெரியப்படுத்துவதன் ஊடாக உதவும் மனப்பான்மையுள்ள நல்லுள்ளங்களின் உதவிகளைப் பெற்று பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களைப் பேணுவதற்கு அனைத்து முயற்சிகளும் உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் அரசாங் அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டது. (ஒ-2)

# குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்.குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கென அரசு 250 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்குரிய அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் பொருளாதார அபிருத்தி அமைச்சினால் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே செயற்படுத்தி வரும் அபிவிருத்தித் திட்டத்திற்கு மேலதிகமாக இப்புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த மாத நடுப் பகுதியில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரினால் முன்வைக்கப்பட்ட பின்வரும் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தவே மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இவ்வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக் கைகளை அந்தந்தத் திணைக்களத் தலைவர்கள் உடனடியாக மேற்கொண்டு உரிய காலத்தில் நிறைவு செய்து பொதுமக்களின் பாவனைக்கு வழங்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளும் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிஒதுக்கீடுகளும் வருமாறு:-

பருத்தித்துறை சந்தைக் கட்டடம் (இரண்டாம் கட்டம்) அமைத்தல். - 50 மில்லியன் ரூபா

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களது குடிதண்ணீர் -25மில்லியன் ரூபா

புங்குடுதீவில் கமநல அபிவிருத்தி நிலையம் அமைத்தல் - 05 மில்லியன் ரூபா

வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகள் புனரமைப்பு -15மில்லியன் ரூபா

வலி.வடக்குப் பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகள் புனரமைப்பு -17.50மில்லியன் ரூபா

புலோலி (மருதங்கேணி) பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகள் புனரமைப்பு - 65மில்லியன் ரூபா

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) கல்விக் கோட்டத்தின் 14 பாடசாலைகள் புனரமைப்பு - 35மில்லியன் ரூபா

புங்குடுதீவு உவர்நீர் தடுப்பு அணைகட்டுதல் - 15மில்லியன் ரூபா

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்பு (மருதங்கேணி,தெல்லிப்பழை) - 22மில்லியன் ரூபா. (ஒ-16)

## உயர்மின் அழுத்தத்தால் மின் உபகரணங்கள் சேதம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ். அம்மன் வீதியில் நேற்றிரவு 8 மணியளவில் திடீரென ஏற்பட்ட உயர்மின் அழுத்தம் காரணமாக அப்பிரதேச மக்களின் தொலைக்காட்சிகள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் பலவும் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கான மின் விநியோகம் சீராக இடம்பெறவில்லையென மின்சார சபைக்கு முறையிட்டும், உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ்.ராஜதேவன் தெரிவித்தார். (ஒ-ஐ)

## அச்சுவேலி கைத்தொழில் பேட்டை இந்தியா உதவியுடன் புனரமைக்கப்படும்

### 4 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக் கிட்டும்

வடமராட்சி,ஒக்.2

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அடுத்த மாதம் புனரமைப்புச் செய்யப்பட்டு அங்கு 36 கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனால் வடபகுதியைச் சேர்ந்த 4 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் :-

சிறுகைத்தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கம் 178 மில்லியன் ரூபாவை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

இந்த நிதியிலிருந்து 1986ஆம் ஆண்டு முதல் இயங்காமல் உள்ள அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையைப் புனரமைத்து மீள இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி, புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னிட்டு கைத்தொழில் பேட்டை வளாகத்துடன் இணைந்த 24 ஏக்கர் காணியில் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்படவுள்ளன.

புனரமைப்புப் பணிகளுடன் கைத்தொழில் பேட்டைக்குத் தேவையான வீதிகள், குடிதண்ணீர், மின்சாரம், தொழிற்சாலைகளுக்கான கட்டடங்கள், நிர்வாக அலுவலகக் கட்டடம் என்பன ஏற்படுத்தப்படுவதுடன் பிளாஸ்டிக், ஆடைத்தொழிற்சாலைகளுக்கான 36 தொகுதிகளும் அமைக்கப்படவுள்ளன.

இதன் புனரமைப்பு அபிவிருத்தி வேலைகள் இரண்டு ஆண்டுகளுக்குள் - அதாவது 2012ஆம் ஆண்டுக்குள் நிறைவடைய வேண்டும் என இந்திய அரசு எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும்
மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

| | |
|---|---|
| தலைவர் | திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் (கல்லூரி அதிபர்) |
| இடம் | பண்ணத்தரிப்பு பெரியவிளான் சவாரித்திடல் |
| காலம் | நாளை (03-10-2010) ஞாயிற்றுக்கிழமை |
| நேரம் | பி.ப. 1 மணி |

முதன்மை விருந்தினர்:
உயர்திரு. மாவை சேனாதிராசா அவர்கள்
(கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்,யாழ்.மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்:
பொறுப்பதிகாரி, இளவாலை பொலிஸ் நிலையம்

ஆரம்பிப்பாளர் :
சி.அசோககுமாரன் (கல்லூரி பழைய மாணவன்)

பிரவேசம் இலவசம்
சவாரிப்பிரியர்கள், காளைச் சொந்தக்காரர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பரிசில்கள்
A பிரிவு முதலாம் பரிசு தங்கப் பதக்கம்
B,C முதலாம் பரிசு துவிச்சக்கர வண்டி

நூற்றாண்டு விழாச் சபையினர்,
யா/மகாஜனக் கல்லூரி
(சி/571528) தெல்லிப்பழை.





## மழைக்கால வசந்தங்கள் வந்துவிட்டன

மழைக்காலத்தை முன்னிட்டு நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
- ★ றெயின்கோட்
- ★ யக்கட்
- ★ சிறுவர்களுக்கான மழைக் கோட் வகைகள்
- ★ சகலவிதமான குடைகள் மற்றும் நுளம்பு வலைகள்

அனைத்தும் கொழும்பு விலையைவிட குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

**வாணி ரெக்ஸ்**
இல.81,பெரியகடை, யாழ்ப்பாணம்.



## மீண்டும் யாழ் நகரில்

இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துனர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியரின்



**Diploma in Mobile Phone Repairing**

**Hardware**
- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கழற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)

**Free!**
Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site

Rs.8750/=

**Software** Setup Installation, Unlocking, Flashing
Jaf, P-Key, SE tool, NSpro, Infinity, Pin Finder, Spiderman, MX-Key.

COLOMBO (SDC) No: 1, Perera Lane, Wellawathe | Monday-Thursday 4 Days (10:00am-3.00pm) | Sat or Sun 2 months (10:00am-1.00pm)

JAFFNA No: 102-2/2, Navalar Road, (Luxman Plaza Bulding) OCT 04 OCT 05 OCT 06 OCT 07

உங்கள் பதிவுகளுக்கு 071 4241873


## மரண அறிவித்தல்

### பாக்கியநாதன் ஜெகசோதி



வட்டு. வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த மர அரிவு ஆலை உரிமையாளர் கா.பாக்கியநாதன் அவர்களின் அன்பு மனைவி பாக்கியநாதன் ஜெகசோதி நேற்று (01.10. 2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2010) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (104089)
தகவல்:
குடும்பத்தினர்.

## மின்னல் தாக்கியதில் கடலில் மீனவர் மரணம்

கெருடாவில்,ஒக்.2

மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் கடலில் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி மரணமானார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இன்பர் சிட்டிக் கடலில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி இந்தச் சம்பவத்தில் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து இன்பர் சிட்டிப் பகுதியில் வசித்து வரும் ஒரு பிள்ளையின் தந்தையான மரியாம்பிள்ளை மரிய வின்சன் (35) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

(ஓ-253-236-16)

## ஒஸ்மானியாவில் சிறுவர் தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று சிறுவர் தினம் கொண்டாடப் பட்டது.

கல்லூரி அதிபர் எம்.எஸ்.எ.எம்.முபாறக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள் மத்தியில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

(ஓ-16)

## கைத்தொழில் துறையினருக்கு சட்ட நடைமுறைகள் குறித்த பயிற்சிப் பட்டறை

குடாநாட்டில் உள்ள கைத்தொழில் துறையினர் தமது தொழில்துறையை மேம்படுத்தத் தேவையான சட்டநடைமுறைகள் குறித்த பயிற்சிப்பட்டறை இன்று காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இப்பயிற்சிப் பட்டறையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகஈஸ்வரன், சட்டத்தரணி கே.நீலகண்டன், சட்டத்தரணி ஏ.ஏ.எம். இலியாஸ் ஆகியோர் வளவாளர்களாகப் பங்குபற்றுவர்.

(ஓ-ஐ)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,ஒக்.2

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2299ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "G" என்ற ஆங்கில எழுத்தும் 0/3/6/2/6/9 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 0/3/6/2/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/6/2/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/2/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 141 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,292 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,132 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

9 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,29,769 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 0/3/6/2/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/3/6/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 134 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

0/3/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,319 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

0/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,912 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"G" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 51,773 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஓ-10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
17.04.1941

இறப்பு:
11.10.2009

### திருமதி நல்லதம்பி பரமேஸ்வரி

திதி: நவமி
(02.10.2010)

*ஊற்றான அன்பாகி உயிராகி இருந்தாயே*
*நேற்று நீ காற்றாகி நிழலாகிப் போனாயே*
*ஆற்றிலோம் அன்னாய் நின் அன்பகன்றோம்*
*மாற்றிலோம் மனதை மறக்கவும் கூடுமோ*

முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இன்று (02.10.2010) சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.11, 3 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் பத்மாவதி



அராலியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பத்மாவதி 22.09.2010 புதன்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கிருஸ்ணதாஸின் அன்புச் சகோதரியும் பத்மரஞ்சினி, பத்மகாந்தன், பத்மசீலன் (டென்மார்க்), பத்மசிறி (டென்மார்க்), பத்மமுரளீதரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும் மகேந்திரா, திருசாந்தினி, அனுஷா, வாணி, கவிதா ஆகியோரின் அன்பு மாமியும் இமாஜினி, பவாஜினி, ஜெகப்பிரகாஸ், கஜப்பிரகாஷ், லிவியபிரசாத், ஆரூசன், கோமுகி, மாரீஸன், அஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2010) சனிக்கிழமை டென்மார்க் நேரப்படி 2 மணிக்கு டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சு.பத்மகாந்தன் (மகன்),
ந.மகேந்திரா (மருமகன்)
T.P - 0214905232, 0774016403

பாடசாலை வீதி,
தாவடி, கொக்குவில்.

### பிச்சாதனக் குருக்கள் கோவிந்தராஜ சர்மா
(வேணு ஐயா)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்தவரும் கனடா மொன்றியல் திருமுருகன் ஆலய பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பிச்சாதனக் குருக்கள் கோவிந்தராஜசர்மா 30.09.2010 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் ஆதித்தியாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.10.2010 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.இராமநாதசர்மா
(சகோதரன்)

நீர்வேலி வடக்கு. (571525)

### வேலுப்பிள்ளை துரைச்சாமி

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வே.துரைச்சாமி அவர்கள் நேற்று(01.10.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் தனபாலசிங்கம், தியாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணதேவி, சுபாஸ்சந்திரன்(சுன்னாகம், ப.நோ. கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பத்மபிரியா, சிந்து, பத்மவதனா, மயூரன்,மயூரி, மதூசன், மாதுளன், மகிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் சபரினாவின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.10.2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

குமரகோட்டம்,
கோண்டாவில் (104096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சங்கரா யார் கொலோ சதுரர்?

ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தமது பதவியை இழந்துவிட்டார். அத்தோடு அவர் 30 மாதங்களுக்கு கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

நாட்டின் இராணுவச் சட்டத்தின் கீழ் சரத் பொன் சேகாவை விசாரித்த இராணுவ நீதிமன்றம், அவர் இராணுவச் சட்டத்தின் 109 ஆவது அத்தியாயத்தின் சரத்துக்களை மீறினார் என்றும் அவற்றுக்கு அபகீர்த்தி உண்டாக்கும் வகையில் செயற்பட்டார் என்றும் தெரிவித்து மேற்கண்ட தீர்ப்பை வழங்கி உள்ளது.

மேற்குறிப்பிட்ட 109 ஆவது விதியை மீறி, இராணுவத் தளபாடங்களை விலை மனுக் கோராமல் தருவித்தார் என்பதே பொன்சேகா மீதான பிரதான குற்றச்சாட்டு.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை அங்கீகரித்ததால், மேலே தெரிவிக்கப்பட்ட தண்டனைகளை முன்னாள் இராணுவத்தளபதி அனுபவிக்க நேரிட்டுள்ளது.

இதற்கு முன்னர், சரத் பொன்சேகா இராணுவ சேவையில் இருந்தபோது அரசியலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில், அவர் இராணுவத்தில் பெற்றுக்கொண்ட பதக்கங்கள் மற்றும் பட்டங்கள் யாவும் நீக்கப்பட்டன. முதலாவது இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பையும் ஜனாதிபதி அங்கீகரித்ததாலேயே பதவிகள் பட்டங்கள் இரத்துச்செய்யப்பட்டன.

அரசியலில் ஈடுபட்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக பொன்சேகா அறிவித்த அன்றே அவரைச் சனி பகவான் சுற்றத்தொடங்கிவிட்டார்.

அன்றிலிருந்து, விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த இராணுவத் தளபதி என்று உச்சிக்கு உயர்த்தப் பட்டிருந்த பொன்சேகா மீது அரசாங்கத் தரப்பு 'கண்வைக்க' ஆரம்பித்தது என்று சொல்லலாம்.

அரசியல் அதிகாரம் ஒருவரின் கைக்குள் அதீதமாகச் சேர்ந்ததும் அதனைத் தாம் விரும்பாதவர்கள் மீது எறிந்து வஞ்சம் தீர்க்க முடியும், தலைமைக்கு மேல் தலையெடுக்கவிடாது தடுக்க முடியும் என்பதற்கு சரத் பொன்சேகாவுக்கு நேர்ந்த கதி நல்ல உதாரணமாகிறது. ஒருவர் குற்றம் செய்தால் அவர் தண்டிக்கப்படுவதே நீதி என்கிறோம். ஆனால் அந்த நீதியும் உரியவாறு நிலை நாட்டப்படவேண்டும் என்பதே வரன்முறை.

இங்கே -

சரத் பொன்சேகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கவென நிறுவப்பட்ட இராணுவ நீதிமன்றங்கள் சட்ட விரோதமானவை என்றும், அவை வழங்கும் தீர்ப்புகள், உத்தரவுகள், பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்றும் -

அந்தப் பரிந்துரைகளில் ஜனாதிபதி கையெழுத்திட்டால் அது நாட்டின் அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்ற வாதம் பிரதான எதிர்க்கட்சியால் முன்வைக்கப்பட்டது.

ஆனால், சரத் பொன்சேகாவுக்கு எதிராக நிறுவப்பட்ட இராணுவ நீதிமன்றங்கள் இரண்டும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் அரசமைப்புச் சட்டங்களுக்கு இசைவாகவுமே அமைக்கப்பட்டன என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அடித்துக் கூறுகிறார்.

இராணுவ நீதிமன்றங்கள் இரண்டும் நாட்டில் இராணுவச் சட்டத்தின் பிரகாரமே நிறுவப்பட்டன. அந்த இராணுவச் சட்டம் நாட்டில் நீதி முறைகளுக்கு உட்பட்டது என்று அமைச்சர் ரம்புக்வெல வாதிடுகிறார். இதே இராணுவச் சட்டங்களின் பிரகாரமே, சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தபோது நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றங்கள் 4,700 இராணுவ அதிகாரிகளுக்குத் தண்டனைகளை வழங்கியிருந்தன என்றும் அமைச்சர் உதாரணம் காட்டுகிறார்.

ஆயினும் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளுக்கு எதிராக நாட்டின் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என்றும் அமைச்சர் ரம்புக்வெல எடுத்துக் கூறியிருக்கிறார்.

அவ்வாறு, சரத் பொன்சேகாவுக்குத் தண்டனை வழங்கிய தீர்ப்புகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் பட்சத்தில் அது வெற்றியளிக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

நாட்டில் குண்டுத் தாக்குதல்கள் - குண்டுச் சத்தங்கள் கேட்காதவாறு போரை முடிவுக்குக் கொண்டுவந்த ஒரு முன்னாள் தளபதிக்கு இந்தக் கதியா என்று பெரும்பான்மை இன மக்கள் மனம் கோணுவதாகத் தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் ஆட்சியாளர்களிடம் அத்தகைய மனநிலை இல்லை.

மிகக் குறிப்பாக, ஜனாதிபதியும் அவரது சகோதரரான பாதுகாப்புச் செயலாளரும் கூறும் கதைகள், பொன் சேகா தண்டனை அனுபவிக்க வேண்டியவரே என்று நியாயப்படுத்துகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் வென்றால், சரத் பொன் சேகா ஜனாதிபதி மஹிந்தவையும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயாவையும் கொன்றொழிக்கச் சதித் திட்டம் வகுத்திருந்தார் என்று பாதுகாப்புச் செயலாளர் அடிக்கடி பிரஸ்தாபித்து வந்ததுண்டு. அதற்கான ஆதாரங்கள் தமக்குக் கிடைத்திருந்தன என்று அவர் ஊடகங் களுக்குத் தெரிவித்ததை இலகுவில் மறந்துவிடுவதற்கில்லை.

இத்தனைக்கும் மத்தியில், ஜனாதிபதித் தேர்தலின் போது, தமிழ் மக்கள், மஹிந்தவையும் பொன் சோகாவையும் பானையாகவும் கேத்திலாகவுமே பார்த்தார்கள். தமது உறவுகளில் பலரை, குடும்ப உறுப்பினர்களை, இரத்த உறவுகளை, பூவும் பிஞ்சுமாகப் பலி எடுத்த கோரப்போரை நடத்திய இருவரும் மோதிக்கொள்வதில் நன்மை தீமை, கஷ்டநஷ்டங்களை நினைத்துப் பார்க்க அவர்களுக்கு மனம் ஏவுவதாக இல்லை. அவரவர் செய்த வினைகளுக்கு என்றோ ஒரு நாள் அதன் பலாபலன்களை அனுபவித்தே தீர வேண்டும் என்ற நியதி முந்தியும் வரலாம் பிந்தியும் வரலாம் என்ற மனநிலையில் தமிழ் மக்கள்.

''தந்ததுன் தன்னை கொண்டதென் தன்னை
சங்கரா யார் கொலோ சதுரர்.....'' என்று மாணிக்கவாசகர் சிவனைக் கேட்ட நிலை இங்கே.

# 20 வருடங்களாக அவலத்தில் நாங்கள்; சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்துங்கள்

## வயாவிளான் பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.2

கடந்த 20 வருடங்களாக இரவல் காணிகளிலும், வீடுகளிலும், அகதி முகாம்களிலும் வாழ்ந்த நாம் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்து வருகின்றோம். எனவே எங்களைச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துங்கள்.

இவ்வாறு கோரி உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வயாவிளான் பகுதியைச் சேர்ந்த மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறுசிங்க ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் கடந்த 28 ஆம் திகதி பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப் பட்டபோது அங்கு திரண்டிருந்த வயாவிளான் பகுதியைச் சேர்ந்த மக்கள் மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

அங்கு அந்த மக்கள் முன்வைத்த கோரிக்கைகளின் விவரங்கள் வருமாறு:-

1990 ஆம் ஆண்டு எமது வளம் கொழிக்கும் வயாவிளான் பகுதியை விட்டு உடுத்த உடையுடன் வெளியேறினோம். அன்றிலிருந்து இன்று வரை அகதி முகாம்களிலும் இரவல் காணிகளிலும் உறவினர் வீடுகளிலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றோம்.

இன்று யுத்தம் ஓய்ந்து சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் எமது சொந்த இடங்களில் எம்மை மீளக்குடியமர்த்தி நிம்மதியான வாழ்வுக்கு வழிசமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்- என்றுள்ளது. (த-9)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,ஒக்.2

உயர் அழுத்த மின்மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பி.ப 5 மணிவரை குருநகர், நாவாந்துறை, கொட்டடி, யாழ்ப்பாணப் பகுதி மற்றும் பிறவுண் வீதி, காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி, சிவன்பண்ணை வீதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் வேலைகள் குறித்த நேரத்துக்கு முன்னதா முடிவுற்றால் மின்சாரம் வழங்கப்படலாம் எனவும் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (த-15)

## குடாநாட்டில் டெங்கு நுளம்பை ஒழிக்க கொழும்பில் இருந்து 'பக்றீரியா'!

யாழ்ப்பாணம்,ஒக்.2

டெங்கு நுளம்பை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக கழிவுநீரை அகற்ற முடியாத இடங்களுக்கு வாய்க்கால்களுக்கு தெளிப்பதற்கு'பக்றீரியா' கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி திருமதி சிவசங்கர் திருமகள்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இருப்பினும் அது மேலும் வீரியம் கொள்ளாத வகையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் சுகாதாரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் மழைக்காலம் தொடங்கியுள்ளதால் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம் தொடர்ந்தும் இருக்க வேண்டும்.

வாய்க்கால்கள் மற்றும் சதுப்பு நிலங்களில் உள்ள நுளம்புகளை அழிக்கும் முகமாக கொழும்பில் இருந்து 'பக்றீரியா' எடுத்துவரப்பட்டுள்ளது - என்றார். (ஒ-9)

## பருத்தித்துறையில் விழிப்புணர்வுப் பேரணி

வடமராட்சி,ஒக்.2

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தையொட்டி இன்று சனிக்கிழமை பருத்தித்துறையில் விழிப்புணர்வுப் பேரணி நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும் பேரணி ஒரு வழிப்பாதை ஊடாக நகரைச் சுற்றித் தொடர்ந்து யாழ்ப்பாண வீதி ஊடாக பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்தியில் உள்ள வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்துடன் முடிவடையும்.

சிறுவர், முதியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்கள் உரிமைகள், பாதுகாப்பு என்பனவற்றை உள்ளடக்கிய மகஜர் ஒன்றை பிரதேச செயலர் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவிடம் கையளிப்பார்.

பேரணியில் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொள்வார்கள்.(த-236)

## நாடாளுமன்றச் சபைக்கு தமிழ் - முஸ்லிம் உறுப்பினர்

கொழும்பு,ஒக்.2

நாடாளுமன்ற சபைக்கான முஸ்லிம் உறுப்பினராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தேசிய பட்டியல் உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வரும் தமிழ் உறுப்பினராக ஐ.தே.க.தேசிய பட்டியல் உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதனும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று தெரிய வருகின்றது.

அஸ்வரை பிரதம மந்திரி டி.எம். ஜயரட்ணவும் சுவாமிநாதனை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நியமித்திருப்பதாக அறியப்படுகின்றது.

பிரதமராலும் எதிர்க்கட்சித் தலைவராலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இரண்டு பேரின் விவரங்களையும் ஜனாதிபதிக்கு அனுப்பவிருப்பதாகவும் ஜனாதிபதி உடனடியாக 5பேர் கொண்ட நாடாளுமன்ற சபையை உருவாக்க நடவடிக்கை எடுப்பார் என்றும் சபாநாயகர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னர் எதிர்க்கட்சித் தலைவரால் நியமிக்கப்பட்டிருந்த சுமந்திரன் அதனை ஏற்க மறுத்துவிட்டமை தெரிந்ததே. (ப)

## புனர்வாழ்வு அதிகாரசபை வழங்கிய இழப்பீடுகள் பாதிப்புற்ற தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை

### உண்மையை ஒத்துக் கொள்கிறார் அமைச்சர் விஜித முனிசொய்ஸா

கொழும்பு, ஒக். 2

புனர்வாழ்வுச் சபையினால் இதுவரை காலமும் வழங்கப்பட்ட இழப்பீடுகளும் ஏனைய கொடுப்பனவுகளும் உண்மையாகவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை என சாடுகின்றார் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு பிரதி அமைச்சர் வி.ஜே. விஜித்த முனி சொய்ஸா.

இனிமேல் இப்படியான குறைபாடுகளும் ஊழல்களுக்கும் இடமளிக்க மாட்டோம் எனவும் கூறினார்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் யுத்த நடவடிக்கைகளின் போது பெரிதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கிய வைபவத்திலேயே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுள் முதல்கட்டமாக 134 குடும்பங்களுக்கான நட்ட ஈடுகள் வழங்கப்பட்டன.

பாதிப்புகள், இறப்புகள் அடிப்படையில் 50 ஆயிரம் முதல் ஒன்றரை லட்சம் ரூபா வரையில் நட்ட ஈடுகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் டியூ. குணசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு நட்ட ஈடுகளுக்கான காசோலைகளை வழங்கினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதி அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

நான் தமிழ் மொழியையும், தமிழர்களின் கலாசாரத்தையும் மதிப்பவன். சிங்களவர்களைப் போன்றே தமிழர்களும் சமமாகவும், அச்சமின்றியும் வாழ வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை.

முல்லைத்தீவைப் போன்று மொனராகலையும் ஒரு பின்தங்கிய கிராமம். உங்களுடைய பிரதேச மக்கள் பாதயாத்திரையாக கதிர்காமம் செல்லும்போது எமது பிரதேசத்தில் அனைவரையும் வரவேற்று உபசரிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததை பாக்கியமாகவே கருதுகின்றேன். இன்று உங்களை உங்கள் இடத்திலேயே நேரில் சந்திக்கின்றேன்.

இப்போது உங்களுக்கு வழங்கப்பட்ட இத்தொகை உங்களுடைய எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்துவிடாது. ஆனால் ஓர் உந்து சக்தியாக முதல் கட்ட முயற்சியாகும். இப்பணி தொடரும்.

அரசியல்வாதிகளுக்கோ, கட்சி ஆதரவாளர்களுக்கோ விசேட சிபார்சுகளுக்கோ நட்ட ஈடுகள் வழங்கப்படமாட்டாது. கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளர்கள் மூலம் நேரடியாக மறுசீரமைப்பு செய்யப்பட்டு, புனர்வாழ்வு அதிகாரசபை அதிகாரிகளின் அவை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள் என ஊர்ஜிதம் செய்யப்பட்டவர்களுக்கே இனிமேல் நட்ட ஈடுகள் வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் புனர்வாழ்வு உதவிகள் வழங்கப்படும் - எனவும் பிரதி அமைச்சர் உறுதியளித்தார்.

இவ்வைபவத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் அதிகாரிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கனகரட்ணம், பிரிகேடியர் சுதந்த, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் ஈ.ஏ. சமரசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (சி)

## நாளை

| | | |
|---|---|---|
| புரட்டாதி 17 | | 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : | தசமி பி.ப 12.35 வரை |
| நட்சத்திரம் | : | பூசம் பி.ப. 02.31 வரை |
| சுபநேரம் | : | 09.02-10.32 வரை |
| ராகுகாலம் | : | 04.32-06.02 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு கொக்குவில் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என்று நல்லூர் பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் செ.செல்வகுமாரன் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு சகல சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள்
இன்று(02.10.2010) மு.ப. 10 மணிக்கு
விநியோகிக்கப்படும்.
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்.
ராஜீவ், நாவலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே. 0212222867,
0776090926
(1040/0)


## ஞானசம்பந்தர் கலைமன்ற ஆண்டு விழா இன்று

வடமராட்சி,ஒக்.2

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 48ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்றத் தலைவர் கே.பி. ஆனந்தநடேசன் தலைமையில் புவனேஸ்வரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மீள்எழுச்சித்திட்டப் பணிப்பாளர் வே.விஸ்வலிங்கம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேஸ்வரன், யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி ரேயகராசா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

கலைநிகழ்வில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பா.இரகுவரனின் நெறியாள்கையில் 'கடங்கும் மங்கிடலோ' என்னும் நாடகம் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். (த-236)

## மணிவாசகர் சபையின் பொதுக்கூட்டம்

காரைநகர்,ஒக்.2

காரைநகர் மணிவாசகர் சபையின் எழுபதாவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சபைத் தலைவர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளதால் சைவ அபிமானிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் து.நாகேந்திரன் கேட்டுள்ளார். (த-250)

## கேள்வி அறிவித்தல்

### பருத்தித்துறை நகரசபை

### நவீன சந்தைக் கடைகளை வாடகைக்கு வழங்குதல்

பருத்தித்துறை நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன சந்தையின் கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத் தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் பருத்தித்துறை நகரசபைச் செயலாளரால் கோரப்படுகின்றது. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 03 கடைத் தொகுதிகளுக்கும் தலா ஒவ்வொரு கடைக்கும் ஒரே முறையில் செலுத்தக்கூடிய கேள்விக்கான கேள்விப்படிவத்தை இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன்படி கேள்விப் படிவப் பணம், அதற்கான VAT, NBT வரி,கேள்வி வைப்பு ஆகியவற்றை 19.10.2010 பி.ப. 3 மணிவரை பருத்தித்துறை நகர சபைக் காரியாலயத்தில் செலுத்தி தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இணைப்பிரதிகளில் ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகையைக் குறிப்பிட்டு மூலப்பிரதியை அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிட்டு இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் விவரத்தைக் குறிப்பிட்டு 'செயலாளர், நகர சபை, பருத்தித்துறை' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது நகரசபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ 21.10.2010 நண்பகல் 12 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். மற்றைய பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கும் குறித்த திகதி நேரத்திற்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கேள்விகள் 21.10.2010 பி.ப. 2 மணிக்குத் திறக்கப்படும். இச்சமயத்தில் கேள்விகாரர் சமுகங்கொடுக்கலாம்.

| விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் | VAT 12% | NBT 3% | ஆகக்குறைந்த கேள்வித் தொகை வரிகள் நீங்கலாக ஒரு கடைக்கு |
|---|---|---|---|---|---|
| A தொகுதி கடைகள் 10 | 15,000/- | 1000/ | 120/= | 30/= | 1,000,000/= |
| B தொகுதி கடைகள் 10 | 12,000/ | 1000/= | 120/= | 30/= | 1,000,000/= |
| C தொகுதி கடைகள் 13 | 10,000/ | 1000/= | 120/= | 30/= | 700,000/= |

01) கேள்விக்காரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
02) ஒரு கேள்விப்படிவத்தில் ஒரு கடைத்தொகுதியில் உள்ள ஒரு கடையைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.
03) ஒருவர் 3 கடைத்தொகுதிகளுக்கும் கேள்வி சமர்ப்பிக்க முடியும். ஆனால் சித்திபெற்ற கேள்விதாரர் அவர் விரும்பிய ஒரு கடையை மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.
04) பருத்தித்துறை நகரத்தில் யுத்தகாலத்தில் உடைக்கப்பட்ட சந்தையில் உடைக்கப்பட்ட காலத்தில் கடை வாடகையாளராக இருந்தவர்களும் தற்போதைய மரக்கறிச் சந்தையில் நிலத்தை வாடகைக்குப் பெற்று கடையை அமைத்தவர்களும் இக்கேள்வி சமர்ப்பித்தே கடையைப் பெற்றுக்கொள்ளமுடியும். இவர்கள் தங்களுடைய கேள்விப் படிவத்துடன் முன்னர் கடை வாடகையாளராக இருந்தமைக்கான சான்றுபடுத்தும் ஆவணத்தை இணைத்தல் வேண்டும்.
05) அரச நிறுவனங்களும் கூட்டுத்தாபனங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கு அமைவாக விண்ணப்பிக்கலாம்.
06) A தொகுதி கடைகள் சந்தையின் தெற்குப் பக்க வெளிப்புற கடைகளாகும். இவற்றில் நகைக் கடை, பான்சிக்கடை, கணனி வியாபாரம், தொலைபேசிக்கடை(Phone Shop) புடைவைக்கடை, மருந்து, பால்மா, போன்ற வியாபாரங்களே செய்தல் வேண்டும்.
07) B தொகுதி கடைகள் சந்தை வடக்குப் பக்க உட்புற கடைகளாகும். இக்கடைகளில் பலசரக்கு வியாபாரம் மட்டும் செய்யலாம்.
08) C தொகுதி கடைகள் சந்தையின் தெற்குப்பக்க உட்புறக் கடைகளாகும். இவற்றில் மேற்கூறிய 06ஆம், 07ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய வியாபாரங்களை மேற்கொள்ளலாம்.
09) எந்தவொரு கடைத்தொகுதியிலும் தேநீர் உணவுக்கடை, பழக்கடை, கருவாட்டுக் கடை, சிகை அலங்கரிப்பு நிலையம், வெற்றிலைக்கடை என்பன நடத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.
10) கடைகளுக்கான சித்திகர கேள்விகாரரைத் தெரிவுசெய்வது சம்பந்தமானதும் ஏனைய ஒப்பந்தத்தில் இடம்பெறவுள்ள நிபந்தனைகள் சம்பந்தமாகவும் கடைகளுக்கான மாதாந்த வாடகை சம்பந்தமாகவும் நகரசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம். கேள்விப் படிவத்துடன் இந்நிபந்தனைப் பத்திரமும் வழங்கப்படும். அந்த நிபந்தனைக்கு அமைவாக கேள்வியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
11) எக்கோரிக்கையும் ஏற்றுக்கொள்வோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுள்ளது.
12) ஒரு கடைத்தொகுதியில் ஒரு கடைக்கு செலுத்தக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை(வரி நீங்கலாக) மேற்குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தொகைக்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
13) ஒரே முறையில் செலுத்தப்படும் தொகைக்கு மேலதிகமாக கேள்வித் தொகையின் 12% VAT வரியும் 3% NBT யும் செலுத்துதல் வேண்டும்.

நகர சபை,
பருத்தித்துறை.
30.09.2010 (கி/5/1512)

திரு. அ.நடராசா
செயலாளர்,
நகரசபை, பருத்தித்துறை.


SHAMROCK
ஈச்சமோட்டை,
யாழ்.
A/L கலை,
வர்த்தக,கணித,
விஞ்ஞான
பிரிவுகளுடன்
ஆங்கிலம் G.I.T.
2012 C/Maths
Tue, Thurs, 6 a.m
Sat,Sun 6 p.m
Mr.G.கண்ணன் B.Sc
* Gr.1 முதல் O/L வரை
* Eng Med. 6 to 11
* Eng Lit. to 10,11
சிங்களம் ICT

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
சித்தாரா பொன்னாங்காணித் தைலம்
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228 (C/564561)
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாம வலய கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி தற்போது வடமாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்ற

**திரு.ப.விக்னேஸ்வரன்**

அவர்களைப் பாராட்டி அவர் சேவை மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ஏழாலை புனித இசிதோர்
றோ.க.த.க.பாடசாலை
(சி-571514)

## மனமார்ந்த நன்றிகள்



எமது புதல்வன்,
செல்வன்
சி.கீதப்பிரியசர்மா
(உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்)
2010 புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு பாராட்டியும் அவருக்கு கடந்த 12.09.2010 இல் தென்னிந்தியா சிதம்பரம் சிவஸ்ரீ பரமேஸ்வர தீக்ஷிதர் அவர்களுடைய இல்லத்தில் உபநயன பிரம்மோபதேச விழா நடைபெற்றமைக்கு வாழ்த்துத் தெரிவித்தும் எம்மை மகிழ்வித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய்-சிவம்)
ஸ்ரீமதி சி.விஜயலக்ஷ்மி
இணுவில் மேற்கு, சுன்னாகம்.
(10406)


ஜனஜய லொத்தர்

உத்தியோகபூர்வ முடிவுகள்
வாரம் 164
சீட்டிழுப்புத் திகதி 30.09.2010

வெற்றி இலக்கங்கள்: 09 18 26 57
சுப்பர் இலக்கம்: 06

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,457,590/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 1 இலக்கத்துக்கும் | 61346 | ரூ. 20/= | ரூ. 1,226,920/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏந்த 1 இலக்கத்துக்கும் | 5592 | ரூ. 40/= | ரூ. 223,680/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 2 இலக்கங்களுக்கும் | 4814 | ரூ. 100/= | ரூ. 481,400/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏந்த 2 இலக்கங்களுக்கும் | 437 | ரூ. 200/= | ரூ. 87,400/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 3 இலக்கங்களுக்கும் | 112 | ரூ. 1,500/= | ரூ. 168,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏந்த 3 இலக்கங்களுக்கும் | 5 | ரூ. 3,000/= | ரூ. 15,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | ரூ. |
| சுப்பர் இலக்கத்துடன் ஏந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 5,457,590/= | ரூ. |
| மொத்த எண்ணிக்கை | 72306 | | ரூ. 2,202,400/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,643,650/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, டீ.ஆர். விஜயவர்த்தன மாவத்தை, கொழும்பு
Website: www.dlb.lk


## சேவை நலன் பாராட்டும் அறுபதாம் அகவை வாழ்த்தும்



திருமதி விமலாதேவி ஜெகதீசன்
S.L.T.S.-1
(பகுதித் தலைவர்,
யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை)

எமது பாடசாலையில் 6 வருடங்கள் அரும்பணியாற்றி 35 வருட கல்விச்சேவையால் பெருமையோடு இன்று (2010.10.02) ஓய்வுபெறும் திருமதி விமலாதேவி ஜெகதீசன் (S.L.T.S.-1) அவர்களின் சேவை நலனைப் பாராட்டுவதோடு எல்லாவளமும் பெற்று நீடூழி வாழ எமது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர சபைக்கு இந்தியா வழங்கிய பஸ்கள் நேற்று முதல் போக்குவரத்துச் சேவையில்

கொழும்புத்துறை,ஒக்.2

இலங்கை இந்திய நட்புறவின் அடிப்படையில் இந்திய அரசினால் யாழ். மாநகர சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நான்கு பஸ்களின் போக்குவரத்துச் சேவை நேற்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வு அரியாலை, மாம்பழம் சந்தியில் காலை 7 மணிக்கு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சேவையை ஆரம்பித்து வைத்தார். முதல் பிரயாணச் சிட்டையை மாநகர முதல்வர் பெற்றுக்கொண்டு பயணத்தைத் தொடங்கி வைத்தார். யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட இச்சேவையின் கட்டணமாக மாணவர்களுக்கு ஒரு பயணத்திற்கு 5 ரூபாவும், பொதுமக்களுக்கு ஒரு தரிப்பிலிருந்து அடுத்த தரிப்புக்கு 10 ரூபாவும் யாழ்.நகர் வரை செல்ல 20 ரூபாவும் அறவிடப் படுமெனத் தெரிவிக்கப்பட்டது. இரண்டு மார்க்கங்களில் காலை 6 மணிமுதல் மாலை 4 மணிவரை பஸ்சேவை நடைபெறவுள்ளது.

மாம்பழம் சந்தியில் இருந்து கண்டி வீதி, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி, சுவாமியார் வீதி, கடற்கரை வீதி, மூன்றாம் குறுக்கு வீதி, பிரதான வீதி, இரண்டாம் குறுக்கு வீதி, ஆஸ்பத்திரி வீதி, சிவன் பண்ணை வீதி, காரைநகர் வீதி, நாவலர் வீதி, மாம்பழம் சந்தி வரை ஒரு சேவையும் இடம் பெறும்.

மாம்பழம் சந்தி, கனகரட்ணம் வீதி, ஆடியபாதம் வீதி, சட்டநாதர் வீதி , இராமநாதன் வீதி, சிவப்பிரகாசம் வீதி, காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, ஆசீர்வாதப்பர் வீதி, கனகரட்ணம் வீதி வழியாக மாம்பழம் சந்தி வரையும் மற்றொரு சேவையும் இடம்பெறும். பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோரின் நலன் கருதியே இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது. யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (த-204-15-135)

## யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கொழும்பிலிருந்து பொருள் கொள்வனவு

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொழும்பில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளது.

சங்க வாகனங்கள் மூலம் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு சங்க முகாமையாளர் கே.கவீந்திரதாஸ் ஏற்பாடு செய்துள்ளார்.

இந்தப் பொருள்கள் சங்கக் கிளைகளில் நியாய விலையில் விற்பனை செய்தவற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சங்கக் கிளைகளில் தற்போது போதிய பொருள்கள் இன்றி விற்பனைச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கத்தை நட்டத்தில் இருந்து மீட்டு இலாபகரமாகக் கொண்டு வருவதற்கு சங்கப் பணியாளர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் சங்க முகாமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நவராத்திரி பூசையை முன்னிட்டு அவல், கடலை, சர்க்கரை, பயறு போன்ற பொருள்களும் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன. (த-204-26)

## பழைய பித்தளைக்குத் தட்டுப்பாடு; வார்ப்புத் தொழிலாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

வார்ப்பு வேலைகளுக்குப் பயன்படும் பழைய பித்தளைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் கிலோ 250 ரூபா விற்று வந்த பழைய பித்தளை இப்போது 400 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

விலையேற்றம், தட்டுப்பாடு காரணமாக வார்ப்புத் தொழிலை நம்பியிருக்கும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

பழைய பித்தளைகளை உருக்கி பூட்டு, பிணைச்சல், திறாங்கு மற்றும் ஆலயங்களுக்கு தேவையான பொருள்களை உற்பத்தி செய்வது யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் முயற்சியாகப் பலகாலமாக நடைபெற்று வருகிறது.

உடைந்த பாத்திரங்கள், கழிவுப் பித்தளைப் பொருள்கள் பொதுமக்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படுவதாகவும் வார்ப்புத் தொழிற்சாலை உரிமையாளர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டிலிருந்து பழைய பித்தளை, அலுமினியப் பொருள்கள் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதை தடுத்து நிறுத்தி தொழில் முயற்சிக்கு உதவ வேண்டுமென தொழிலாளர் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (204-135)

## யாழ்.மரக்கூட்டுத்தாபனத்தின் விற்பனைச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

### மரவேலைத் தொழிலாளர் பாதிப்பு

கொழும்புத்துறை,ஒக்.2

யாழ்ப்பாணத்தில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மரவிற்பனை செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அவற்றை மீள ஆரம்பிக்க ஆவன செய்யவேண்டுமென மரவேலைத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

நாட்டின் சீரற்ற சூழ்நிலையைத் தொடர்ந்து குருநகர் அலுப்பாந்தியில் இருந்த அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மர விற்பனை நிலையம் செயலிழந்துள்ளது.

முன்னைய காலங்களில் பாலை, முதிரை, சமண்டலை, தேக்கு, யாவரணை போன்ற காட்டு மரங்கள் ரயில் மற்றும் வாகனங்கள் மூலம் கொண்டுவரப்பட்டு கட்டடத் தேவைகளுக்கென விற்பனை செய்யப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

தற்போது மீள் கட்டுமாணப் பணிகள் துரிதகதியில் நடைபெறுவதால் மரங்கள், பலகைகளுக்கான தேவைகள் அதிகரித்துள்ளதாகத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோத மரக் கடத்தல்கள் அதிகரித்து வருவதையும் அவற்றைப் பொலிஸார் தடுத்து கைப்பற்றி வருவதும் நடைபெறுகிறது.

காட்டு மரங்களுக்கான அதிகரித்த விலையும் தட்டுப்பாடும் ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாக மரவிற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரச மரக்கூட்டுத்தாபனத்தின் மர விற்பனை நிலையங்களை மீளமைத்து விலைக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (204-135)

## வெள்ளத்தில் மூழ்கும் வீதிகள்

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாணத்தில் தற்போது பெய்துவரும் அடைமழையால் பல வீதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் இவ்வீதிகளில் பயனம் செய்யும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த வீதிகளில் நடந்து செல்லும் பாதசாரிகள் மீது வேகமாகப் பயணிக்கும் வாகனங்கள் வெள்ள நீரை தெளிப்பதால் பாதசாரிகளும் பெரும் சிரமப்படுகின்றனர்.

இதேவேளை -

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை மின்சார சபைக் காரியாலயத்தின் முன்னால் உள்ள நடைபாதையிலும் மழைவெள்ளம் தேங்கியுள்ளது. இந்த நடைபாதையால் பயணிப்போர் நடந்து செல்லமுடியாமல் உள்ளதுடன் நடைபாதையைவிட்டு இறங்கி யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலேயே பயணிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

(த-204-322-51)

## தேசிய கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் 4 தினங்கள் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.2

தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் ஓவியக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதிவரை தொடர்ந்து 4 நாள்கள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, தேசியக் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி உபாலி சேதர, வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம் உட்பட பலர் கலந்து கொள்வர். இந்தக் கண்காட்சியில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, வயம்ப ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளின் முகிழ் நிலை ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து தயாரித்த ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

(ஒ-10)



யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டமை தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

நிகழ்வுக்கு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.கனகரட்ணம், அதிபர் அருட் சகோதரி நெவில்ஸ் ஸ்லடிஸ்லஸ், பழைய மாணவிகள் சங்க உப தலைவி வயலற் இம்மானுவேல் ஆகியோர் அழைத்து வரப்படுகின்றனர். (படங்கள்: டிலீப்)

## யாழ்.நகரப் பகுதி உணவகங்களில் மாறுபட்ட விலைகளில் பண்டங்கள்

### நுகர்வோர் விசனம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்.நகரில் உள்ள உணவகங்களில் சிற்றுண்டி வகைகள் இடத்திற்கு இடம் மாறுபட்ட விலை களில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடை, றோல், வாய்ப்பன், கேசரி, கிழங்கு றொட்டி போன்ற பொருள்கள் வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. உணவகங்களில் ஒரு றோல் 15 ரூபா, 20 ரூபா என மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இதேபோன்றுதான் ஏனைய பண்டங்களும் விற்கப்படுகின்றன. இவ்வாறு மாறுபட்ட விலைகளில் தின் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவது குறித்து நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர். இந்தச்சிற்றுண்டி வகைகளுக்குச் சரியான விலைகள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-26)

## 'அறிவூற்றகம்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.2

கலாநிதி வே. யுகபாலசிங்கத்தின் 'அறிவூற்றகம்' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் அதிபர் வண.என்.ஜே.ஞானப்பொன்ராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை யாழ். குருமுதல்வர் வண.பிதா. செ.பி.நேசகுமாரும், வெளியீட்டுரையை வண. கலாநிதி எஸ். ஜெபமோகனும் நிகழ்த்துவர்.

நூலின் அறிமுகவுரையை சென்.ஜோன்ஸ் கல்லூரி ஓய்வு பெற்ற உப அதிபர் ஜே.அமலசீலன் நிகழ்த்துவார். (204-23)

## உறவுச் சங்கமம் நிகழ்வு

கொழும்புத்துறை,ஒக்.2

பிலிப்பைன்ஸ் வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி மன்றத்தின் உறவுச் சங்கமம் நிகழ்வு யாழ். மறைக்கல்வி நடு நிலைய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெரித்தாஸ் வானொலி நிலைய அதிகாரிகள், இணைப்பாளர்கள் கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் யாழ். வெரித்தாஸ் தமிழ்ப் பணி மன்ற உறுப்பினர்கள், நேயர்கள், அபிமானிகளைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204-135)

## குருநகர் மதகு சேதம்; பயணிப்பதில் சிரமம்

கொழும்புத்துறை,ஒக்.2

குருநகர் அண்ணா சிலைச் சந்தியில் உள்ள மதகு நீண்ட நாள்களாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்களும், பாதசாரிகளும் விபத்துக்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

கழிவுநீர் செல்வதில் தடைகள் ஏற்பட்டுப் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு வேளைகளில் கடற்றொழிலுக்குச் சென்றுவரும் தொழிலாளர்களும் போக்குவரத்தில் பல இடர்பாடுகளைள சந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது. (204-135)

## நவக்கிரக ஹோமம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்.அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் வரை நவக்கிரக ஹோமம் நடைபெறவுள்ளது.

இந்த யாகத்தில் அடியார்கள் பங்குபற்றி தத்தம் கிரக தோசங்களுக்கு பரிகாரம் செய்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகம் கேட்டுள்ளது. (204-26)




## அலங்காரப் பொம்மை உற்பத்தி பயிற்சிநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்.வலய முறைசாரக் கல்விப் பிரிவினால் அலங்காரப் பொம்மை உற்பத்தி செய்தல் தொடர்பான பயிற்சிநெறி யாழ். நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இரண்டு மாத காலம் நடைபெறுகின்றது.

மேற்படி பயிற்சி நெறியில் கலந்து பயிற்சியைப் பெற விரும்புபவர்கள் தமது பெயர் விவரங்களை யாழ். வலய முறைசாராப் பிரிவில் பதிவுசெய்துகொள்ளுமாறு யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.(204-317-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவிடப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கை

புங்குடுதீவு, நெடுந்தீவுப் பகுதிகளில் கவனிப்பார் இன்றிக் கைவிடப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்தக் காணிகளில் நெல் விதைப்புச் செய்ய 44 பயனாளிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஆ.ரி. 353, வீ.ஜி 406 ரக நெலினங்கள் வழங்கப்பட உள்ளதாக புங் குடுதீவு கமநல சேவை உத்தியோகத்தர் கள் தெரிவித்தார். (த-07)

## உடுப்பிட்டி மகளிர் பரிசளிப்பு விழா

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வருடாந் தப் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி நேசரத்தினம் ஜோசப் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போதைய வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி ம.குட்டித்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவார். (த-236)

## குடும்பநல மாதுக்களுக்கு தீவகத்தில் மீள்நியமனம்

யாழ். மாவட்டத்தின் தீவகப் பிரதேசங்களிலுள்ள வைத்தி யசாலைகளில் மீள் நியமனம் பெற்றுப் பணிபுரிய விரும்பும் குடும்பநல உத்தியோகத்தர்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு பிராந்தியப் பணிப் பாளர் ஆ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ஒ-16)




**FAIR PHARMA (PVT) LTD**
அயுர்வேத மருந்து உற்பத்தியாளர்கள்

### நெஞ்சுவலியா..?

எங்கள் ஆயுர்வேத மருந்து வகைகள் மூலம் இதய அடைப்புகள் குணமாக்கப்படுகின்றன. பக்கவிளைவுகள் இல்லை. சத்திரசிகிச்சை அவசியமில்லை. மருந்து பாவனையின் 25-50 தினங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சிறந்த மாற்றம் தென்படும்.

கொலஸ்ட்ரோல், புற்றுநோய், தைராயிட் பிரச்சினைகள், மூட்டுவலிகள், நீரழிவுப்புண்கள், இருமல் சளி, ஒற்றைத் தலைவலி, பீனிசம், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்தல் என்பனவற்றுக்கும் எமது மூலிகை மருத்துவம் பெரும் குணமளிக்கின்றது.

**HOTLINE : 0779046757- 011 5558442**

இலவச ஆலோசனைகளுக்கு சந்திக்கவும்

வவுனியா: 03.10.2010
ஆதி மெடிக்கல்ஸ் சென்ரர்,
கொறவப்பொத்தானை வீதி.

பருத்தித்துறை: 04.10.2010
சென்ரல் ஆயுள்வேத டிஷ்பென்சரி
V.M றோட், பருத்தித்துறை.

யாழ்ப்பாணம்: 05.10.2010
கமலா டிஷ்பென்சரி
1207, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

L5 / East Tower / 1C,
World Trade Centre, Colombo 01
A BOI approved & ISO 9001 - 2008
QMS Certified Company



## நவீன Exercise ECG பரிசோதனை

யாழ்.நகரில் முதல் முறையாக பிலிப் நேசிங் ஹோமில் அமெரிக்க தயாரிப்பான இயந்திரத்தின் மூலமான QUINTON TREAD MILL Exercise "ECG Test" இருதய சிகிச்சை நிபுணர்களின் சிபாரிசின் மூலம் நடத்தப்படுகின்றது.

அத்துடன்

(1) இருதய சிகிச்சை நிபுணர்களின் ஆலோசனை
(2) என்பு முறிவு,நெரிவு சிகிச்சை ஆலோசனை
(3) சத்திர சிகிச்சை ஆலோசனை
(4) கர்ப்பிணித்தாய்,பெண் நோயியல் ஆலோசனை
(5) பொது வைத்திய ஆலோசனை என்பன யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களினால் நடத்தப்படுகின்றது.

சுத்தமான,சுகாதாரமான ward வசதிகள்
வெளி நோயாளர் பிரிவு.

இடம்: பிலிப் நேசிங் ஹோம்.
228,பிரதான வீதி,
(யாழ்.சிறைச்சாலை முன்பாக)
யாழ்ப்பாணம். தொ.பே.: 0212224172
பதிவுகளுக்கு முந்துங்கள். (101724)



### வீடு விற்பனைக்கு

ஐந்து அறைகள், Attached Bathroom, kitchen சகல வசதிகளுடன் கொண்ட வீடு, நல்லூர் செட்டித்தெரு, நாவலர் வீதி சந்தியில் 64, மருதடி வீதியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு.



### விற்பனைக்கு

HP Branded Computers.
3.2 GHz (HT), 1 GB DDR II RAM, Combo Drive, 80, GB SATA HD, Laser mouse, keyboard.
17" CRT monitors. Rs. 25000. தொடர்பு : 021 7394470


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 837 திகதி: 30.09.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| K | 03 | 20 | 25 | 37 | 34 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 20,406,876.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 309 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14411 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 201481 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 29888 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**8,086,480.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**20,727,407.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

## சேவைநலன் பாராட்டு



### உயர்திரு கணபதிப்பிள்ளை வடிவேல்

Maths Trained S.L.PS- 1

| | |
|---|---|
| பயிற்றப்படாத ஆசிரியர் | 1973 - 1978 |
| ஆசிரியர் பயிற்சி- பலாலி | 1979- 1981 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் | 1982 - 1984 |
| ஆசிரிய ஆலோசகர் | 1984 - 1989 |
| அதிபர் சேவை | 1990 - 2010 |

அதிபர் திரு.க. வடிவேல் அவர்கள் 37 வருடங்கள் சேவையாற்றி மணிவிழாக்கண்டு ஓய்வுபெறுகிறார் என்பது எல்லோருக்கும் மிகுந்த கவலைதரும் ஒரு விடயமாகும். அவர் சிறந்த முறையில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் வழிநடத்தி தொலைக்காட்சி வசதி, கணனி வசதி, Band வாத்திய இசை முதலியவற்றை அறிமுகப்படுத்தி எல்லோரின் மனத்திலும் நீங்கா இடத்தைப் பிடித்துள்ளார். இவருடைய காலத்தில் கனடாவில் உள்ள செ.இ.ச. பழைய மாணவர் சங்கத்தின் உதவியால் சேகரித்துக்கொடுக்கப்பட்ட பணத்தின் வட்டி மூலம் பரிசளிப்பு விழா மற்றும் தேவைகளுக்கும் பயன்படுத்தி குறுகிய காலத்தில், பெரும் சேவைகளை ஆற்றி உள்ளார் .எனவே அவரின் ஓய்வுக் காலங்களில் அவரும் குடும்பத்தினரும் உடல், உள நலத்தோடு வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி வ.மனோமணி
முன்னாள் ஆசிரியர், யா/ந.கா.வித்தியாலயம்,
முன்னாள் தலைவர், யா/செ இ.க.ப.மா.சங்கம், கனடா.

### சிறந்த செயல் வீரர்

அன்பாலும் நற்பண்பாலும் கல்விச் சமூகத்தை வழிநடத்தும் பணியில் அதிபராக இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி ஓய்வுபெறும் இந் நன்நாளில் சீரும், சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.

### அர்ப்பணிப்பு நிறைந்த அதிபர்

பாடசாலையில் மிகுந்த பற்று வைத்து மாணவர்களின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்தவர். கணித பாடம் போதிப்பதில் வல்லவர். ஓய்வு காலத்தில் குடும்பத்தினருடன் சீரோடும், சிறப்போடும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.

### பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர் திரு.க. வடிவேல் அவர்கள் மணிவிழாக் காணும் நாளில் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். அதேவேளை தனது சேவையை முடித்து ஓய்வுபெறுகிறார் என்றதும் கவலையடைகிறோம் தனதுசேவையை நல்லமுறையில் செயற்படுத்தி பாடசாலை வளர்ச்சி முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவர். இவருடைய முயற்சியால் பாடசாலையில் ஒரு பரிசளிப்பு விழாவையும், மாணவர்களுக்கு தொலைக்காட்சி மூலம் கல்விபுகட்ட ஆவன செய்து தற்போது கணனி மூலம் கல்விபுகட்ட ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளார். இவருடைய அயராத உழைப்பு பாடசாலைக்கு எவ்வளவோ பெருமையைச் சேர்த்துள்ளது. பலவழிகளில் பாடசாலை வளர்ச்சி முன்னேற்றத்திற்காக உதவிய கனடா யா/ செங்குந்தா இ.க.ப.மா. சங்கத்தின் அப்போதைய தலைவி திருமதி வ.மனோன்மணி ஆசிரியை அவர்களின் பேருதவியை இந்நாளில் நினைவுகூருவதுடன் ஓய்வுக்காலத்தில் அதிபர் அவர் தம் குடும்பம் சீரோடும் சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல நல்லநாயகி உடன் உறையும் நல்லநாத சுவாமியின் அருள் கடாச்சம் கிடைக்க வேண்டுமென வேண்டி வாழ்த்துகிறோம்.

பாடசாலை இணைப்பாளர்கள்
சி. அமிர்தலிங்கம், தி.சிறிஸ்கந்தராசா,க. ஏகாம்பரம்


பாடசாலைச் சமூகம் யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.


## நல்லூர் சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX



தீபாவளி கொண்டாட்டம்
ரகங்கள் பலவிதம் தரத்தில் முதலிடம்

### தீபாவளியை முன்னிட்டு
### மாபெரும் மலிவு விற்பனை



| | உண்மையான விலை | தள்ளுபடி விலை |
|---|---|---|
| ★ இந்தியன் சீக்குன்ஸ் சாறி (Full work Saree) | ~~2000~~/= | 1900/= |
| ★ இந்தியன் சில்க் சாறி (Office ware Saree) | ~~950~~/= | 700/= |
| ★ இந்தியன் கொட்டன் சாறி | ~~1950~~/= | 1250/= |
| ★ இந்தியன் கொட்டன்சாறி (Office ware Saree) | ~~2400~~/= | 1750/= |
| ★ இந்தியன் சில்க் கொட்டன் சாறி (Office ware Saree) | ~~1200~~/= | 800/= |
| ★ இந்தியன் டஸ்ற்வேக் சாறி | ~~1850~~/= | 1000/= |
| ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபித்துணி | ~~1200~~/= | 850/= |
| ★ இந்தியன் கில்ற்ரவேக் சாறி | ~~1600~~/= | 1150/= |
| ★ இந்தியன் சில்க் பஞ்சாபித்துணி (Guru Krupa) | ~~1350~~/= | 1000/= |
| ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபித்துணி | ~~1850~~/= | 1350/= |
| ★ இந்தியன் ரெடிமேற் பஞ்சாபி | ~~2900~~/= | 2200/= |
| ★ பாகிஸ்தான் பஞ்சாபித்துணி (லைனிங்-தேவையில்லை) | | 650/= |

மற்றும் திருமணபப்பட்டுசாறிகள், பஞ்சாபிகள், விதவிதமான சாறிகள் என்பன அதிக விலைக்கழிவில் வழங்கப்படும்.

உங்கள் வாழ்வோடு இணைந்தது

தீபாவளியை முன்னிட்டு இன்று முதல் 7 நாள்களும் வியாபாரம்

தெரிவுகளுக்கு இன்றே விரையுங்கள்

தீபாவளியை முன்விட்டு 7நாள்களும் காலை 8மணி முதல் இரவு 8 மணி வரை வியபாரம் நடைபெறும்.

நல்லூர் சரவணா ரெக்ஸ் இல.526, 529 பருத்தித்துறை வீதி,
(நல்லூர் சிவன்கோயிலுக்கு அருகில்) நல்லூர் பின்வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மக்களின் மீள்குடியமர்வுக்கு ஐ.நா அனைத்து வழிகளிலும் உதவி வழங்கும்

## கிளிநொச்சியில் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே

கிளிநொச்சி,ஒக்.2

ஐக்கிய நாடுகள் சபை மக்களின் மீளக்குடியமர்வுக்கு சகல வழிகளிலும் பூரண ஒத்துழைப்பை வழங்கும். இவ்வாறு ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் புனே தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் உப கிளையொன்று அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் திறந்து வைக்கப்பட்ட போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் அபிவிருத்திக்கும் மிதிவெடி அகற்றல் செயற்பாடானது இன்றியமையாததொன்றாகும். ஐ.நா சபை மக்களின் மீளக்குடியமர்வுக்கு சகல வழிகளிலும் பூரண ஒத்துழைப்பை என்றும் வழங்கும். அரசாங்கம் தேசிய மிதிவெடி செயற்பாட்டு நிறுவகம் ஒன்றை அமைத்துச் செயற்படுத்தி வருகின்றது.

இலங்கையில் தற்போது மிதிச்வெடி செயற்பாட்டு நிறுவகத்தின் அவசியம் உணரப்பட்டுள்ளது என்றார் அவர்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உரையாற்றுகையில்;-

உப அலுவலகம் இங்கு திறக்கப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இங்கு இந்த நிறுவகத்தின் தேவைகள் அதிகம் உண்டு. மிதிவெடி அகற்றல் தொடர்பான செயற்பாடுகளை இந்தப் பிரதேசத்தில் இனி வரும் காலங்களில் இலகுவாக முன்னெடுக்கலாம் என்றார்.




வன்னி மாவட்ட கட்டளைத் தளபதியின் பிரதிநிதி கட்டளைத் தளபதியின் செய்தியினை வாசித்தார்.

அதில் கடந்த காலங்களில் யாழ்.மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தின் பணிகள் திறம்பட இருந்தன. அத்துடன் அவர்களின் பூரண ஒத்துழைப்பும் எமக்குக் கிடைத்தது. இனி வரும் காலங்களில் இந்த நிறுவனத்தின் செயற்பாட்டுக்குச் சகல வழிகளிலும் இராணுவத்தினரால் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றார்.

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தின் தலைவர் வ.முருகதாஸ் உரையாற்றுகையில்;

எல்லா நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும். இந்தப் பிரதேச மக்களின் தேவைகள் அதிகம் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றச் சகல நிறுவனங்களும் சேர்ந்து செயற்பட வேண்டும் என்றார் - அவர்.(க-15)

# தூயமணி முன்பள்ளி தனியார் இல்லத்தில்

வட்டக்கச்சி,ஒக்.2

வட்டக்கச்சி சில்வா வீதியில் உள்ள தூயமணி முன்பள்ளி நிரந்தரக் கட்டடம் இருந்தும் தனியார் இல்லம் ஒன்றில் இயங்கி வருவதையிட்டு முன்பள்ளி பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

கரைச்சிப் பிரதேச சபையினரால் நடத்தப்பட்டுவரும் தூயமணி முன்பள்ளியின் கூட்டத்தில் கரைச்சிப் பிரதேச சபையின் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை இயங்கி வருவதாலேயே முன்பள்ளி அருகில் உள்ள தனியார் இல்லம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

இவ் வைத்திய நிலையத்துக்கு வட்டக்கச்சிச் சந்தைக்கருகில் நிரந்தரக் கட்டடம் உண்டு. அங்கு வைத்திய நிலையத்தை இயங்கவைக்காமல் எதற்காக முன்பள்ளிக் கட்டடத்தில் இயங்க வைக்கவேண்டும். பிள்ளைகளின் கல்வியை மழுங்கடிக்கவா எனப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தலையிட்டுமுன் பள்ளியை மீளவும் சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றனர். (க-450)

# இலங்கையின் கரையோரங்களைச் சுற்றி ஓடிவரும் பிரதீப் சமன் உதுகமசூரிய மன்னார் வந்தடைந்தார்

## 40 நாள்களில் ஓடிமுடிப்பதே இவரது இலக்கு

மன்னார்,ஒக்.2

இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஓடிச் சுற்றிவரும் சாதனை முயற்சியினை ஆரம்பித்திருக்கும் பிரதீப் சமன் உதுகம சூரிய என்பவர் நேற்று முன் தினம் மாலை மன்னார் கடற்கரையை வந்தடைந்திருக்கிறார்.

எல்பிட்டிய ராஜமகா விகார மாவத்தையைச் சேர்ந்த 39 வயதுடைய பிரதீப் சமன் உதுகம சூரிய என்பவரே இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஓடிச் சுற்றி வரும் சாதனை முயற்சியை ஆரம்பித்திருக்கின்றார். இவர் 40 நாள் களில் தனது முயற்சியை நிறைவு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளார்.

இவர் மன்னாரை வந்தடைந்திருக்கும் நிலையில் மாவட்டத்தின் சார்பில் வரவேற்பும், பாராட்டும் இடம்பெற்றிருக்கின்றன. மன்னார் நுழைவாயிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஜப்பான் - மன்னார் சமாதான பாலத்தடியில் மன்னார் அரச அதிபர் அ.நிக்கலஸ்பிள்ளை, பிரதேச செயலாளர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் இவருக்கு மாலை அணிவித்து வரவேற்றனர்.

இதன்போது இலங்கையின் வரைபடத்தில் மன்னார் மாவட்டம் அமைந்திருக்கும் பகுதியில் மன்னார் அரச அதிபர் சாதனை முயற்சியாளர் கரையோர மார்க்கமாக மன்னாரை வந்தடைந்தார் என்பதற்கான தமது கையொப்பத்தை இட்டார்.

1971 ஆம் ஆண்டு பிறந்த உதுகமசூரிய கடந்த மாதம் இரண்டாம் திகதி காலை ஆறு மணியளவில் விளையாட்டுத் துறை அமைச்சின் ஆதரவுடனும், ஜனாதிபதியின் ஆசீர்வாதத்துடனும் காலி முகத்திடலில் இருந்து தேசியக் கொடியை கையில் ஏந்தியவாறு தனது ஓட் டத்தை ஆரம்பித்தார். இவர் இலங்கையின் கரையோரப் பகுதிகளான மட்டக்களப்பு, திருமலை,முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் என தமது ஓட்டத்தைத் தொடர்ந்து 29 ஆவது நாளாகிய நேற்று மாலை மன்னாரை வந்தடைந்தார்.

மன்னார் நகர இராணுவ பொறுப்பதிகாரி, பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள்,ஏராளமான பொது மக்கள் எனப்பலர் கூடியிருந்து இவரின் சாதனை முயற்சிக்கு உற்சா கத்தை வழங்கினர்.

இதன் பின்னர் உதுகமசூரிய மன்னார் தீவின் தென்பகுதி கரையோரத்தை அடையும் பொருட்டு கடலில் இறங்கி நீச்சல் மூலம் தமது பயணத்தை தொடர்ந்தார். (க-80)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பயிரிடப்படாத நிலங்கள் விவசாயிகளுக்கு

## வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

கிளிநொச்சி,ஒக்.2

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பெரும் போகப் பயிர்ச்செய்கையை விவசாயிகள் உடனே ஆரம்பிக்க வேண்டு மென வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ். பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இவ்வாறு பயிர்ச்செய்கையை இவர்கள் ஆரம்பிக்காது விட்டால் அந்தக் காணிகள் அப்பகுதியைச் சேர்ந்த ஏனைய விவசாயிகளுக்குப் பயிர்ச்செய்கைக்காகப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் அறிவித்துள்ளவை வருமாறு;

வடமாகாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து ஒரு லட்சத்து 8 ஆயிரம் ஏக்கர் பயிர்ச் செய்கைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 ஆயிரம் ஏக்கரிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 48 ஆயிரத்து 620 ஏக்கரிலும் பயிர்ச் செய்கைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு விதைநெல் இலவசமாகவும், நிலத்தைப் பண்படுத்துவதற்கான கூலியாக 2 ஏக்கர் என்ற அடிப்படையில் 4 ஆயிரம் ரூபாவும் விவசாய அமைச்சினால் வழங்கப்படவுள்ளன.

இத்தகைய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உடனடியாகப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள வேண்டும்.

இல்லையெனில் அந்தக் காணிகள் அப்பகுதியைச் சேர்ந்த ஏனைய விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைக்காகப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# முல்லைத்தீவு,வவுனியா மாவட்டங்களில் இறால் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி

முல்லைத்தீவு,ஒக்.2

முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இறால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு கடற்றொழில் நீரியல் வள அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

வடபகுதியில் நன்நீர் இறால் வளர்ப்பை அதிகரிக்கும் முகமாக வவுனியாவிலுள்ள வவுனியாக்குளம், பாவற்குளம் மற்றும் அக்கராயன்குளம் ஆகிய ஐந்து குளங்களில் இறால் குஞ்சுகளை புதிதாக விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக 12 மீன்பிடித்துறை அமைப்புக்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் இதன் பிரகாரம் சுமார் 2 லட்சம் இறால் குஞ்சுகளை விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-16)

# கரைச்சிப் பிரதேசசபைக்கு புதிய செயலாளர் நியமனம்

கிளிநொச்சி,ஒக்.2

கரைச்சிப் பிரதேச சபைக்குப் புதிதாக செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதாக சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் தெரிவித்துள்ளார்.

இதுவரை முரசுமோட்டை உப அலுவலகத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திருமதி அருட்சோதி மோகனசுந்தரம் என்பவரே கடந்த 23 ஆம் திகதி முதல் கரைச்சிப் பிரதேச சபைக்கு செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் உள்ளூராட்சிச் சேவையில் நீண்ட காலம் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (க-440)

# விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயன்முறைப் பட்டறை நாளை

கிளிநொச்சி,ஒக்.2

விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயன்முறைப் பட்டறையொன்று நாளைய தினம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புக்களில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கும் செயன்முறைப்பட்டறையே இதுவாகும்.

இதில் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களும், உயர்தர வகுப்புக்களில் இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் பங்கு பற்றலாம் என கிளிநொச்சி கல்வி வலயப் பணிப்பாளர் த.குருகுலராசா அறிவித்துள்ளார்.(க-405)

# விசுவமடு கிழக்கில் மீளக்குடியமர மேலும் 290 குடும்பங்களுக்கு அனுமதி

கிளிநொச்சி,ஒக்.2

புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு கிழக்கு கிராம அலுவலர் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை இந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

290 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீளக் குடியமர்வதற்கு தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை, மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 243 குடும்பங்களைச் சேர்ந்த 795 அங்கத்தவர்கள் கடந்த 29 ஆம் திகதி விசுவமடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-14)

# இரணைமடு வாய்க்கால்களில் புனரமைப்பு வேலைகள்

கிளிநொச்சி,ஒக்.2

இரணைமடுக் குளத்தின் பிரதான வாய்க்கால்களில் புனரமைப்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெறு வதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இரணைமடுக் குளத்திலிருந்து கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு நீர் விநியோகம் செய்யும் பிரதான வாய்க்காலில் கோவிந்தன் கடைச் சந்திக்கு அருகில் இடிந்து காணப்பட்ட மதகுகள் அனைத்தும் நீர் விநியோகத்துக்குரிய மாற்றுப் பாதைகள் ஒழுங்கு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தவேலைகள் மாரி காலத் துக்கு முன்பு பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் இதன் மூலம் அனேக சிறிய வாய்க்கால்களும், மதகுகளும் வெள்ளம் பாய்ந்து உடைப் பெடுக்காமல் பாதுகாக்கப்படுவதோடு நீர்விநியோகமும் சீராக அமையுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-440)



யாழ்.மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தின் உப அலுவலகம் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந் தினராகக் கலந்து கொண்ட ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே, கிளிநொச்சி மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் பிரதிநிதி ஆகியோருடன் மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலக உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதை அடுத்த படத்தில் காணலாம்.

*(படங்கள்:-டிலீப்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணிப் பிரதேசத்தில் நெல் விதைப்பு தீவிரம்

தென்மராட்சி கிழக்கு,ஒக்.2

வரணிப் பிரதேசத்தில் விவசாயிகள் தற்சமயம் நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளதைப் பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது.

உரிய மழையை எதிர்பார்த்த விவசாயிகள் மழை பெய்யத் தவறியதை அடுத்து தமது விளை நிலங்களில் புளுதி விதைப்பில் ஈடுபட்டுள்ளனர்-இம்முறை மழை பரவலாக எல்லா இடங்களிலும் பெய்யவில்லை எனினும் மழையை எதிர்பார்த்து நிற்காமல் மேற்படி புளுதி விதைப்பில் அவர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-122)


## கரைச்சிப் பிரதேசசபை - கிளிநொச்சி
## இறைச்சிக் கடைக்கான கேள்வி அறிவித்தல்

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கீழ்வரும் பொதுச் சந்தைகளில் உள்ள இறைச்சிக் கடைகள் 08.10.2010ஆம் திகதி தொடக்கம் 31.12.2010 வரை முத்திரையிடப்பட்ட கேள்வி மூலம் குத்தகைக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் 01.10.2010 தொடக்கம் 06.10.2010ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கரைச்சிப் பிரதேச சபை தலைமையகத்தில் கிடைக்கக் கூடியவாறு அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் நேரடியாக இடுவதன்மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களை பத்திரப்பணமாக 250.00ம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக 5000.00ம் செலுத்தி கரைச்சிப் பிரதேசசபை அலுவலகத்தில் அலுவலக நாளில் 06.10.2010ஆம் திகதி 10 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**சந்தைகளும் வழங்கப்பட உள்ள இறைச்சிக் குத்தகைகளும்**

| மாட்டிறைச்சிக்கடை | ஆரம்பக் கேள்வித் தொகை |
|---|---|
| 1.பரந்தன் | 65 000.00 |
| 2.முரசுமோட்டை | 50 000.00 |
| 3.கண்டாவளை | 50 000.00 |
| 4.தர்மபுரம் | 60 000.00 |
| 5.கல்லாறு | 40 000.00 |
| 6.புன்னை நீராவி | 65 000.00 |
| 7.இராமநாதபுரம் | 50 000.00 |
| 8.வட்டக்கச்சி | 65 000.00 |
| 9.இரணைமடுச்சந்தி | 40 000.00 |
| 10.உருத்திரபுரம்D 8 | 40 000.00 |
| 11.உருத்திரபுரம் D 10 | 40 000.00 |
| 12.ஜெயந்திநகர் | 40 000.00 |
| 13.ஸ்கந்தபுரம் | 40 000.00 |
| 14.அம்பலப்பெருமாள் சந்தி | 40 000.00 |
| 15.கோணாவில் | 40 000.00 |
| 16.வன்னேரி | 40 000.00 |
| 17.கிளிநொச்சி இல-01 | 175 000.00 |
| 18.கிளிநொச்சி இல-02 | 150 000.00 |

| ஆட்டிறைச்சிக்கடை | |
|---|---|
| 1.பரந்தன் | 25 000.00 |
| 2.முரசுமோட்டை | 25 000.00 |
| 3.கண்டாவளை | 25 000.00 |
| 4.தர்மபுரம் | 25 000.00 |
| 5.கல்லாறு | 20 000.00 |
| 6.புன்னை நீராவி | 30 000.00 |
| 7.இராமநாதபுரம் | 25 000.00 |
| 8.வட்டக்கச்சி | 25 000.00 |
| 9.இரணைமடுச்சந்தி | 20 000.00 |
| 10.உருத்திரபுரம்D 8 | 25 000.00 |
| 11.உருத்திரபுரம் D 10 | 25 000.00 |
| 12.ஜெயந்திநகர் | 20 000.00 |
| 13.ஸ்கந்தபுரம் | 20 000.00 |
| 14.அம்பலப்பெருமாள் சந்தி | 20 000.00 |
| 15.கோணாவில் | 20 000.00 |
| 16.வன்னேரி | 20 000.00 |
| 17.கிளிநொச்சி இல-01 | 75 000.00 |

| கோழி இறைச்சிக்கடை | |
|---|---|
| 1.பரந்தன் | 30 000.00 |
| 2.முரசுமோட்டை | 25 000.00 |
| 3.கண்டாவளை | 25 000.00 |
| 4.தர்மபுரம் | 30 000.00 |
| 5.கல்லாறு | 20 000.00 |
| 6.புன்னை நீராவி | 30 000.00 |
| 7.இராமநாதபுரம் | 30 000.00 |
| 8.வட்டக்கச்சி | 30 000.00 |
| 9.இரணைமடுச்சந்தி | 20 000.00 |
| 10.உருத்திரபுரம்D 8 | 20 000.00 |
| 11.உருத்திரபுரம் D 10 | 20 000.00 |
| 12.ஜெயந்திநகர் | 20 000.00 |
| 13.ஸ்கந்தபுரம் | 20 000.00 |
| 14.அம்பலப்பெருமாள் சந்தி | 20 000.00 |
| 15.கோணாவில் | 20 000.00 |
| 16.வன்னேரி | 20 000.00 |
| 17.கிளிநொச்சி இல-01 | 50 000.00 |

**நிபந்தனைகள்:-**

1. விற்பனை செய்யப்படும் நிலையம் சித்தி பெற்றவராலேயே அமைக்கப்படுதல் வேண்டும்.
2. சுகாதார, சுற்றாடல் சூழல் பாதுகாப்புச் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப விற்பனை நிலையம் அமைக்கப்பட வேண்டும்.
3. சித்திகர கேள்விக்காரர் உடனடியாக முழுப்பணத்தையும் கட்ட வேண்டும். தவறின் இரண்டாவது சித்திபெற்ற கேள்விக்காரருக்கு உடன் வழங்கப்படும். கேள்வி கூறும்போது உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாணம் அவர்களின் பிரதிநிதி முன்னிலையில் கேள்வி திறக்கப்படும்.
4. ஏற்கனவே தவறுநர் பட்டியலில் இடம்பெற்றோர் இக் கேள்வியில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பொன்.நித்தியானந்தன்**
சிறப்பு ஆணையாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி/571493)


## அச்சுவேலி மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.2

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் கல்லூரி அதிபர் வி.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கிழக்கு மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.தியாகேந்திரன் கலந்துகொள்வார். விசேட விருந்தினர்களாக சிரேஷ் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.ரவிந்திரதாஸ், கொமர்ஷல் வங்கியின் அச்சுவேலிக்கிளை முகாமையாளர் கே.விவேகானந்தராஜா ஆகியோர் கலந்துகொள்வர். பரிசில்களை திருமதி சிவானந்தி தியாகேந்திரன் வழங்குவார்.

(த-23)


## 4ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவுகள்

அமரர் செல்லத்துரை
தாமோதரம்பிள்ளை



மண்மடியில் 25.12.1938
கண்மூடியது 15.10.2006

திதி: அபரபக்க நவமி (02.10.2010)

மாண்டு நீர் போயே மானிலம் வெறுமையாகி
ஆண்டுகள் நான்கும் ஆனதோ ஐயா!
நீண்டுடும் வாழ்விலே நிலைத்திடும் ஐயா!
பூண்ட நின் உறவும் நினைவும் பூதலம் எங்கும் வாழும்.

(103967)

குடியிருப்பு,
முத்துமாரி கோவிலடி,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

உங்கள் நினைவுகளுடன்
வாழும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்
## அப்பாப்பிள்ளை பொன்னுத்துரை



103,(39), இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை பொன்னுத்துரை 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), பவளதேவி (யாழ்ப்பாணம்), பத்மநாதன் (பிரான்ஸ்), விஜியகாந்தன் (பிரான்ஸ்), சந்திரகாந்தன் (பிரான்ஸ்), சரோஜினிதேவி (பிரான்ஸ்), சிறீகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாநிதி (உப அதிபர், யாழ்.மங்கையற்கரசி வித்தியாலயம்), சண்முகநாதன் (யாழ்ப்பாணம்), செல்வலஷ்மி (பிரான்ஸ்), செல்வமலர் (பிரான்ஸ்), பிறேமளாதேவி (பிரான்ஸ்), மிதிலைஜெயன் (பிரான்ஸ்), அருந்ததி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10 மணிக்கு கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

103,(39),
இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பவளதேவி-இலங்கை -தொ.பே:- 0212229254
மிதிலை ஜெயன் (பிரான்ஸ்)-0033607545929
க.மேனகா (லண்டன்)-00442088665152
விஜியகாந்தன் (பிரான்ஸ்)-0033164114615
பத்மநாதன் (பிரான்ஸ்)-0033160607491
சிறிகாந்தன் (பிரான்ஸ்)-0033160601680
சந்திரகாந்தன் (பிரான்ஸ்)-0033662068809

(103989)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 2 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கரில் இம்முறை பெரும்போக நெற்செய்கை

## மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.2

வடமாகாணத்தில் இம்முறை 2 லட்சத்து 47 ஆயிரத்து 767 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால் 2 லட்சத்து 34 ஆயிரத்து 641 மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமாகாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் முடங்கியிருந்த ஒரு லட்சத்து 8 ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கை நிலங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் 980 ஏக்கரிலும், வவுனியாவில் 15 ஆயிரம் ஏக்கரிலும், மன்னாரில் 19 ஆயிரத்து 600 ஏக்கரிலும், முல்லைத்தீவுப் பகுதியில் 24 ஆயிரம் ஏக்கரிலும் கிளிநொச்சியில் 48 ஆயிரத்து 620 ஏக்கரிலும் மேலதிகமாக பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள ஒரு லட்சத்து 8 ஆயிரம் ஏக்கரில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக விதை நெல்லும், விவசாய நிலத்தைப் பண்படுத்துவதற்கு 2 ஏக்கர் அடிப்படையில் 4 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடம் ஒரு லட்சத்து 24 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் கடந்த வருடத்தை விட இம்முறை கூடியளவான ஏக்கர் காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளவுள்ளதால் 2 லட்சத்து 34 ஆயிரத்து 641 மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார் அவர். (த-201-9)

# யுத்தத்தில் பெற்றோரை இழந்த மாணவருக்குக் கற்றல் உபகரணங்கள்



வலி.வடக்கு,ஒக்.2

கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த 20 பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள், பால்மா பைக்கற்றுக்கள் மற்றும் குடைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

அமரர் அ.மகிழம்மா ஞாபகார்த்தமாக இந்த உபகரணங்களை அவருடைய மகன் அ.செல்வராசா உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து வழங்கியுள்ளார்.

இத்துடன் மேலும் ஒரு வயது நிரம்பிய ஐந்து பிள்ளைகளுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் வங்கி யில் வைப்புச் செய்து வங்கிப் புத்தகம் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-86)

## முதியோர் இல்லத்துக்கு 15 மில்லியன் நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஒக்.2

கைதடி முதியோர் இல்லத்தின் புனரமைப்புப் பணிகளுக்காகப் 15 மில்லியன் ரூபா நிதியை சமூக சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளதாகக் கைதடி சாந்தி நிலைய அத்தியட்சகர் என்.இராசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் தனித்தனியாக 4 விடுதிகள் புதிதாக அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறியுள்ளார். (201-313)




## "மகுடி" புகழ் நாதஸ்வர மேதை மறைந்தார்



யாழ்ப்பாணம்,ஒக்.2

'மகுடி' புகழ் நாதஸ்வர மேதை எம். எஸ். சண்முகநாதன் கடந்த 27 ஆம் திகதி லண்டனில் காலமானார். இறக்கும் போது அவருக்கு 83 வயது.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இவர் மாவைக்கந்தன் ஆலயத்தில் நீண்டகாலம் தேவஸ்தானக் கலைஞராகச் சேவையாற்றியுள்ளார்.

மாவிட்டபுரம் எஸ். இராசாவின் சிஷ்யனாக இருந்து பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து நாதஸ்வரத்தில் மகுடி இசைத்து ரசிகர்களைக் கவர்ந்தவர்.

இறுதிக் காலத்தில் சுகயீனமடைந்து லண்டனில் தங்கியிருந்த அவர் அங்கு மரணமானார். (ஐ)

# கைவிடப்பட்ட காணிகளில் நெற்செய்கை; பி. செயலக ரீதியாக விதை நெல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்.மாவட்டத்தில், கைவிடப்பட்ட நெற்காணிகளில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் தமக்குரிய விதை நெல்லை பெற்றுக் கொள்ளுமாறு விவசாயத் திணைக்கள பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் அறிவித்துள்ளார்.

உணவு விவசாய ஸ்தாபனத்தால் விவசாயத் திணைக்களம் ஊடாக இவ்விதை நெல் நேற்று வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்பட்டு வருகின்றது. எனவே பதிவை மேற்கொண்ட விவசாயிகள் பின்வரும் இடங்களில் பொலிசாருடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதன் பிரகாரம் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு வல்லிபுரம் குறிச்சிக் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும்-

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு புங்குடுதீவு வி.போ.அலுவலகத்திலும்-

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு மண்டைதீவு கிராம உத்தியோகத்தர் அலுவலகம், வேலணை வி.போ. அலுவலகத்திலும் வழங்கப்பட்டன.

அதேவேளை மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு இன்று முற்பகல் 10 மணிக்கு மருதங்கேணி கிராம உத்தியோகத்தர் அலுவலத்தில் வைத்து விதைநெல் வழங்கப்படும். (ஒ-16)

# புங்குடுதீவில் பாழடைந்த பகுதிகளை சுத்திகரிக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.2

புங்குடுதீவில் குடியிருப்பாளர்கள் இன்றிக் கைவிடப்பட்ட வீடுகள், மலசல கூடங்கள், காணிகளில் காணப்படும் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்வதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு உயரதிகாரிகளிடம் அங்குள்ள மக்கள் கோரியுள்ளனர்.

பாழடைந்து கிடக்கும் வீடுகள், உடைந்த நிலையில் காணப்படும் மலசலகூடங்கள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்கி நிற்பதன் மூலம் டெங்கு நுளம்புப் பெருக்கம் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கவுள்ளது.

எனவே இவற்றைத் தகுந்த முறையில் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகப் புங்குடுதீவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கடம்பகுமார் தெரிவித்தார். (201-7)

# வசாவிளான் மகா வித்தியாலயத்துக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.2

இருபது வருடங்களின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை சொந்த இடத்தில் மீள இயங்க ஆரம்பித்துள்ள வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி உதவிகள் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலையின் ஒரு கட்டடத்தைத் தவிர ஏனைய கட்டடங்கள் அனைத்தும் சேதமடைந்த நிலையில் உள்ளன. இருப்பினும் பாடசாலை சொந்த இடத்தில் இயங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இப்பாடசாலை முன்னர் இயங்கியதைப் போன்று சிறப்பாக இயங்க சகல உதவிகளும் செய்து கொடுக்கப்படும்.

மேலும் இப்பாடசாலைக்கான கற்றல், கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள், கணனிகள், இலவசப் பாடநூல்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருள்கள் என்பவற்றை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதியும் ஏற்படுத்தித் தரப்படும் எனவும் அவர் கூறினார். (201-15)




'லங்கா ஷெல் காஸ்' நிறுவனத்தின் கிளை நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் பிராந்திய பொது முகாமையாளர் எஸ்.பத்மநாதன், பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா ஆகியோர் புதிய கிளை நிலையத்தைத் திறந்து வைப்பதையும்-

'லங்கா ஷெல் காஸ்' நிறுவனத்தின் பிரதேச விற்பனை முகாமையாளர் சுசந்த பெர்னாண்டோ மங்கள விளக் கேற்றி வியாபார நடவடிக்கைகளைஆரம்பித்து வைப்பதையும் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டு சங்கானை மயானம் புதுப்பொலிவு



யாழ்ப்பாணம்,ஒக்.2

வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை கரைச்சி மயானத்தில் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இதன் மூலம் டெங்கு அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய 134 சுமைத் திண்மக் கழிவுகள் 'பைக்கோ' இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு நிலத்தில் புதைக்கப்பட்டுள் ளன.

அத்துடன் சங்கானை கரைச்சி மயானப்பகுதி தூய பிரதேசமாக பிரதேசசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணியினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக சங்கானை கரைச்சி மயா னம் கழிவுகளின் நிலைக்களனாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது டெங்கு அபாயம் குறித்து இடம் பெற்று வரும் துப்புரவாக்கும் செயற்பாட் டினால் மேற்படி பிரதேசம் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இதேவேளை- தற்போது 12 லட்சம் ரூபா செலவில் கரைச்சி மயானத்தைச் சுற்றி மதில் அமைத்துப் பாதுகாக்கவும் அங்கு பொது மக்களின் போக்குவரத்திற்காக இலகுவான தார்ப்பாதை அமைப்பதற்கும் உரிய திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பகுதியில் திண்மக் கழிவுகள் கொட்டப்படுவது தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-302)

# நிதிவளமற்ற நிலையிலும் வளர்ச்சியடைந்து பொன்விழாக் காண்கிறது குணபாலன் வித்தி

## வணிக முகாமைத்துவ பீடாதிபதி உரை

யாழ்ப்பாணம்,ஒக்.2

பாடசாலை சிறியதாக இருந்தாலும் நாட்டின் பல முக்கிய பிரமுகர்களின் கால்களும் இப்பாடசாலையில் பதிக்கப்பட்டுள்ளதை பொன்விழா மலர் பறைசாற்றி நிற்கின்றது. நிதிவளம் குன்றிய பாடசாலையாக இருந்தாலும் கூட தமது வளத்தை முழுமையாகப் பயன்படுத்தி மிகவும் சிறந்ததொரு பொன்விழா மலரை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலய பொன்விழா நிகழ்வுகள் அதிபர் ஏ. தவராசலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பொன்விழா மலரினை வெளியிட்டு ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் தனதுரையில் கூறியவை வருமாறு:

எமது முன்னோர்கள் கூறுவார்கள் நல்ல நிகழ்வுகள் நடைபெறும் போது மழை வருவது நல்ல சகுனம் என்று. அந்த வகையில் இன்று புதிய திறந்தவெளி அரங்கு திறந்து, பொன்விழா மலரினை வெளியிட்டு மகிழும் நிலையில் மழை பெய்வது இப்பாடசாலை எதிர்காலத்தில் மேலும் புகழுடன் வளர்ச்சி அடைய வாய்ப்புள்ளது.

1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை ஒரு வருட காலத்திலேயே அரசினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது- என்றார்.

வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் உரையாற்றும் போது:

இன்றைய நிலையில் தமிழ் மக்கள் இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகிக் காணப்படுகின்றார்கள். கடந்த கால யுத்தத்தின் போது இழந்த வாழ்க்கையை மீண்டும் பெற வேண்டும்.

மறுபுறத்தே நவகாலணித்துவ உலக செயற்பாட்டின் கீழ் சர்வதேச மயமாக்கலுக்குட்பட்டு எமது கலை, கலாசார விழுமியங்களைத் தொலைத்து விடாமல் எமது வாழ்க்கையை மீட்டெடுக்க வேண்டியவர்களாகக் காணப்படுவதாக அவர் கூறினார். (201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிம்சை குறித்த காந்தியின் அடிப்படைச் சிந்தனைகள்

இன்று மகாத்மா காந்தியின் 141ஆவது பிறந்த தினம். சமகால இந்திய மெய்யியலின் முன்னோடிகளில் ஒருவராகவும், ஆன்மீகவாதியாகவும் இருந்தவர். அகிம்சையினை ஆயுதமாகக் கொண்டு இந்திய தேசத்துக்கு அந்நிய ஆதிக்க சக்திகளிடம் இருந்து விடுதலை பெற்றுக்கொடுத்தவர்.இதனால் இந்திய தேசத்தின் தந்தை எனவும் மகாத்மா எனவும் போற்றப்படுகிறார் மோகனதாஸ் காந்தி. இன்றைய தினமானது இந்தியாவின் தேசிய விடுமுறையாகக் கொண்டாடப்படும் அதேவேளை உலகம் முழுவதும் சர்வதேச வன்முறையற்ற தினம் அல்லது அகிம்சை தினம் எனவும் கொண்டாடப்படுகின்றது.


இத்தினமானது ஐக்கிய நாடுகள் சபையினால் 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி முதல் பிரகடனப்படுத்தப்பட்டது. எனவே இன்றைய புனித நாளில் காந்தியினுடைய அகிம்சை குறித்த சிந்தனைகளினைப் புரிந்து கொள்வது இன்றியமையாதது. காந்தி அகிம்சையின் ஊடாகவே இந்திய விடுதலையைப் பெற்றதோடு மக்களினுடைய மனங்களிலே ஒழுக்க விழுமியங்கள், சத்தியம், உண்மை, மனித வாழ்வின் அர்த்தங்கள் போன்ற பல்வேறுபட்ட பண்புகளையும் விதைத்துள்ளார்.

இன்று உலகம் வன்முறையின் பிடிக்குள் அகப்பட்டுள்ளது. ஒவ்வொருவரினதும் சிறு செயல்கள்கூட வன்முறையினைத் தூண்டிவிடுவதாக மாறிவிட்டது. தமது உரிமைகளினை நிலை நாட்டிக் கொள்வதற்காக அடுத்தவரின் உயிரைப் பறிக்குமளவுக்கு இன்றைய மனிதர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன. தம்மை அழித்து மற்றவர்களை வாழவைத்தல், தனக்காக வாழாது பிறர்க்காக வாழுதல் எனும் நிலைப்பாடு அற்றுப்போய் தான் வாழ்வதற்கு மற்றவர்களை அழித்தல் எனும் நிலையை நோக்கி இன்றைய மனிதர்கள் அனைவருமே தள்ளப்பட்டுள்ளனர். இன்று வன்முறையே உலகின் அபாயமாகவும் சவாலாகவும் விளங்குகின்றது. இந்த நிலையில் இருந்து விடுபடுவதற்கு தார்மீக நெறியாகக் காணப்படுவது அகிம்சை நெறி மட்டுமே ஆகும்.

ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர நல்லெண்ணத்துடன் வாழ்வதற்கு அகிம்சையைக் காட்டிலும் உறுதியான அடிப்படை வேறு எதுவும் இல்லை. நமது நாட்டின் எதிர்காலம் இனிவரவிருக்கும் புதிய பரம்பரையினைப் பொறுத்துத்தான் அமையவிருக்கின்றது. இப் புதிய பரம்பரை அகிம்சையினால் கவரப்பட்டு அவ்வழியில் உறுதியாக நின்றால்தான் நன்மை விளையும்.

எனவே மக்களிடையே அகிம்சை பற்றிய சிந்தனைகளினைத் தெளிவுபடுத்தி அதனூடாக மக்களுடைய ஒழுக்கவியல் சிந்தனைகளை மேம்படுத்தி மனித நேயத்தினைக் கட்டிவளர்த்து ஒரு நிலையான, நீதியான அரசியல் ஜனநாயகத்தினை உருவாக்கி இந்த நாட்டில் மட்டுமன்றி உலகிலுமே ஓர் அமைதியினை, சமாதனத்தினை உருவாக்க அனைவரும் முயலவேண்டும்.

காந்தி தனது காலத்துக்கு முற்பட்ட அகிம்சை குறித்த கருத்துக்களினை உள்வாங்கி



தனது சிந்தனையின் ஊடாக செயல்வடிவம் கொடுத்திருந்தார். இந்தியப் பண்பாடு, இந்து. பௌத்த, இஸ்லாமிய மதங்களின் கருத்துக்கள், பகவக்கீதை, விவிலிய நூபயில் காணப்படும் மலையில் இருந்து இயேசு கிறிஸ்து வழங்கிய பொன்மொழிகள், ஸ்பென்ஸர் வால்டெனின் சகிப்புத்தன்மை என்ற நூலும் தென்னாபிரிக்க சிறையில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், பல்மொழிப் பாண்டித்தியம் என்பன இவரை அகிம்சா மூர்த்தியாக உலகிற்கு அறிமுகப்படுத்தியது. ஜைனர்களினைப் போல நடைமுறைக்கு ஒவ்வாத கருத்தியலினை அகிம்சை குறித்து காந்தி கொண்டிருக்கவில்லை. தனிமனிதராக வாழ்வோரும் சமூக வாழ்வோடு இசைந்து போகக்கூடிய ஒன்றாகவே அகிம்சையினை வடிவமைத்துக் கொண்டார்.

எல்லா வகையான குணநலக்கேடு களும் ஒடுங்கிய நிலையே அகிம்சா தர்மம் ஆகும். எந்த உயிரினையும் கொல்லாது எந்த உயிரினத்துக்கும் தீங்கு விளைவிக்காது மனதாலும் சொல்லாலும் செயலாலும் பிறருக்கோ அல்லது பிற உயிரினங்களுக்கோ வருத்தமோ, வேதனையோ நேராமல் நடந்து கொள்வது அகிம்சை எனப் பொதுவாக வரையறுக்கலாம். அகிம்சையின் பிரதான பண்புகளாக கொல்லாமை, துன்புறுத்தாமை, பொய் சொல்லாமை, தீமை செய்யாமை என்பவனவற்றினையும் அநீதி, ஏற்றத்தாழ்வு, சுரண்டல் முதலியவற்றினைத் தவிர்த்தல், அன்பு, அருள், இரக்கம், தொண்டு, இன்சொல் பேசுதல் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

அகிம்சை குறித்து காந்தி கொண்டிருந்த மிக உயர்ந்த நிலைப்பாட்டினை பின்வரும் அவரது வரிகள் வெளிக்கொணர்கின்றன. அகிம்சை வீரர்களின் கருவி, தீங்கு எனும் கொடூரமனதினை இளகச்செய்யும் ஆயுதம். குரோதம், விரோதம், பகைமை போன்வற்றினை எதிர்க்கக்கூடியது, ஒழுக்கமான வாழ்க்கைக்குரிய வழிகாட்டி, மனவலிமையினை கொடுக்கும் சக்தி. தோல்வியே இல்லாதது, ஜனநாயகத்தின் ஆணிவேர் என்று பல்வேறாக அகிம்சை குறித்து தனது நிலைப் பாட்டினை அவர் வெளிப்படுத்துகின்றார்.

ந. சிவகரன்
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அகிம்சை எனது கடவுள். உண்மையே எனது கடவுள். நான் (காந்தி) அகிம்சையினை நோக்கும் போது உண்மை சொல்கின்றது அதனை என்னூடாகக் காண் என்று. நான் உண்மையினை நோக்கும்போது அகிம்சை சொல்கின்றது அதனை என்னூடாகக் காண் என்று.

இங்கு உண்மை, அகிம்சை, கடவுள் ஆகிய மூன்றும் சமவலுவான பெறுமானத்தினை கொண்டவை என்பதனை காந்தியின் மேற்குறித்த போதனை வெளிப்படுத்துகின்றது.

காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை இறைவனுடன் சங்கமிப்பதற்கான வழியாகவும். உலகியல் இலக்குகளினை வென்றெடுப்பதற்கான வழியாகவும் கருதுகின்றார். சுதேச விடுதலையினைப் பாராட்டி நிற்கும் அளவுக்கு ஆன்மீக விடுதலையினையும் வலியுறுத்துகின்றார். அகிம்சை குறித்து காந்தி மேலும் கூறும்பொழுது அகிம்சை அமைதிக்கும் முடிவான விடுதலைக்குமாகத் தனிமனிதனால் அனுஷ்டிக்கப்படும் விழுமியமன்று. அது உறுதியுடனும் மனித மாண்புகளுடனும் வாழ்ந்து பன்நெடுங்காலமாகப் பேராவல் கொண்டிருந்த சாந்தி நிலையினை அடைவதன் பொருட்டாக முன்னேறிய - முயற்சிக்குரிய - சமூகத்தின் வாழ்க்கை நியதியே ஆகும்.

மனிதர்கள் உபயோகிக்கக் கூடிய சக்தி அகிம்சையே ஆகும். இது மனிதனின் அறிவாற்றலினாலும் செயற்பாட்டினாலும் கண்டு பிடிக்கப்பட்டதாகும். உண்மையான அகிம்சையினை அனு பவிப்பவருக்கு உலகமே அடிபணிந்து கிடக்கிறது என்கிறார்.

எனவே அகிம்சைக்கு இலக்கணமாக வாழ்ந்தவரின் பிறந்த தினத்தில் எமது மனங்களில் இருந்து தீய எண்ணங்களினை ஒதுக்கி அனைத்து உயிரினங்களினையும் சரிசமமாக மதித்து அனைவரிடத்திலும் அன்பு செலுத்து வோமாக. ★

# அகிம்சை வழியில் போராடி உரிமைகளை வென்றெடுப்போம்

உலக அகிம்சை தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

ஒக்ரோபர் மாதம் இரண்டாந்திகதி சர்வதேச அகிம்சை தினமாகும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அகிம்சா மூர்த்தி காந்தியடிகள் பிறந்த தினமான ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதியை அகிம்சை தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

அகிம்சை என்றும் நிரந்தரமானது என்பதையும் உயர்வானது என்பதனையும் இந்த நன்னாள் எமக்கு உணர்த்துகிறது. அகிம்சையின் அம்சங்களாக எந்தவித உயிர்க் கொலைகளையும் செய்யாதிருத்தல், உயிரினங்கள் எல்லாவற்றிலும் அன்பு காட்டுதல், துன்புறுத்தாதிருத்தல், வன்முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல், உண்மையை எல்லா வழிகளிலும் கடைப்பிடித்தல் என்பவற்றைக் கொண்டிருக்கும்.

இன்று உலகில் வன்முறைகள் பல்வேறு வழிகளிலும் மலிந்து காணப்படுகின்றன. சிறுவர் உரிமைகள் மீறப்படல், கொலைகள், லஞ்சம்பெறல், போதைப்பொருள் பயன்பாடு, சமூக நீதி நியமங்களை மீறுதல் போன்ற இன்னும் பல செயற்பாடுகளால் மக்கள் துன்பப்படுகின்றனர். பல்வேறு விதமான உளத்தாக்கத்திற்குள்ளாகின்றனர். இவை மட்டுமின்றி சுற்றாடலையும் மாசுபடச் செய்வதன் மூலம் சுற்றாடல் அழிவுக்குள்ளாக்கப்படுகிறது. இவை மனித இனத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றன. மேலும் பொறுமையிழத்தல், ஆத்திரம் அடைதல், பொய்பேசுதல், பிறர்மேல் துவேசம் கொள்ளல், பிறருக்குத் தீங்கு நினைத்தல், உலக மக்களுக்குத் தேவையான பொருளின் மேல் ஆதிக்கம் செலுத்தல் ஆகியவற்றை அகிம்சை (கொடுமை)ச் செயற்பாடுகள் எனக் காந்தியடிகள் குறிப்பிடுகின்றார்.

புறநானூறு ''நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்'' என்று கூறுகிறது. அதாவது ஒருவருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமை செய்யாதிருங்கள் எனக் கூறுகிறது. ஆனால் அகிம்சையானது ஒருபடி மேலாக தீமை செய்யாவிட்டாலும் ஒதுங்கியிராது நன்மைகளைச் செய்யவேண்டும் என்கிறது.

அகிம்சை மிகத் தொன்மையானது. காந்தியடிகள் அகிம்சையின் காலத்தை மலைகளின் தொன்மையுடன் ஒப்பிட்டுக்கொண்டார். காந்தியடிகளுக்கு முற்பட்ட காலத்தில் இந்து மத வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் அறநூல்களும், சோக்கிரட்டீஸ் போன்ற தத்துவ ஞானிகளும், புத்தபிரான், யேசுநாதர் போன்ற மகான்களும் அகிம்சை வழியை நல்வாழ்வுக்கான நெறி எனப்போதித்தனர். பல தொழிற்சங்கங்களும் அகிம்சை வழிப்போராட்டங்களை நடத்தி தங்கள் உரிமைகளை வென்றெடுத்தனர்.

காந்தியடிகளுக்குப் பின்னான காலத்தில் மாட்டின் லூதர்கிங், தலாய்லாமா, பியூஜிகுருஜி, டெஸ்மெண்ட் டுட்டு, நெல்சன் மண்டேலா, ஆங்சாங்சுகி உட்பட்ட இன்னும் பல சமய, சமூக, அரசியல் தலைவர்கள் அகிம்சை வழியில் மக்களுக்கு அமைதியான நிறைவான சுதந்திரமான, ஒளிமயமான வாழ்வை பெற்றுக்கொள்ள வழிகாட்டினர்.

அண்மைக் காலத்தில் யோகர் சுவாமிகள் கூட ''சும்மாவிரு'' என்ற ஆழ்ந்த கருத்துள்ள அகிம்சை சிந்தனையை மக்களிடம் பரப்பினார்.

காந்தியடிகள் அநீதிக்கு எதிராக சாதாரண மக்களையும், அறிவுசார்ந்த பெரியோர்கள் உட்பட அனைவரையும் ஒன்று திரட்டி உண்மை, அன்பு,

செல்வக்குமாரன் சர்வகா,
தரம்-12 மாணவி,
மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

அனைவரின் நலன் என்ற கோட்பாடுகளுடன் அகிம்சை வழியில் அறப் போராட்டத்தை நடத்தி வெற்றிகாண முடியும் என தென்னாபிரிகாவிலும் இந்தியாவிலும் நிரூபித்துக் காட்டினார். சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், பகிஷ்கரிப்பு, வேலை நிறுத்தம் முதலிய அகிம்சைவழிச் செயற்பாடுகளாக இருந்தன.

காந்தியடிகள் அகிம்சை வழிப்போராட்டங்களை நடத்தும்போது தென்னாபிரிக்காவில் பல தடவை கைது செய்யப்பட்டு 249 நாள்கள் சிறைத் தண்டனையை அனுபவித்தார். இதேபோல் இந்தியாவில் பலதடவை கைது செய்யப்பட்டு 2089 நாள்களும் சிறைவாசத்தை அனுபவித்தார். சில சிறைகளில் கடுங்குற்றமிழைத்தவர்களுடன் அவர்களுக்குரிய கடுந்தண்டனைகளையும் இவருக்கு வழங்கப்பட்டபோது விரும்பி ஏற்றார். இதை அகிம்சையின் உயர்நிலை என்று கூட கருதமுடியும். பல சந்தர்ப்பங்களில் உண்ணாவிரதம் இருந்தும் போராட்டங்களை முன்னெடுத்தார்.

நவீன காலத்திற்கு அகிம்சையின் உட்பொருளையும் வழிமுறைகளையும் உலக மக்களுக்கு முழுமையாக நடைமுறையில் காந்தியடிகள் காட்டியுள்ளார். மக்கள் வாழ்வின் உயர்வுக்காகத் தன்னையே தியாகம் செய்த காந்தியடிகளை ''மகாத்மா'' என உலகம் போற்றுகின்றது.

அகிம்சை தினமான இன்று அகிம்சை வழியை மக்களுக்கு வழிகாட்டிய அண்ணல் காந்தியையும் அகிம்சை வழி நின்று உலக ஈடேற்றத்துக்குத் தாமும் செயற்பட்டு உலகுக்கும் வழிகாட்டிய உத்தமர்களையும் இன்று நினைவு கூருவதுடன் அகிம்சை வழி நின்று ஹிம்சை வழியைத் தவிர்த்து உயர்வான நல்வாழ்வுக்கு ஒளியூட்டிட திடசங்கற்ப்பம் செய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசிப்பாவனையும் மனித வாழ்வும்



- க.நிலா -

காலங்கள் மாற மாற மனிதனுடைய வாழ்விலும் பல மாற்றங்கள் உருவாகின்றன. மனித சக்தியை விட கணனியும் தொலைபேசியும் மனிதனை ஆளுகின்றது.

இளைஞர், யுவதிகளை சீர்கெடுக்கும் இன்னொரு வழி தொலைபேசிப் பாவனை தான் நண்பர்களின் தூண்டுதலாலும் தமது சுயபுத்தி அற்று தொலைபேசியில் முடங்கிக் கிடப்பது தன் வாழ்க்கை ஆகிவிட்டது. இதனால் எவ்வளவு பாதிப்புக்கள், பணம் வீணாக செலவழியும், நேரம், இலட்சியம் பயனற்றதாகிப் போகும். சிந்திக்கும் ஆற்றல் குறைவடைந்ததால் தான் கல்வி, வாழ்க்கைப் பாதை பெரிதும் பின்னடைவுக்குச் செல்கிறது.

தொலைபேசி பாவனை ஓர் அவசர தகவலைப் பெறுவதற்காக பயன்படுத்துவது போற்றற்குரியது. அதை விடுத்து மணித்தியாலக் கணக்கில் எதுவும் பயனற்ற ஒரு பொழுதினைக் கழிப்பதற்கு பயன்படுத்துவது எதைச்சாரும்.

காலத்திற்கு ஏற்றால் போல் எம்மை மாற்றிக்கொள்ளல் வேண்டும் தான் அதற்காக அவற்றுக்காக நாம் அடிமையாக மாற வேண்டியதில்லை.

பாடசாலை மாணவர்களுக்கு தொலைபேசி முக்கிய மற்றது. இவர்களது கல்வி வளர்ச்சிக்கு இது ஒரு பின்தங்கிய சாதனமாகும். நமது பொழுதைப் போக்குவதற்கு எவ்வளவோ இருக்கு. பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி இவற்றின் பிரயோகம் பயனுள்ளதாக இருக்கும்.

தொலைபேசிகள் விலைகள் குறைவடைந்து மலிவாகக் கிடைப்பதால் தான் இப்பாவனையாளர்களது தொகை அதிகரித்தது.

வாழும் காலத்தைப் பிரயோசனமாக பயன்படுத்தி வாழ்வில் நற்பிரஜைகளாக வாழ கொஞ்சம் சிந்திக்கலாமா?

## ஊனமே வாழ்வானால்...?

கனவுகளின் பாதைவழியே
காற்றாகிச் சேன்றவேளை
வீணையினை மீட்டக்கூட
விரல்கள் காத்திருக்கும்
என் உணர்வுகளைச் செவிமடுக்க
எந்தச் சேவிகளும்
காதுகோடுப்பதில்லை
ஏனேன்றால் உதடுகளில்
மட்டுமல்ல
என் வாழ்வில் ஏற்பட்ட ஊனமும்
கூட...

- சி.ராதிகா -

# முக்கிய தினங்கள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

| | |
|---|---|
| ஒக்ரோபர் 05 | - உலக சிறுமியர் தினம் |
| ஒக்ரோபர் 06 | - சர்வதேச ஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் 09 | - சர்வதேச அஞ்சல் தினம் |
| ஒக்ரோபர் 10 | - உலக உளச் சுகாதாரதினம் |
| ஒக்ரோபர் 14 | - உலக தர நிர்ணய தினம் |
| ஒக்ரோபர் 15 | - சர்வதேச வெள்ளைப்பிரம்புத் தினம் |
| | - சர்வதேச விழிப்புணர்வற்றோர்தினம் |
| ஒக்ரோபர் 16 | - சர்வதேச உணவு தினம் |
| ஒக்ரோபர் | - சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் |
| ஒக்ரோபர் | - சர்வதேச விவசாய தினம் |
| ஒக்ரோபர் | - ஐக்கிய நாடுகள் தினம் |
| ஒக்ரோபர் 30 | - சர்வதேச சேமிப்பு தினம் |
| நவம்பர் 20 | - சர்வதேச சிறுவர் உரிமைகள் தினம் |
| நவம்பர் 21 | - சர்வதேச கடற்றொழில் தினம் |
| டிசெம்பர் 01 | - சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசெம்பர் 02 | - வயது குறைந்தோர் தினம் |
| டிசெம்பர் 10 | - சர்வதேச மனித உரிமைகள் தினம் |
| டிசெம்பர் 13 | - சிறுவர் உரிமைகள் தினம் |

*(முற்றும்)*

க.நிது




# வரும் ஆனா வராது

கவிநேசன்

முற்பகல் 10 மணியிருக்கும் அந்தக் கடையில் பரபரப்பு களை கட்டியிருந்தது. ஒவ்வொருவரும் எனக்கு, உனக்கு எனப் போட்டி போட்டுப் பொருள்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் நான் நினைக்கிறேன் ஒரு முப்பது வயதிருக்கும் அந்தக் கடைக்கு ஒருவர் வந்தார்.

''நான் ஆமி காம்பில் ( இருக்கும் இடத்தைக் கூறி) இருந்து வருகிறேன். பெரியதுரை சமான்கள் வேண்டிக் கொண்டு வரச்சொன்னார்'' என்று கூறி ஒரு பெரிய பட்டியலை வாசித்துக் கொண்டிருந்தார். அவர் வாசிக்க வாசிக்க பொருள்களும் உடனுக்குடன் ' பில்' போடப்பட்டு, பார்சல் பண்ணப்பட்டன. சுமார் 3 லட்சம் பெறுமதியான பொருள்கள் தயார் நிலையில் இருந்தன.

'' பெரியதுரை காசு கொண்டு வருவார். சமான்களை ஏத்த லொறியும் வருமென்று கொச்சைத்தமிழில் கூறிக் கொண்டு வீதியைப் பார்த்துக் கொண்டு நிற்பது போல நின்றார்.

சற்று நேரத்தில் ஒருபெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு இதை நான் சைக்கிளில் கொண்டு போகிறேன். மிகுதியை ஏற்ற லொறி வரும் என்று கூறிவிட்டு எடுத்துக் கொண்டு போய் விட்டார்.

(அவர் கொண்டு போன பெட்டிக்குள் 50 ஆயிரம் பெறுமதியான சிகரெட் பண்டல் இருந்தது)

''இவ்வளவு பெறுமதியான சாமான்களுக்கு 'பில்' போட்டுப் போறார், எப்படியும் அதை ஏத்த ஆள்கள் வருவினம் தானே என்ற நம்பிக்கையோடு வழி மீது விழி வைத்துக் காத்திருந்தார் கடைக்காரர்.

பொழுதும் சாய்ந்து விட்டது. அவர் வரவேயில்லை. ஏன் இந்தச் சம்பவம் நடந்து இரண்டு வாரம் ஆகிவிட்டது . இன்னும் தான் வரவில்லை. தொலைந்து போனது 50 ஆயிரம் பெறுமதியான 'சிகரெட்' பெட்டிதான். அந்தக் கடைக்கார முதலாளி பதறியடித்து எல்லா இடங் களிலும் தேடி அலைந்து பொலிஸ், இராணுவ முகாம் எல்லாம் முறைப்பாடு செய்தால் அப்படியான ஒருவர் அந்த 'ஆமி' காம்பில் இல்லை யென்று பின்னர்தான் தெரிஞ்சுது. பார்த்தீர்களா? இந்தச் சம்பவம். வடமராட்சியில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனமொன்றில் அண்மையில் நடந்திருக்கிறது.




மகா ஜனங்களே! இப்பவெல்லாம் யாழ்ப்பாணத்துக்கு விதம் விதமான மனிசர்கள் வருகிறார்கள், போகிறார்கள். எனவே கொஞ்சம் அயர்ந்து போனால் தலையில் மிளகாய் அரைத்துவிட்டுப் போய்விடுவார்கள். விழிப்பாக இருந்துவிட்டால் போதாது சற்றுச் சிந்தித்தபடியும் இருக்க வேண்டும். ஏனென்றால் ஏமாற்றவென்று புறப்பட்டவர்கள் பல உத்திகளைப் பயன்படுத்துவார்கள். இந்த நேரத்தில் நாம் புத்தியைக் காட்ட வேண்டும்.

# ஆடலரசனின் அற்புத நடனங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆனந்த நடனமாடிக் கொண்டிருக்கும் சிவபெருமானுக்கு உலகில் அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் ஆனந்த பொருள்களே யாகும். அதாவது தேவர்களிற்காகக் கூத்தாடும் கூத்தனையும், உத்தமக் கூத்தனையும் மன்றிலாடும் சேவகக் கூத்தனையும் சம்பந்தக் கூத்தனையும் மனதில் வைத்து அன்பைச் செலுத்துவோமாயானால் எமது ஆசைகள் கெட்டழியும், புலனடங்கி வாழ்வோம் என்கிறது அப்பாடல் மேலும்.

கொடுகொட்டி பாண்டரங்கோடு சங்கார
நட்ட மோடைந்தாறு நாடியுள் நாடுந்
திடமுற்றெழுந்தேவ தருவாந்தில்லை
வடமுற்ற மாவன மன்னவன் தானே....''

அதாவது கொடுகொட்டி , பாண்டரங்கம், கபாலக்கூத்து, சங்காரக் கூத்துக்கள், ஐந்தொழில் கூத்துகளுடன் இணைந்த காளி கூத்து, முனிகூத்து முதலிய கூத்துக்களும் குற்றாலப் பேரூர், கூடல், தில்லை, ஆலங்காடு ஆகிய இடங்களிலாடிய கூத்துக்கள் அறுவகைச் சமயங்களுக்குக்கேற்ப ஆடிய கூத்துக்கள் என எம்பெருமானின் திருக்கூத்துக்கள் பலவாகக் கூறப்பட்டுள்ளது. புளியைக் கண்டவர் வாயில் உமிழ் நீர் சுரப்பது போல எம்பெருமான், பெருமாட்டியின் ஆடலைக் கண்டவரின் உள்ளத்தில் பக்தி பிரவாகித்து கண்ணில் நீர் சொரியும் சிவாகம சுந்தரியுடன் எம்பிரான் ஆடுகிறான்.

கூத்தன் கலந்திடுங் கோல்வளையாளொடுங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஆனந்தங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக்
கூத்தனும் கூத்தியுங் கூத்தி மேலன்றே...''

எம்பெருமான் பிரபஞ்சின் மையமாக விளங்கும் தில்லையிலே பஞ்சகிருத்தி தாண்டவமாடுகிறார். அவர் ஆடுவது ப்ரபஞ்சத்தினுடைய இயக்கத்தைக் குறிக்கிறது. திருவாசி என்பது ப்ரபஞ்சத்தின் குறியீடு. இந்தத் திருவாசியில் அவரது கை, கால், மற்றும் விரிந்த சிகை இடுப்பில் அணிந்துள்ள பந்தனம் என்பன முட்டிக் கொண்டிருப்பது அவர் உலகம் முழுவதும் வியாப்பித்து நின்று திருக்கூத்தாடுவதைக் காட்டுகிறது. அதுபோல கழுகொடு காட்டிடை நாடகமாடி... என்பது மாணிக்கவாசகர் திருவாசகம். ஆன்மா ஆணவமடங்கி மாயையிலிருந்து விடுபட்டு தூய்மையடைவது சுடுகாட்டிலே அதுமட்டுமன்றி உலகில் எல்லாப்பற்றைகளையும் நீக்கி இறைவனை மட்டும் நினைத்து வாழ்பவை பேய்கள். அப்பேற்பட்ட பேய்கள் வாழும் இடுகாட்டிலே எம்பெருமான் விரும்பி சுடலைப் பொடிபூசி ஆடுகிறான். இதனால் தான் இறைவனை இலகுவிலடைய காரைக்கால் அம்மையார் பேயுரு எடுத்தார் போலும். இப்படியாக எம்பெருமானின் அழகிய கூத்துக்கள் ஒவ்வொன்றும் ஆத்மீக தத்துவத்தை விளக்குகின்றன. ஆடலரசனின் அற்புத நடனங்களை புலவர்களின் பாடல்களினூடாகப் பார்த்தது போல தமிழக வரலாற்றுக் காலகட்டங்களைச் சிறப்பாக ஆட்சிபுரிந்த மன்னர்களின் ஆதரவுடன் ஆலயங்கள் தோறும் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் வடிக்கப்பட்டுள்ளமை வாயிலாகவும் கண்டு இன்புறக் கூடியதாக உள்ளது. இவ்வமைப்பு ரீதியான உருவங்கள், அழகியல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் உலக இயக்கத்தையும் அதன் மாற்றங்களையும் விளக்கி நிற்பதைக் காணலாம். எந்நேரமும் ஆடிக்கொண்டிருக்கும் அம்பலவனின் கூத்து



"நாட்டியக்கலா வித்தகர்"
திருமதி அ.உமாமகேஸ்வரி (B.F.A)
உடுவில் தெற்கு, மாவிப்பாய்.

தரிசனங்களை தைப்பூசம், மாதமொருமுறை வரும் நடேசபிஷேக நாள்கள், ஆனி உத்தரம் மற்றும் மார்கழித் திருவாதிரை போன்ற நாள்களில் எமது ஊனக்கண்ணால் தரிசித்து சிந்தனை தெளிவடைவோமாக.

வென்றிடுமிகு தாரகன தாருயிர் மடங்கக்
கன்றிவரு கோபமிகு காளிகதம் ஓவ
நின்று நடம் ஆடியிட நீடுமலர் மேலால்
மன்றல் மலியும் பொழில் கொள்
வண்டிருவையாறே..'

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்
# வடக்கு மாகாணத்தில் கடமையாற்ற தமிழ்மொழி மூல துணை மருத்துவத்துறை அலுவலர்களுக்கான தொழிற்பயிற்சிகளுக்காக மாணவர்களை இணைத்துக்கொள்ளல் - 2010

1. வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தில், தமிழ்மொழி மூல துணை மருத்துவத்துறை அலுவலர்களுக்கான தொழிற்பயிற்சிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக, வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கல்வித் தகைமைகள்:

விண்ணப்பதாரர் 2001ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளில் க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் தெரிவு செய்யும் பாடநெறிக்கான விஞ்ஞான பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பயிற்சிநெறிகளுக்குத் தேவையான தகைமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

3. விண்ணப்பதாரிகள் அவர்களது தகைமைகளுக்கேற்ப பாடநெறியை தமது விருப்பின்படி தெரிவு செய்வதானது 2001 ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டுகளின் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் பெற்ற 'Z' புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டு தீர்மானிக்கப்படும்.

| குறியீட்டு இல | பாடநெறிகள் | க.பொ.த (உ/த) தகைமைகள் | க.பொ.த. (சா/த) தகைமைகள் | பயிற்சிக் கால வரையறை |
|---|---|---|---|---|
| 01<br><br>02 | மருந்தாளர் (Pharmacist)<br><br>மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர். (Medical Laboratory Technologist) | க.பொ.த. (உ/த) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச் சித்தியும் பின்வரும் பாடங்கள் ஏதாவது இரண்டில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். இணைந்தகணிதம், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம். | க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு திறமைச்சித்திகளுடன் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | 02 வருடங்கள்<br><br>02 வருடங்கள் |
| 03 | இயன் சிகிச்சையாளர் (Physiotherapists) | க.பொ.த (உ/த) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச்சித்தியுடன் பின்வரும் ஏதாவது இரு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்: இணைந்த கணிதம், இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம். | க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடைவகளுக்கு மேற்படாத அமர்வில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் நான்கு திறமைச் சித்திகளுடன் ஆங்கிலமொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | 02 வருடங்கள் |

04. ஏனைய தகைமைகள்:

அ. 29.10.2010ம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆ. வட மாகாணத்தின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்ற சம்மதிப்பவராக இருத்தல் வேண்டும்.

இ. உடற் தகுதியுடன் சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும்.

ஈ. விண்ணப்பதாரர் வட மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக்கொண்டவராக இருத்தல் வேண்டும். வதிவிடத்தை உறுதிப்படுத்த கடந்த மூன்று வருட வாக்காளர் இடாப்புப் பிரித்தெடுப்பு விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் அல்லது கிராம சேவை அலுவலரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கடிதம் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

05. விண்ணப்பிக்கும் முறை:

அ. ஒரே விண்ணப்பதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பப்பதானால் ஒவ்வொரு பதவிகளுக்கும் வெவ்வேறான விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

ஆ. விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி செ.மீ. 21 x 29 அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கவேண்டும்.

இ. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 29.10.2010ம் திகதி அல்லது அதற்கு முன்பு செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வட மாகாணம், விவசாயக் கட்டடத்தொகுதி, வரோதயநகர், திருகோணமலை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ஈ. விண்ணப்பங்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''துணை மருத்துவத்துறை அலுவலர்களுக்கான தொழிற்பயிற்சி - 2010'' என்பதுடன் தெரிவுசெய்யும் பாடநெறியினையும் குறிப்பிடல் வேண்டும்.

உ. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்படமாட்டாது.

ஊ. உரியமுறையில் பூரணப்படுத்தப்படாததும், காலம் தாழ்த்திய விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதுடன் தபாலில் காணாமல் போன, தபால் சேவையில் ஏற்படும் தாமதம் போன்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எ. விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாகசேவை/கல்விச் சேவை/அரச கணக்காளர் சேவை/அரச பாடசாலை அதிபர்கள்/சமாதான நீதிவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 1,24,080க்கு குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகிய யாராவது ஒருவரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

ஏ. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சேர்த்துக்கொள்ளப்படுவது வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபை மூலமாகவே. தகுதியான அனைத்து விண்ணப்பதாரிகளும் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். நேர்முகப்பரீட்சையில் கல்வித் தகைமைகளும், மற்றைய தகைமைகளும் பரீட்சிக்கப்படும். வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தை உடைய தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேர்முகப்பரீட்சைக் குழுவின் முடிவே இறுதியானதாகும்.

06. பயிற்சித் திட்டம்:

அ. இது ஒரு முழுநேரப்பாடநெறியாகும். வார நாள்களில் ஐந்து (05) நாள்களும் வார இறுதி நாள்களில் சனிக்கிழமைகளில் மதியம் வரையும் நடைபெறவுள்ளதால் வேறு பாடநெறிகளைப் பயில்வோர் இப்பாடநெறிக்காக விண்ணப்பித்தல் கூடாது.

ஆ. பயிற்சிநெறிகள் ஆங்கிலமொழி மூலமே போதிக்கப்படும்.

இ. பயிற்சிக் காலத்தின்போது மாதாந்தம் ரூபா 6000/- படியாக வழங்கப்படும்.

ஈ. சகல பயிலுநர்களும் பயிற்சியின் ஆரம்பத்தில் மருத்துவ சோதனைக்கு சமுகம் கொடுக்கவேண்டும்.

உ. பயிற்சியின்போது குறிப்பிடப்பட்ட பரீட்சையில் தேர்ச்சியடையாத அல்லது செயலொழுக்கம் என்பவற்றில் திருப்தியற்ற முறையில் அல்லது தான் பயிற்சி பெறும் பாடசாலையில் பரீட்சைகள், விடுமுறை நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்குத் தவறும் பயிற்சியாளர்களின் பயிற்சி எவ்வேளையிலும் நட்டஈடு எதுவும் கொடுக்கப்படாமல் நிறுத்தப்படும்.

ஊ. பயிற்சிக்கு உட்படுத்தப்படும் வேளையில் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக் கல்லூரிகளில் அமுலாக்கப்படும் சட்டதிட்டங்கள் அடங்கிய கோவை ஒன்று வழங்கப்படும். இச்சட்ட திட்டங்களுக்கும் காலத்துக்குக் காலம் பிறப்பக்கப்படும் வேறு சட்டதிட்டங்களுக்கும் இவர்கள் அமைவாக நடக்கவேண்டும்.

07. சேவைக்கு அமர்த்தும் விதிகள்:

1. பயிற்சிநெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப்பரீட்சையில் சித்திபெறும் பயிலுநர்களுக்கு குறித்த துறைகளுக்கான தரம் III ற்கான நியமனங்கள் அவர்களது பெறுபேற்றின் அடிப்படையில் வடமாகாணத்தின் எப்பகுதியாயிலும் உள்ள வெற்றிடங்களைப் பொறுத்து இந்நியமனங்கள் வழங்கப்படும்.
2. இச் சேவைகள் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரியதுமாகும் என்பதுடன் தபுதாரர் அநாதைகள் ஓய்வுதியத்திட்டத்திற்கு தாங்கள் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. சகல மேற்படி சேவைக்கான உத்தியோகத்தர்களும் சாதாரண நியதிகளுக்கும் சிறிலங்கா சோசலிசக் குடியரசின் தாபனக்கோவையின் நிபந்தனைகளுக்கும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நியமிக்கப்படும் கொள்கைகளுக்கும் அமைவாக நடத்தப்படும் இடமாற்றங்களுக்கும் நிதி நிபந்தனைகளுக்கும் வேறு நிபந்தனைகளுக்கும் காலத்திற்கு காலம் அம்மாகாண சபையால் பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
4. நிரந்தரமாக மேற்படி துணை மருத்துவ சேவைக்கு நியமனம் வழங்கப்படும் பொழுது ரூபா 15,440 -5 x180 - 5 x 240 - 11 x 320 - 20 x 360 - 28,260 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 6/2006(IV) எனும் சம்பளத்திட்டத்தின் ஆரம்ப சம்பளத்தில் வைக்கப்பட்டு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

இ.இரவீந்திரன்
செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வட மாகாணம். (சி/571517)

## மாதிரி விண்ணப்பப்படிவம்

சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வட மாகாணம்.
துணைமருத்துவத்துறைகளுக்கான தொழிற்பயிற்சிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2010

விண்ணப்பிக்கும் பாடநெறி:......

1. அ. முதலெழுத்துக்களுடன் பெயர்:......
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
ஆ. முழுப்பெயர்: ......
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
இ. முழுப்பெயர்: ......
(சிங்களம்/தமிழ்)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. அஞ்சல் முகவரி:
i. சிங்களம்/தமிழில்:......
ii. ஆங்கிலத்தில்:......

4. நிரந்தர முகவரி:
i. சிங்களம்/தமிழில்:......
ii. ஆங்கிலத்தில்:......
iii. மாவட்டம்:......
iv. மாவட்டத்தில் நிரந்தர 'வதிவுடையவரா? (ஆம்/இல்லை)......
v. ஆம் எனில் எவ்வளவு காலம்:......

5. பிறந்த திகதி:
ஆண்டு ...... மாதம்...... திகதி......
29.10.2010 ஆந் திகதியில் வயது: வருடங்கள்...... மாதம்...... நாட்கள்......

6. பால்: (உரிய கூட்டில் '✓' குறிப்பிடவும்)
ஆண் [ ] பெண் [ ]

7. நீங்கள் இலங்கைப் பிரஜையா? (பொருத்தமான கூட்டில் '✓' குறியிடுக)
ஆம்: [ ] இல்லை: [ ]

8. விவாகமானவரா/விவாகமாகாதவரா? ......

9. கல்வித் தகைமைகள்:
அ. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) பரீட்சை (விஞ்ஞானப்பிரிவு மட்டும்) (தயவுசெய்து புள்ளிவிபரங்களை இணைக்கவும்)
ஆண்டு:...... சுட்டெண்:......
'Z' புள்ளி:......

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

ஆ. கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சை) முதலாம் அமர்வு:

ஆண்டு:...... சுட்டெண்:......

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

இரண்டாம் அமர்வு:

ஆண்டு:...... சுட்டெண்:......

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

10. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா? (பொருத்தமான கூட்டில் '✓' குறியிடுக)
ஆம்: [ ] இல்லை: [ ]

ஆம் எனில் தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக:
......

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை:
அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.
ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக்கண்டால் நான் தேரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவனாவதற்கும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

திகதி:...... ......
விண்ணப்பதாரியின் கையொப்பம்

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:
விண்ணப்பதாரி திரு/திருமதி/செல்வி ......
ஏன்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2010 ...... ஆந் திகதி இடப்பட்டது என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

......
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(அலுவலக முத்திரையுடன்)

உறுதிப்படுத்துபவரின் விபரம்:
முழுப்பெயர்:......
தொழில்:......
முகவரி:......
திகதி:......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிரை மரக்குற்றிகள் கடத்தல் காத்தான்குடியில் முறியடிப்பு

மட்டக்களப்பு, ஒக். 2

சட்டவிரோதமான முறையில் கடத்தி வரப்பட்ட பெருமளவிலான முதிரை மரக் குற்றிகளையும், பல கைகளையும் காத்தான் குடி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இக் கடத்தல் சம்பந்தமாக இரு சந்தேக நபர்களும் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான் குடி பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி ஜெயவர்தன தெரிவித்தார்.

புதன்கிழமை மாலை காத்தான் குடி பிரதான வீதியால் இரு சிறிய உழவு இயந்திரங்களில் மேற்கொள்ளப்பட்ட இக்கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டது. இரு உழவு இயந்திரங்களிலுமிருந்து சுமார் 300முதிரை மரக்குற்றிகளும், பலகைகளும் மீட்கப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 3 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் மரக்குற்றிகள் சகிதம் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (ளி)

# மீன் விலை அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்களின் விலை என்றுமில்லாத வாறு அதிகரித்துள்ளது. இதனால் பாவனையாளர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

குளத்து மீன்கள் பிடிக்கப்படாத நிலையில் கடல் மீன்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ அறுக்குளா மீன் 800 ரூபாவாகவும், 450 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு கிலோ பாரை மீன் 600 ரூபா முதல் 650 ரூபா வரையிலும், 550 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தளபத்து மீன் 700 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

வாவி மீன்களின் விலைகளும் பெருமளவில் உயர்வடைந்துள்ளன. ஒட்டி, கயல், மணலை, கெழுத்து ஆகிய மீன்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளன.

# அரச வேலை பெற்றுத் தருவதாகக் கூறி கிழக்கில் பணம் பறிக்கும் கும்பல்

## பிரதி அமைச்சர் முரளிதரன் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஒக்.2

அரச உத்தியோகம் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் கறக்கும் கும்பலொன்று கிழக்கில் செயற்படுகின்றது. இவர்கள் குறித்துக் கவனமாக இருக்கும்படியும் பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாமெனவும் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏமாற்றுப் பேர்வழிகள் குறித்து பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் 'சுடர் ஒளி'க்குத் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

அரச உத்தியோகம் பெற்றுத் தருவதாகக் கூறி கிழக்கில் மக்களிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று மோசடி செய்யும் கும்பல் குறித்து பல முறைப்பாடுகள் நாளாந்தம் எனக்குக் கிடைக்கின்றன. அரச உத்தியோகம் தொடர்பாக ஏதாவது தகவல் கள் தேவையானால் என்னிடம் அல்லது எனது அமைச்சிடம் தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

சில தினங்களுக்கு முன்னர் பதவி பெற்றுத்தருவதாகக் கூறியும் அப்பாவி மக்களிடம் லட்சக் கணக்கில் பண மோசடி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் சொன்னார். (ளி)

# சம்மாந்துறையில் சிறுவர் தின விழா

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சம்மாந்துறை தேசிய பாடசாலையில் நாளை ஞாயிற்றுக் கிழமை சிறுவர் தின விழா நடைபெறும். சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். கே.எம். மன்சூர் தலைமை வகிப்பார். அன்று காலை எட்டுமணி முதல் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகம், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துடன்இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (ளி)




# அரசியலில் இளைஞர்களின் பங்கு காலத்தின் கட்டாய தேவை

## அட்டாளைச்சேனைக் கூட்டத்தில் உரை

மட்டக்களப்பு, ஒக்.2

"அரசியலைப் பொறுத்தமட்டில் இளை ஞர்களின் பங்களிப்பு காலத்தின் கட்டாய தேவையாகும்'' என முஸ்லிம் இளைஞர் கூட்டமைப்பின் விசேட உயர் பீடக் கூட்டத்தில் அட்டாளைச் சேனைப் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.அன்சில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அட்டாளைச்சேனைக் காரியாலயத்தில் இக்கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முஸ்லிம் இளைஞர் கூட்டமைப்பின் தலைவரும், ஊடகவியலாளருமான எஸ்.எம். அறூஸ் இதற்குத் தலைமை வகித்தார். உயர்பீட உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதியாக அட்டாளைச் சேனை பிரதேசசபைத் தவிசாளர் எம்.ஏ.அன்சில் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் தமதுரையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

முஸ்லிம் இளைஞர் கூட்டமைப்பு முஸ்லிம் சமூகத்தின் உரிமைக்காகவும், நலனுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. இது மகிழ்ச்சிக்குரிய ஓர் விடயம். நமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இவ்வாறான அமைப்பின் தோற்றமும், செயற்பாடுகளும் இன்றியமையாதவை.

அரசியலைப் பொறுத்தவரையில் இளை ஞர்களின் பங்களிப்பு காலத்தின் கட்டாய தேவை. எமது பிரதேசம் இன்று அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கியுள்ளது. இதை அபிவிருத்தி செய்வதற்கு இளைஞர்களாகிய நீங்கள் முன்வரவேண்டும்.

நான் தவிசாளராக வந்ததிலிருந்து அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களை ஒரு கண்கொண்டே பார்க்கின்றேன். பிரதேசவாதம் என்பதை முற்றாக வெறுக்கின்ற ஒருவனாகவே உள்ளேன்.

எங்கு பிரச்சினை இருக்கின்றதோ அது தீர்க்கப்பட வேண்டும். எங்கு அபிவிருத்தி தேவைப்படுகின்றதோ அது நிறைவேற்றப்பட வேண்டும். இதுவே எனது இலட்சியம்.

முஸ்லிம் இளைஞர் கூட்டமைப்பாகிய நீங்கள் நமது பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகளை எனக்குத் தெரியப்படுத்த வேண் டும். அதுமட்டுமல்லாமல் எனது நடவடிக்கைகளுக்கு உங்களுடைய பூரண ஒத்துழைப்பும் தேவை. எதிர் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் புதிய வட்டாரத் தேர்தல் முறையிலேயே நடைபெறும்.- இப்படி அவர் தெரிவித்துக்கொண்டார். (ளி)

# மட்டக்களப்பு வைத்தியசாலை 1,000 கோடி செலவில் புனரமைப்பு

மட்டக்களப்பு, ஒக்.2

மட்டக்களப்பு வைத்தியசாலையை 1,000 கோடி ரூபா செலவில், சகல வசதிகளுடனும் கூடிய வகையில், புதிய கட்டடங்களுடன் புனரமைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மீள்குடியேற்றத்துறை பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் விடுத்த வேண்டுகோளின் பிரதிபலனாகவே இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்புனரமைப்பு வேலைத்திட்டத்துக்குத் தேவையான நிதி உதவியை குறைந்த வட்டி வீதத்துடனான கடனாக வழங்குவதற்கு இந்தியாவின் என்.ஐ.டி.எச். திட்ட அபிவிருத்தி நிறுவனம் மற்றும் இந்திய வங்கி ஒன்றும் முன்வந்துள்ளது.

சுகாதார அமைச்சின் விசேட குழுவொன்று விரைவில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளது. அங்கு குறித்த வைத்தியசாலை அதிகாரிகளுடன் புனரமைப்பு நடவடிக்கை தொடர்பாக பேச்சு நடத்தி அறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கவுள்ளது. (ஒ-சி)

# அரச காணிகளில் 5 வருடங்களாக குடியிருப்போருக்கு நீர், மின்சாரம்

நுவரெலியா,ஒக்.2

அரச காணிகளில் 5 வருடங்களுக்கு மேல் குடியிருந்தவர்களுக்கு நீர் மற்றும் மின்சார வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிக் கடிதங்களை வழங்குமாறு நுவரெலியா மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜீ. குமாரசிறி கிராமசேவையாளர் களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்தவாரம் அரச அதிபர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'சுவர்ணபூமி' அல்லது 'ஜய பூமி' பத்தி ரங்களை வைத்திருப்போர் சகல சலுகை களையும் பெற்றுகொள்ள முடியும். இவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

நுவரெலியா மாவட்டத்தில் 5 வருடங்களுக்கு மேல் சொந்தமாக வீடுகளை அமைத்துக் கொண்டுள்ள பலர் நீர், மின்சாரம் பெற்றுக் கொள்ள வழியின்றி உள்ளனர்.

இவ்வாறானவர்கள் உடனடியாக நீர், மின்சார வசதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அவ்வப் பகுதி கிராம சேவையா ளர் ஊடாக கடிதம் வழங்குப்பட வேண்டும் என யாழ். மாநாட்டில் கேட்டுக்கொள்ளப்பட்டதையடுத்து நுவரெலியா மாவட்ட கிராம சேவையாளர்களுக்கு இப்பணிப் புரை விடுக்கப்பட்டுள்ளது - இப்படி குமாரசிறி தெரிவித்தார். (ளி)

# ரம்பொடையில் மண்சரிவு

கொழும்பு,ஒக்.2

நாட்டில் நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக மலையகம் உட்பட பல பாகங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் வெள்ளநீர் தேங்கியிருப்பதுடன், மலைப்பாங்கான பிரதேசங்களில் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

கொழும்பு - நுவரெலியா வீதியில் ரம்பொட 44, 45 ஆம் மைல்களுக்கு அருகில் இரண்டு இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது என நுவரெலியா மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜி. குமாரசிறி அறிவித்துள்ளார்.

அந்தப் பிரதேசத்தின் ஊடாக வாகனப் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டபோதிலும் அங்கு வாகனத்தை தரித்து வைத்திருக்க வேண்டாம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாரிய கற்கள் மற்றும் மண் திட்டுகள் வீதியில் விழலாம் என்ற அச்சம் காரணமாகவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் அனைத்தும் கடந்த செவ்வாய்க்கிழமை காலைமுதல் திறக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக கலாஓயா ஆற்றின் நீர்மட்டம் உயரும் சாத்தியமுள்ளதால் அதன் இரண்டு கரைகளிலும் குடியிருக்கும் பொதுமக்களை அவதானமாகச் செயற்படுமாறு தம்புத் தேகம பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ளி)

# பல்கலை மாணவர்களின் சத்தியாக்கிரகத்தால் செவ்வாய்க்கிழமை கண்டியில் போக்குவரத்து ஸ்தம்பிதம்

கண்டி, ஒக்.2

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை ஊர்வலமாக வந்து கண்டி மணிக் கூண்டுக் கோபுரத்திற்கு கீழே அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர் .

இதனால் நகரில் போக்குவரத்துகள் யாவும் ஸ்தம்பித நிலையை அடைந்தன. பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட மாணவர்கள் உயர்கல்வி பிரதியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் கொடும்பாவியைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரண்டாம் நாளாகவும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். இருந்த போதிலும் சில பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் காலை விரிவுரைகளுக்குசமுகமளித்திருந்தனர்.

கலைப்பீடத்தில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்போரும், முதலாம் வருட மாணவர்களும் விரிவுரைக்கு சமுகமளித்திருந்தனர். பகல் 12 மணிக்குப் பின்னர் மாணவர்கள் அனைவரும் மாணவர் மத்திய நிலையத்தில் ஒன்று கூடி அங்கிருந்து கண்டி மாநகருக்கு ஊர்வலமாக வந்தனர்.

ஊர்வலத்தில் தமது சகாக்கள் நால்வரையும் விடுதலை செய்யக்கோரும் பதாகைகளை மாணவர்கள் ஏந்தி வந்து சத்தியாக் கிரகத்தி லீடுபட்டு அமைச்சரின் கொடும் பாவியையும் எரித்தனர். ஊர்வலத்தில் சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மருத்துவபீட மாணவர்கள் விரிவுரைக்கு சமுகமளித்தனர் என பல் கலைக்கழக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலை பற்றி மகா சங்கத்தினரின் ஆலோசனையைப் பெறுவதற்காக மாணவர் குழுவொன்று நேற்றுமுன்தினம் மாலை கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து தமது நிலைமையை விளக்கிக் கூறியுள்ளது.

பல்கலைகழக மாணவர்கள் நான்கு பேரை விளக்கமறியலில் வைத்திருப்பது சம்பந்தமாகவும் மகாநாயக்க தேரர்களிடம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இங்கு கருத்துத் தெரிவித்த அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகள்;

நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று இருப்பதைக் கருத்தில் கொள்ளுமாறு தெரிவித்தனர். அத்துடன் மாணவர்கள் தமது கோரிக்கைகளை எழுத்துமூலம் தரும் பட்சத்தில் அது தொடர் பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப் [illegible] தனர். (ளி)

# ஹப்புக்கல தோட்ட வீட்டில் ரூபா பத்துலட்சம் கொள்ளை

கொழும்பு,ஒக்.2

தென்மாகாணசபையின் பிரதிச் செயலாளருக்குச் சொந்தமான ஹப்புகல மவுண்ட் பிளசண்ட் தோட்டத்திலுள்ள வீடு உடைக்கப்பட்டு பத்துலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என ஹப்புகல பொலிஸார் தெரிவித்தனர்.




வீட்டு உரிமையாளரான பிரதிச் செயலாளரின் மனைவியின் சகோதரிக்குச் சொந்தமான 7லட்சம் ரூபா பணமும், மூன்று தங்கச் சங்கிலிகளும், இரு வளையல்களும், மூன்று பென்ரன்களும், ஒரு தங்க நாணய மும் கொள்ளையிடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொள்ளை சம்பந்தமான மேலதிக விசாரணைகளை ஹப்புகல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ளி)

# நூல் அறிமுகவிழா

கண்டி,ஒக்.2

கண்டி இந்து இளைஞர்மன்ற அனுசரணையுடன் நாவலப்பிட்டி ச.முத்தையாபிள்ளை எழுதிய 'அபரக்கிரியை மரபுகள்' நூல் அறிமுகவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கண்டி இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் மன்றத் தலைவர் இரா. பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் கலாநிதி துரை.மனோகரன் கலந்து கொண்டு நூல் மதிப்பீட்டுரையை வழங்குவார்.

அறிமுகவுரை அ.தட்சணாமூர்த்தி, ஏற்புரை நூலாசிரியர் ச.முத்தையாபிள்ளை, நன்றியுரை மன்றச் செயலாளர் வீ.சிவகுமார் ஆகியோர் நிகழ்த்துவர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் மீளக்குடியேறியோருக்கு உதவிப்பொருள்கள் கையளிப்பு

தென்மராட்சி,ஒக்.2

வன்னிப் பிரதேசத்திலிருந்து தென்மராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சில்வேஸ்திரி அலன்ரின் இந்த உதவிப் பொருள்களை மக்களிடம் கையளித்தார்.

யுத்த வேளையில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு ஐக் கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய நிறு வனத்தினர், தையல் இயந்திரங்கள், கோழிக் கூடுகள், தச்சுத் தொழில் உபகரணங்கள், 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சில்லறை வியாபாரப் பொருள்கள் ஆகியவற்றை வழங்கினர்.

இதேவேளை சேவாலங்கா நிறுவனத்தினரால் சாவகச்சேரி நகரப்பகுதி கோயிற் குடியிருப்பு, சங்கத்தானை ஆகிய இடங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு சோப்வகைகள் உட்பட்ட சுகாதாரப் பொருள்களும் நேற்று முன்தினம் மக்களுக்கு கையளிக்கப் பட்டன. (எ-207)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவலிங்கம் நாகேஸ்வரி
தம்பதியரின்
செல்வப்புதல்வன் சஜித்
(நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)
தரம் ஐந்தில் உயர் புள்ளி 164 பெற்று

தரணியில் நீ புகழ் பூக்க
வரும் காலமது வளமாக
வாயார உனை வாழ்த்தி
நலம் பெற நாளுமுனை- நம்
மனம் கொண்டு போற்றிடவே
நீ பல்லாண்டு காலம்
பல கலைகளையும் கற்று
நீடுழி வாழ்கவே!

வாழ்த்துவோர்: பெரியமாமா குடும்பம், சின்ன மாமா குடும்பம், சித்தப்பா, சித்தி.

செட்டியாவூர்,
தொண்டைமானாறு.
(104062)



## தெல்லிப்பழை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயில் திருப்பணிக்கான ஆலோசனைப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் நாளை (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் ஸ்ரீ கதிரைமலைச்சிவன் தேவஸ்தான மணி மண்டபத்தில் முத்துமாரி அம்பாள் பரம்பரைக் குருக்கள் சிவஸ்ரீ திருச்செந்தில்நாதசர்மா குகநாதசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது. அந்நேரம் அம்பாள் ஆலய சூழலில் வசித்தவர்கள், உபயகாரர்கள், அடியார்கள், ஆர்வலர்கள் அனைவரையும் வந்து பங்குபற்றி ஆலோசனைகளும், ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தெரிவித்து இப்பணிகளில் ஈடுபட்டு உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயில்,
ஸ்ரேசன் றோட்,
தெல்லிப்பழை. (104058)

ஆலய தர்மகர்த்தாவும்
ஆர்வலர்களும்.
தொ.பே.: 0786887751.


## ஏட்டிக்குப் போட்டியாக வீதியருகே சிற்றாலயங்கள்

குருநகர்,ஒக்.2

குருநகர் கடற்கரை வீதியில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களில் சிலர் தமது வீட்டின் வெளிப்புறத்தில் இக்கடற்கரை வீதியை நோக்கி ஏட்டிக்குப் போட்டியாக சிற்றாலயங்களை அமைத்து வருகின்றனர். இதனால் இவ்வீதி குறுகிவருகிறது. இந்த வீதியூடாக யாழ்- கொழும்புத் துறைக்கான பஸ் மற்றும் ஏனைய வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-51)

## விளக்கமறியல்

கண்டி, ஒக்.2

கண்டி கலகெதர பிரதேச செல்வந்த வீடொன்றிலிருந்து மீட்கப்பட்ட இளைஞர்-யுவதி தொடர்பாக கைதுசெய்யப்பட்ட தாயும், மகனும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தத்தெடுக்கப்பட்டனர் எனக் கூறப்படும் யுவதியும், இளைஞரும் சுமார் 20 வருடங்களாக கொடுமைப்படுத்தப்பட்டு அடிமைச் சிற்றூழியத்தில் ஈடுபடுத்தப் பட்டுவந்த நிலையில் அண்மையில் பொலிஸாரால் மீட்கப்பட்டனர்.

இவர்கள் பாலியல் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (சி)

## அந்தணர்களுக்கான கருத்தரங்கு

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச அந்தணர்களுக்கான கருத்தரங்கு நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு, கோப்பாய் கண்ணகி அம்மன் கோயிலில் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-72)





உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 686 திகதி 30-09-2010

வெற்றி எண்கள்

ஆங்கில எழுத்து

06 08 37 56 K

ஜக்பொட் பரிசு ரூ. 16,694,260/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 16,694,260/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 384 | 1,000/= | 384,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 618 | 1,000/= | 618,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15185 | 60/= | 911,100/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7128 | 40/= | 285,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 179243 | 20/= | 3,584,860/= |
| | | மொத்தம் | ரூ. 6.605.080/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 700414743-6-26 |
| புத்தளம் | 700406655-8-08 |
| மட்டக்களப்பு | 700414231-1-11 |
| நுவரேலியா | 700405413-8-08 |
| குருநாகல் | 700401513-1-31 |
| மாத்தறை | 700402926-2-22 |
| இரத்தினபுரி | 700407188-7-47 |
| அம்பாறை | 700408963-2-42 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,005,080/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 17,178,970/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 04 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

வளமான வாழ்விற்கு



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

லயன்

பாலசுந்தரம் சந்திரகுமார் (J.P.M.J.F)

(பொலிஸ் அண்ணா)

வடமராட்சி மண்ணின் இன்பர்சிட்டி மைந்தனும்
தற்போது வவுனியாவில் வசிப்பவரும்
எமது இனிய நண்பரும் சிறந்த பண்பாளருமாகிய
"தேசகீர்த்தி"
லயன் பாலசுந்தரம் சந்திரகுமார் -J.P.M.J.F. All ISLAND J.P.
(பொலிஸ் அண்ணா)
அவர்களுக்கு அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தினால்
25.09.2010 சனிக்கிழமை அன்று இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில்
நடத்தப்பட்ட சாமஸ்ரீ தேசிய பட்டமளிப்பு விழாவில்
"சாமஸ்ரீ தேசகீர்த்தி"
எனும் கௌரவ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமைக்கு அவரை மகிழ்ச்சி பொங்க வாழ்த்துவதோடு, அவரின் மக்கள் சேவை மேலும் விரிவடைந்து மக்கள் சேவையாளனாக வளர, சிறக்க அன்புடன் ஆசித்து நிற்கின்றோம்.

லி.டேவிட் குடும்பத்தினர்,
நண்பர்கள்.

சக்கோட்டை.




(சி)/571256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேஷம்:**
பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். விரும்பிய பொருள் ஒன்றை வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். தேவைகள் பூர்த்தியாக புதிய பண வரவுகள் வந்து சேரும். குடும்பத்தினர் மற்றும் குழந்தைகள் மீதான பாசம் அதிகரிக்கும். இனம்புரியாத சந்தோஷம் காண்பீர்கள்.

**இடபம்:**
கனிவாக, பணிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்பட்டு பணச் செலவுகளை எதிர்கொள்ளலாம். புதிய முயற்சிகளை தவிர்க்க வேண்டிய நாள். உறவினர்கள், குடும்பத்தினர் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம்.

**மிதுனம்:**
ராசிக்குள் சந்திரன் தொடர்வதால் மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். திருவாதிரை நட்சத்திரக்காரர்கள் முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தாரின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப செயற்படுங்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும்போது அலட்சியம் வேண்டாம். போராட்டமான நாள்.

**கடகம்:**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவது நல்லது. வாகனத்தில் கவனம் தேவை. எதிர்பார்ப்புகள் தாமதமாக முடியும். உடன் பிறந்தவர்களுடன் விவாதம் வேண்டாம். வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**சிங்கம்:**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். உற்சாகமான நாள்.

**கன்னி:**
நீண்ட நாள்களாக பார்க்காத உறவினர் ஒருவரை திடீரென பார்க்க நேரிடலாம். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். தொழில் ரீதியான அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம். மற்றவர்களின் செயல்பாடுகளைப் பார்த்து உங்களின் உத்வேகத்தை அதிகரிக்க முற்படுவீர்கள். ஆதாயகரமான நாள்.

**துலாம்:**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பழைய கடன் பிரச்சினைகள் தீரும். உறவினர்களால் நன்மை உண்டு. வாகனப் பழுது நீங்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனச்சாட்சிபடி செயற்படும் நாள்.

**விருச்சிகம்:**
வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். வேலைச்சுமையால் உடல் அசதி, மனச் சோர்வு வந்து நீங்கும். சாலைகளைக் கவனமாக கடந்து செல்லுங்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் விரயம் வரும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் ஏற்படக்கூடும். சிக்கனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:**
சில விஷயங்களை வெளியில் சொல்ல முடியாமல் மனதிற்குள் போட்டுக் கொண்டு வெதும்பலாம். பெண்கள், பெற்றோர் வழியில் உதவிகளைப் பெறலாம். கடும் பிரயத்தனம் மேற்கொண்டாவது சில வேலைகளை முடித்து விடுவீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். வயிறு உபாதையைச் சந்திக்கலாம்.

**மகரம்:**
பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். தொட்டது துலங்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வழக்கு சாதகமாக திரும்பும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் கௌரவப் பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**கும்பம்:**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்:**
சகநண்பர்கள் உதவுவார்கள். பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். கலைப் பொருள்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை தாண்டி முன்னேறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.2

2010ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. எனவே சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிடவுள்ளது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**அளவெட்டி அருணோதய கல்லூரி**

ம.மேருஜன்-178, நி.பிருந்திகா - 167, சே.லெளின் ராஜ் - 166, கி.பவாகரன் - 165, வி.தர்சனா - 165, உ.சலக்ஷன் - 164, மு. தேனுஜன் - 160, செ.ரஜீதன் - 150, ப.திலக்ஷன் - 150.

ச.வேணுகா - 149, சி.கோபிநாத் - 147, வி.நிருசன்- 146, க.கஜமுகன் - 146, ந.தேனுஜா - 145, கு.சஜிந்தன் - 144, மு.பவித்திரா - 144, பி.ராதிகா - 143.

சி.சர்மிலன் - 176, ம.துஷாரா- 171, தி.மணிமோகன் - 167, த.ரேணுஜன் - 167, பா.சாணு -167,க.கேதுஷன் -164, க.சுஜித் - 164, செ.நிருபா - 163, லோ.துளசிகா - 159, த.ரேணுஜா - 157, தே.கர்சிகா - 156.

ஸ்ரீ.திலக்ஷி - 156, வை.இசைப்பிரியன் - 155, வி.மேனகன் - 155, து.லக்சன் - 153, ச. சுவேதசர்மா -151, உ.மோவிதா - 151, சு.திலக்சன் - 150, சி.யதுர்ஷன் - 146, வே.லதீபா- 144, வ.கம்சிகா - 142. (முடிவுகள் தொடர்ந்து வெளிவரும்). (201-09)

# புறக்கோட்டை நடைபாதை மத்திய நிலைய மோசடி; உடன் விசாரிக்குமாறு பாதுகாப்புச் செயலர் உத்தரவு

கொழும்பு , ஒக்.2

கொழும்பு, புறக்கோட்டை போதிராஜ மாவத்தையில் நடைபாதை வியாபாரிகளுக்கென அரசால் அமைக்கப்பட்ட வியாபார மத்திய நிலையத்தில் கடைகளை வழங்கும்போது முறைகேடுகள் நடந்துள்ளனவா என விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

நீண்டகாலமாக நடைபாதைகளில் வியாபாரம் செய்துகொண்டிருந்தவர்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கடைகள் அரசியல் மற்றும் ஏனைய தலையீடுகள் மூலம் வெளியாருக்கும் வழங்கப்பட்டுள்ளன எனக் கிடைத்துள்ள முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டே பாதுகாப்புச் செயலாளர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுக் கமைய பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய, பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க தலைமையில் இதற்கென விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

இக்குழுவில் மற்றுமொரு பிரதிப் பொலிஸ் மா அதிபரும், மாநகர முதல்வரும், ஏனைய உயரதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்ட இக்குழு துரிதகதியில் விசாரணைகளை முடித்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனப் பாதுகாப்புச் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வியாபார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் புறக்கோட்டை நடைபாதைகளில் காலம்காலமாக வியாபாரம் செய்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

எக் காரணத்தைக் கொண்டும் அவை வெளியாருக்கு வழங்கப்படக் கூடாது என அரசு மாநகரசபைக்கு கண்டிப்பான நிபந்தனையை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

புறக்கோட்டை வியாபார நிலையத்துக்கு மேலதிகமாக புறக்கோட்டை நொரிஸ் கனல் வீதியிலும், பொரளையிலும் புதிதாக 500 கடைகள் அமைக்கப்படவுள்ளன.

இவை அனைத்தும் நடைபாதை வியாபாரிகளுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# ஆபாச இணையத்தளங்களில் இலங்கை இளைஞர்-யுவதிகள்

கொழும்பு , ஒக்.1

ஆபாச இணையத்தளங்களைத் தடை செய்யுமாறு பொலிஸ் மகளிர் சிறுவர் பிரிவு பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளது.

இதனடிப்படையில் பொலிஸ் மகளிர் சிறுவர் பிரிவினரால் தடையுத்தரவு கோரி பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட 274 ஆபாச இணையத்தளங்களில் 130 தளங்களில் நம்நாட்டு இளைஞர் - யுவதிகள் பங்கெடுத்துள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸ் சிறுவர், மகளிர் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இத்தகைய ஆபாசப் படங்களில் பாடசாலை சீருடைகள் அணிந்த நிலையில் இரு மாணவிகளும் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் பற்றிய விசாரணைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என பொலிஸ் சிறுவர் மகளிர் பிரிவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (சி)

# இறைவன் இருக்கும் இடம்



திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கிராமமொன்றில் ஆன்மீகப் பெரியவரொருவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். ஒருநாள் மாலை 4 மணியளவில் அப்பெரியவர் தெருவழியே நடந்து போய்க்கொண்டிருக்கப் பின்னால் அடியவர்கள் அவரை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டிருந்தனர்.

பெரியவர் குழந்தைகளைப் பார்த்தபோது எல்லோரும் ஏழைக் குழந்தைகள். சட்டையெல்லாம் அழுக்கு, கிழிசல்கள். சிலர் சட்டையே அணியவில்லை. பரிதாபமான சூழ்நிலை. பெரியவர் அதைப் பார்த்ததும் அங்கேயே நின்றுவிட்டார். இதைக் கண்ட அவரது உதவியாளுக்கு ஒரே கவலை. அடுத்த ஊருக்குச் சரியான நேரத்துக்கு போக வேண்டும் என பெரியவரிடம் நினைவூட்ட முயற்சித்த வேளை பெரியவர் ஒரு செய்தியை உதவியாளரிடம் சொன்னார். உடனே உதவியாள் அங்கிருந்து வேகமாக ஓடினார்.

அவர் போனபின் பெரியவர் ஏழைக்குழந்தைகளை அழைத்து அவர்களின் திறமைகளை பாராட்டிக் கொண்டிருந்தார். நேரம் மாலை ஆறு மணியாகியது. உதவியாள் குழந்தைகளுக்கான துணிப் பொதிகள் பல கொண்டு வந்தார். பெரியவர் அவற்றை எடுத்து ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுத்தார். அவர்கள் மகிழ்ச்சியுடன் ஆடைகளை அணிந்து கொண்டனர்.

இதற்கிடையில் பெரியவருடன் கூட வந்தவர்கள் பக்கத்து ஊரில் வழிபாடு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தவிப்படைந்தனர். அவர்களில் ஒரு உதவியாள் மறுபடியும் பணிவுடன் பெரியவரை அணுகி, '' விரைவாகப் புறப்பட்டால் நல்லது. பக்கத்து ஊரில் பூசை இருக்கிறது!'' என்று இழுத்தார். அதற்குப் பெரியவர் '' பூசையா! அது இங்கேயே முடிந்து விட்டதே. இந்த ஏழைக் குழந்தைகளுக்கு ஆடைகள் கொடுத்தோமே! அதுதான் பூசை! இது போதும்!'' என்றார்.

**கோ.சுவாமிநாதன்.**

# 'உயிர்' தாங்கிய மங்கை

சைவ சமயக் குரவர் திருநாவுக்கரசர் மதம் மாறிப் போனபோது அவருக்காகத் திருவதிகை வீரட்டானத்தில் விளக்கேற்றி விரதம் இருந்தவர் அவரது சகோதரி திலகவதியார். இளம் வயதில் திலகவதி தனது பெற்றோரை இழந்தார். வாழ்வை வெறுத்து உயிர் விடத் துணிந்தவர். தம்பி வாழவேண்டும் என்பதற்காகவே உயிர் தாங்கினார். எப்போதும் உயிர்தான் நம்மை தாங்கும். ஆனால் திலகவதியோ, ''உயிர் தாங்கினார்'' என்று புரட்சிகரமாக எழுதினார் சேக்கிழார்.

கணவனை இழந்த பெண்களை இந்து மதத்தில் பல சகுனத் தடை என்றெல்லாம் பேசும்போது நான் மிக வருந்துவதுண்டு. அவர்கள் அறியாமையால் அப்படிப் பேசுகிறார்கள். கணவன் உள்ள பெண்கள் தனது குடும்பத்தை மட்டுமே நல்வழிப்படுத்த முடியும். கணவனை இழந்த பெண்களோ பல நூறு குடும்பங்களை வாழ்விக்கும் வல்லமை உடையவர்கள். இதற்கு திலகவதியே உதாரணம். திருநாவுக்கரசு என்கிற அப்பர் பெருமானை தாய் மதத்திற்கு திருப்பி அவர் மூலம் உலகை உய்வித்த உயர்வு திலகவதியின் சிறப்பு.



**சுகி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர் மார்க்கட்டில் உடைகள் திருடிய நடிகைக்குப் பிணை

கொழும்பு, ஒக்.2

கொழும்பு நவீன காட்சியறை ஒன்றில் ரூபா 12,000 ரூபா பெறுமதியான உடைகளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரபல தொலைக் காட்சி நடிகை ஒருவரை ரூபா 50,000 ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி தீர்ப்பளித்தார்.

அண்மையில் குறிப்பிட்ட காட்சியறைக்குச் சென்ற நடிகை உடைகளைத் திருடி மறைத்து வைத்துக்கொண்டு பணம் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேறியுள்ளார். அங்கு கடமையிலிருந்த பாதுகாப்பு அதிகாரி அவரது பையைச் சோதித்தபோது திருட்டு அம்பலமானது.

இதையடுத்து கறுவாத்தோட்டப் பொலிஸாரல் கைதுசெய்யப்பட்ட நடிகை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து பிணை யில் விடுவிக்கப்பட்டார்.

தற்சமயம் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகும் பிரபல தொடர் ஒன்றில் இவர் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# மகாத்மாகாந்தி பிறந்த தினம் இன்று; யாழ்.நகரிலும் பருத்தித்துறையிலும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.2

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டில் மகாத்மா காந்தி ஜயந்திதினம் இன்று சனிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலும் மற்றும் பருத்தித்துறை பஸ்தரிப்பு நிலையத்திலும் உள்ள மகாத்மாகாந்தி சிலை அமைந்துள்ள இடங்களில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் காலை 9 மணிக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் ஆ.வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்துகொண்டு காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பார்.

அதேபோல பருத்தித்துறை பஸ்தரிப்பு நிலையத்தில், அகில இலங்கை காந்தி சேவா சங்க நிர்வாக உறுப்பினர் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் விருந்தினராக பருத்தித்துறைப் பிரதே செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.முருகையா கலந்துகொள்வார். இந்த நிகழ்வுகளில் அனைத்து அன்பர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-16)

# சாக்குகளில் மரக்கறிகள் பொதிசெய்வதற்குத் தடை

## ஜனவரியில் நடைமுறைக்கு வரும்

கொழும்பு, ஒக்.2

அடுத்த வருடம் முதல் சாக்குப் பைகளில் அடைத்து மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதும், கொண்டு செல்லப்படுவதும் தடை செய்யப் படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்தத் தடை அமுலுக்கு வரும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

மரக்கறிகளைப் பொதி செய்து அனுப்புவதற்கான 80,000 பிளாஸ்டிக் பைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

சாக்குப்பைகளில் அடைத்து மரக்கறிகள் கொண்டு செல்லப்படும் போது சுமார் இரண்டு லட்சம் எடையுள்ள மரக்கறிகள் விரயமாகின்றன. இதனால் விவசாயத் துறைக்கு வருடாந்தம் 800 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது - என விவசாய அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (சி)

# ஹெரோயின் வாங்கப் பணம் தராத மனைவிக்கு தீ வைப்பு

நீர்கொழும்பு பெரியமுல்லை பிரதேசத்தில், ஹெரோயின் வாங்கப் பணம் கொடுக்க மறுத்த மனைவியை மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிய கணவனுக்கு பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

இதன்போது, பலத்த தீக்காயங்களுக்குள்ளான 38 வயதுடைய சம்பிகா பிரியதர்ஷனி எனும் மூன்று பிள்ளைகளின் தாய் ஆபத்தான நிலையில் நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹெரோயினுக்கு அடிமையான தனது கணவன் பணம் கேட்டு நச்சரித்தார் என்றும், கொடுக்க மறுத்ததால் தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டினார் என்றும் இப்பெண் வைத்தியசாலை பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

வைத்தியசாலை பொலிஸாரும், நீர்கொழும்பு பொலிஸாரும் கூட்டாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## பறவைக் காய்ச்சல் தடுப்பு மருந்து

மக்களுக்கு அண்மைக் காலமாக அச்சுறுத்தலாக உள்ள பறவைக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பறவைக் காய்ச்சல் நோய்க்கு எதிரான தடை மருந்து (HINI), உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பறவைகள் மற்றும் மிருக வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கும், அதனுடன் தொடர்புடையவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

எனவே இதனுடன் தொடர்புடையவர்களை வேலைக்கு வைத்துள்ள பண்ணையாளர்கள் தடை மருந்து ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் தங்கள் பகுதி பொதுசுகாதாரப் பரிசோதகருடன் அல்லது உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (த-15)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 31 . 10 . 1939



மறைவு 03 . 09 . 2010

### அமரர் வரதலக்ஸ்மி வைற்றஸ் (வரதா)

(முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், தேசிய உப்பு கூட்டுத்தாபனம்)

கடந்த 03.09.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது இல்லத்தரசியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இல.198,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0213216841 (103890)

கணவர்,
பிள்ளைகள்.

## ஆள் தேவை

பண்டத்தரிப்பில் அமைந்துள்ள
கோழிப்பண்ணை ஒன்றில்
வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை.
தொடர்பு:- 0779413068

## வீடு, காணி வாடகைக்குண்டு

கொக்குவில் சந்தியில் சகல
வசதிகளுடன் வியாபார தலம்,
NGO, Institute உகந்த வீடும்,
காணியும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0718141506

## Piano/Violin Notes

Organ, Guitar, வயலின், புல்லாங்குழல், வீணை, நாதஸ்வரம் ஆகிய இசைக்கருவிகளுக்கான 310 சினிமாப்பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar புல்லாங்குழல் ஆகிய பயிற்சி வகுப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

கரனீனா இசை மன்றம்
75, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே:- 0777031293

## கார் விற்பனைக்குண்டு

12-XXXX NISSAN நல்ல
நிலையில் உள்ள அழகிய கார்
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- வினோத்
தொ.பே: 0213002294
0789144881
தொடர்பு :- திருச்சுழி இல்லம்,
பழைய தபாற்கந்தோர் வீதி,
கிட்ஸ் பார்க் லேன்,
உரும்பிராய் தெற்கு.

## வீடு வாடகைக்கு

5/1, முதலாம் ஒழுங்கை, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில், சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குண்டு. (சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் மற்றும் கச்சேரி அருகில் அமைந்துள்ளது).

சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 7மணி தொடக்கம் மாலை 6 மணிவரை உரிமையாளரை நேரில் சந்திக்கலாம். தொடர்பு:- 0777533237

## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P4, 2.26 GHz, Computers Full Set மற்றும் கணனிப் பொருள்கள் என்பன ஒருவருட உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை ரூபா 16750/= மட்டுமே).

தொடர்பு: SKY Computer System
162, Main Street, Jaffna.
T.P.021 222 1417

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில், G.P.S வாசிகசாலைக்கும் விளையாட்டரங்கிற்கும் இடையில் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு:- 0711276747,0212228203

## காணி விற்பனைக்கு

இணுவில் மேற்கு, பாப்பா தோட்ட ஒழுங்கை, பருத்தியடைப்புப் பிள்ளையாரடி முடக்கில் ஒழுங்கை முகப்பு உடைய இரண்டு பரப்பு ஒன்றரைக் குழி காணி.

விலை: பரப்பு ஏழரை இலட்சம்.

தொடர்பு:- 94, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு.
தொ.பே: 0213216866

## காணி விற்பனைக்கு

மட்டுவில், சந்திரபுரம் அரசடி வீதியில் (குளக்கரை ஒழுங்கை) அமைந்துள்ள காணி உடன் விற்பனைக்குண்டு.
[illegible]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
02.01.1944

மறைவு:
05.10.2007

### சுந்தரம் இராசதுரை

திதி:நவமி

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
புன்னகையுடன் வாழ்ந்தாயே
இறையடி சேர்ந்து
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை எம்துயரம்
உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி: சரஸ்வதி, குடும்பத்தினர்.

(104000)

அம்மன் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து
இன்று ஓராண்டு ஆகியும்
இன்றும் உம் பசுமை
நினைவுகள்
எம்மைவிட்டுப் பிரியாது
துடிக்கின்றோம்
உங்கள் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

### செல்லத்துரை தங்கச்சியம்மா

தோற்றம்: 10.02.1932
மறைவு: 11.11.2009
திதி: அபரபக்க நவமி (103992)

என்றும் நினைவில்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

'சீதா பவனம்',
மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08.01.1938
உதிர்வு: 11.10.2009

### இராசரத்தினம் பூமணி

உள்ளத்தால் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும்
எங்கள் அம்மாவே!
உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

(101779)

இன்று (02.10.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அலப்ப தெரு,
வன்னிச்சி அம்மன் கோயிலடி, உடுப்பிட்டி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயோத்தி மாநகரில் இராமருக்கு பிரமாண்ட கோயில் கட்டப்படும்

## விஸ்வ இந்து பரிஷத் தெரிவிப்பு

டில்லி, ஒக். 02

அயோத்தியில் இராமர் பிறந்த இடத்தை நீதிமன்றம் உறுதி செய்திருப்பதால் அங்கு இராமருக்கு பிரமாண்டமான கோயில் கட்டப்படும் - என்று விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் அகில உலகப் பொதுச் செயலாளர் பிரவீன் தொகாடியா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

அயோத்தி வழக்கில் அலாகாபாத் உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை வரவேற்கிறோம். சர்ச்சைக்குரிய அந்த இடம், இராமர் பிறந்த இடம்தான் என்று மூன்று நீதிபதிகளும் ஏகமனதாகத் தீர்ப்பில் உறுதி செய்துள்ளனர். இந்துக்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்து உயர்நீதிமன்றம் இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இந்த நிலத்துக்காக கடந்த 450 ஆண்டுகளில் நம் முன்னோர்களில் சுமார் 4 இலட்சம் பேர் தங்களது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். அவர்களது தியாகத்தை இப்போது நினைவுகூர வேண்டும். இதற்காக சாதுக்கள், சட்டத்தரணிகள், செய்தியாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தீர்ப்பு கடவுள் இராமருக்கே கிடைத்த வெற்றி. உலகம் முழுவதும் உள்ள 100 கோடி இந்துக் களுக்கு கிடைத்த வெற்றி.

நீதித்துறை மீது இந்துக்கள் வைத்துள்ள நம்பிக்கை இந்தத் தீர்ப்பின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

அயோத்தியில் 110 அடி நீளமும் 90 அடி அகலமும் கொண்ட இடம், இராமர் பிறந்த இடம்தான் என உறுதி செய்யப்பட்டுள்ளது. இதைச் சுற்றியுள்ள இடத்தில் இராமருக்கு பிரமாண்டமான கோயில் கட்டப்படும்.

இதற்கு அனைத்து சமுதாயத்தினரும் ஆதரவளிக்க வேண்டும். இதுவரை நடந்தவை நடந்தவைகளாகவே இருக்கட்டும்.

- இப்படி அவர் கூறினார்.

இதேவேளை, இராமர்தான் தேசிய புருஷன் என்பதை இந்தத் தீர்ப்பு உறுதி செய்துள்ளது என்று மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வரும் பா.ஜ.கவிலிருந்து நீக்கப்பட்டவருமான உமாபாரதி கூறியுள்ளார். (சி)

# அயோத்தி வழக்குத் தீர்ப்பு ஒற்றுமைக்கு வழிவகுக்கும்

## பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி கருத்து

டில்லி, ஒக். 02

அயோத்தி வழக்கில் அலகாபாத் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை, ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் புதிய அத்தியாயமாகவே பா.ஜ.க. கருதுகிறது - என்று அக் கட்சியின் மூத்த தலைவர் அத்வானி கூறினார்.



இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கும் இந்தத் தீர்ப்பு வழிவகுக்கும் என்றும் அவர் கூறினார்.

மும்பையில் நடந்த தேசிய மகளிர் செயலாட்சி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அயோத்தியில் பிரம்மாண்டமான இராமர் கோயில் கட்டுவதற்கு இந்தத் தீர்ப்பு ஒரு முக்கிய முன்னேற்றமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தீர்ப்பை முதிர்ச்சியுடன் இந்தியா ஏற்றுக்கொண்டதற்காக எமது கட்சி மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

இராமர் கோயில் கட்டுவதில் இந்துக்களுக்கு உள்ள உரிமையை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பா.ஜ.கவின் தேசியத் தலைவர் நிதின் கட்காரி மற்றும் மகளிர் அணி தலைவி சிமரிடி இராணி ஆகியோரும் கலந்து கொண்டனர். (சி)

# அயோத்தித் தீர்ப்புக் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

## பிரதமர் கோரிக்கை

டில்லி, ஒக். 02

அயோத்தித் தீர்ப்பு வெளியானதைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு



பிளவை உண்டாக்கும் முயற்சியில் ஈடுபடும் தீய சக்திகள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் - என்று பிரதமர் மன்மோகன்சிங் கோரிக்கை விடுத்துள்ளார்.

அயோத்தித் தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியான பின்னர் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டம் பிரதமர் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் மேலும் கூறியவை வருமாறு -

அயோத்தித் தீர்ப்புக்குப் பின்னர் மக்கள் அமைதி காக்க வேண்டும். சில விரும்பத்தகாத சக்திகள், இருவகுப்பினரிடையே பிளவை உண்டாக்கும் முயற்சியில் ஈடுபடுவதை மக்கள் முறியடிக்க வேண்டும். வதந்திகளைப் பரப்பு வோர் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்தியாவில் அமைதி, மத நல்லிணக்கத்தைப் பேணிக் காக்க அரசு முழுமூச்சுடன் உறுதி பூண்டுள்ளது. அதற்கு மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சமூகத்தில் பிளவை ஏற்படுத்த நினைக்கும் சக்திகளுக்கு மக்கள் அடிபணிந்துவிடக் கூடாது.

- இப்படி அவர் கூறினார். (சி)



அயோத்தி வழக்கில் தீர்ப்பு வெளியான பின்னர் இந்தியாவில் அமைதி நிலவ வேண்டி உத்தரப்பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் பிரார்த்தனை நடந்தது. இதில், அதிக எண்ணிக்கையான குழந்தைகள் கலந்து கொண்டனர்.

# சிறப்பான தீர்ப்பு என்கிறார் ஜெயலலிதா

சென்னை,ஒக்.02

அயோத்திப் பிரச்சினையில் அலாகாபாத் உயர் நீதிமன்றம் அளித்துயள தீர்ப்பு மிகவும் சிறப்பானது - என்று அ.தி.மு.க. செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இராம ஜென்ம பூமி - பாபர் மசூதி தொடர்பான பிரச்சினையில் 60 ஆண்டு காலமாகத் தொடரும் சட்டப் போராட்டத்தில், இப்போது அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. பிரச்சினைக்குரிய இடத்தை மூன்றாகப் பிரித்து, வழக்கில் தொடர்புடைய 3 பிரிவினருக்கும் வழங்க வேண்டும் என்று



நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

இந்த வழக்கில் நீதிபதிகள் மிகவும் சிறப்பான தீர்ப்பை அளித்துள் ளனர் என நான் கரு துகிறேன். இந்தத் தீர்ப்பு சமாதானத்துக்கான கதவுகளை திறந்துள்ளது. இந்தத் தீர்ப்பை எல்லாத் தரப்பினரும் ஏற் றுக் கொள்வதுடன், தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். (சி)

### இரு தரப்பினரும் திருப்தியடையக் கூடிய தீர்ப்பு



சென்னை, ஒக்.02

அயோத்தி வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு, இரு தரப்பினரும் திருப்தியடையக்கூடிய தீர்ப்பு - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அமைதி காண்பது என்ற அடிப்படையில் இரு தரப்பினரும், திருப்தி அடையக்கூடிய தீர்ப்பு. இந்தத் தீர்ப்பில் குறை காண்பவர்கள், மேல்முறையீடு செய்யவும் வழிவகுத்திருப்பது வரவேற்கத்தக்கது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# அயோத்தித் தீர்ப்பு நல்லிணக்க நோக்கோடு வழங்கப்பட்டது

## வைகோ அறிக்கை

சென்னை, ஒக். 02

அயோத்தி இராம ஜென்மபூமி வழக்கில் இந்துக்கள், இஸ்லாமியர்கள் இடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்ற நோக் கத்தோடு அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது - என்று ம.தி.மு.க. செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அயோத்தியில் ராமர் கோவிலா? பாபர் மசூதியா என்று மக்களுக்குக் கவலை அளித்த சர்ச்சையால், 60 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளின் தீர்ப்பு இந்துக்கள் - இஸ்லாமி யர்கள் இடையே நல்லிணக்கம் ஏற்பட்டும் என்ற நோக்கத்தோடு வழங்கப்பட்டிருக்கிறது.

மக்களின் மத உணர்வுகள் சம்பந்தப்பட்ட பிரச் சினையில், சட்டத்தின் அளவுகோலை மட்டும் வைத்துத் தீர்வு காண இயலாது.

எனவே, தீர்ப்பிலே வெற்றி பெற்று விட்டோம் என்று ஒருதரப்பினர் கொண்டாடுவதோ, விழா எடுப்பதோ நிரந்தர சமாதானத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாக அமைந்து விடக் கூடாது. இந்து - முஸ்லிம் ஒற்றுமைதான், இந்தியாவின் வருங்காலத் தலை முறையினரின் அமைதி வாழ்வுக்கு அடிப்படையாகத் திகழும் என்பதை நினைவில் கொண்டு இருதரப்பினரும் செயற்படுவதுதான் இந்தியாவின் நலனுக்கு ஏற்றதாக அமையும். இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# இந்தியச் செய்திகள்

# இலங்கையில் தமிழகப் படகுகளை மீட்க தூதரக அதிகாரிகளிடம் மீனவர்கள் உதவி

இராமநாதபுரம், ஒக். 02

இலங்கையின் பாதுகாப்பில் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்டுத் தர, மத்திய அரசு தாமதம் செய்வதால் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளை நேரில் சந்தித்து இராமேஸ்வரம் மீனவர்கள் உதவி கோரியுள்ளனர்.

மீன்வரத்து குறைவால் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையில் மீன்பிடிப்பது தொடர்கிறது. இதற்கு இலங்கைக் கடற்படையினர் எதிர்ப்புத் தெரிவித்து, தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

உள்நாட்டுப் போர் நிறைவு பெற்ற நிலையில், இலங்கை மீனவர்கள் முழுவீச்சில் மீன்பிடியில் இறங்கியுள்ளனர். கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இலங்கைக் கடற்பகுதியில் மீன்பிடித்த தமிழக விசைப்படகுகள் மீது இலங்கை மீனவர்கள் வெடிகுண்டு வீசினர். இராமேஸ்வரத்தைச் சேர்ந்த செல்லத்துரை, பால்துரை ஆகியோரின் படகுகள் கடலில் மூழ்கின. இதற்கிடையில் சேதமடைந்த படகுகளை இலங்கைக் கடற்படை மீட்டு, இலங்கை அரசிடம் ஒப்படைத்தது. இதுகுறித்த தகவல் இராமேஸ்வரம் மீனவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட நிலையில், படகுகளை மீட்பதற்காக தமிழக அரசிடம் முறையிட்டனர். மத்திய அரசு தரப்பில் இதற்கு போதிய ஒத்துழைப்பு இல்லாததால், படகுகளை மீட்பதில் தாமதம் நிலவி வருகிறது.

இதைத்தொடர்ந்து நேற்று முன்தினம், சென்னை சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள், இலங்கைத் தூதரக அதிகாரிகளைச் சந்தித்து உதவி கேட்டுள்ளனர். (சி)

# ஈழத்தமிழ் அகதிகள் கடல்வழியாக தாயகம் திரும்ப முயல வேண்டாம்

## தமிழக புனர்வாழ்வு ஆணையர் எச்சரிக்கை

சென்னை, ஒக். 02

ஈழ அகதிகள் தமிழக அரசின் முறையான அனுமதியின்றி கடல் வழியாக இலங்கை திரும்புவதற்கு முயற்சிக்க வேண்டாம் - என்று தமிழக புனர்வாழ்வு ஆணையாளர் எம்.கலைவாணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆலங்குடியிலுள்ள தோப்புக் கொல்லை முகாம் மற்றும் புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள முகாம் ஆகிய ஈழ அகதிகள் முகாம்களுக்கு கடந்த செவ்வாயன்று சென்ற எம்.கலைவாணன் அங்கு இடம்பெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட்டார்.

இந்த முகாம்களில் வடிகால்கள் சீரமைக்கப்படுவதோடு இரண்டு புதிய நீர்த்தாங்கிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஈழ அகதிகளின் துன்பதுயரங்களைக் கேட்டறிந்த ஆணையாளர், குடி தண்ணீர் வசதிகளை மேம்படுத்துவதற்கும் போதுமான மின்சாரத்தை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப் படும் [illegible] திருமணமான பெண்களும் முகாம்களுக்கு வெளியே சென்று வேலை செய்வ தற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என அகதி கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுவிடயம் தொடர்பாக அரசுடன் கலந்துபேசப்படும் என கலைவாணன், முகாமிலுள்ள மக்களிடம் உறுதியளித்தார்.

மேலும், முறையான அனுமதியின்றி கடல் வழியாக இலங்கை திரும்புவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்றும், போலியான ஆவணங்களைத் தயாரித்து அகதிகளை வெளிநாட்டுக்கு அனுப்ப முயல்வோரை இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஈழ அகதிகள் முகாம்களுக்கான இந்தப் பயணத்தின்போது, இறைவரித் திணைக்களத்தின் புதுக்கோட்டைப் பிராந்திய அதிகாரி ஆர்.கனகரன், புனர்வாழ்வுக்கான சிறப்பு அதிகாரி பி.புகழேந்தி உள்ளிட்ட அதிகாரிகளும் சென்றிருந்தனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனவின் நூற்றாண்டையொட்டி

# 17 பாடசாலைகளின் அணிகள் பங்கு பற்றும் உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஒக்.2

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலைகளின் 21 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே 07 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியொன்றை எதிர் வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் 17 பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

இந்தப் போட்டிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணம் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.2

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்தும் 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 11 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் நடை பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் நடை பெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* கொக்குவில் காமாட்சி. வி.க. எதிர் அளவெட்டி இரட்டையபுலம் வி.க.
* அளவெட்டி ஞானவைரவர் வி.க எதிர் அளவெட்டி வேல்ட் ஸ்ரார் வி.க.
* மல்லாகம் ஆர்.டி.எஸ்.வி.க.எதிர் சுன்னாகம் இளம்புயல் வி.க.
* உடுவில் சயித் வி.க எதிர் இணுவில் கலை ஒளி வி.க. (த-86)

* *

* பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை திக்கம்முனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
* பொலிநகர் விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் (மாலை 4 மணி)
* மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம். (த-23)

* * *

யாழ்.மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 88 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தையொட்டிப் பிராந்திய சபைகளுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் 7 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* யாழ்ப்பாணப் பிராந்திய அணி எதிர் சண்டிலிப்பாய் பிராந்திய அணி. (பிற்பகல் 1 மணி).
* கோப்பாய் பிராந்திய அணி எதிர் கரவெட்டி பிராந்திய அணி (பிற்பகல் 1.30 மணி ).
* நல்லூர் பிராந்திய அணி எதிர் வேலணை பிராந்திய அணி. (பிற்பகல் 2 மணி).
* சங்கானை பிராந்திய அணி எதிர் நெடுந்தீவுப் பிராந்திய அணி (பிற்பகல் 2.30 மணி).
* பருத்தித்துறை பிராந்திய அணி எதிர் யாழ்.கூட்டுறவு உத்தியோகஸ்தர் அணி (பிற்பகல் 3 மணி)
* சாவகச்சேரி பிராந்திய அணி எதிர் உடுவில் பிராந்திய அணி (பிற்பகல் 3.30 மணி)
* தெல்லிப்பழை பிராந்திய அணி எதிர் காரைநகர் பிராந்திய அணி(பிற்பகல் 4 மணி)

(த-23)

## சென்.ஜோன்ஸ் கல்லூரி இரு அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.2

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடனான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 18, 20 வயதுப் பிரிவு அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 14,16,18,20 வயதுப் பிரிவு அணிகளின் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி கடந்த திங்கட்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் முதலில் இடம் பெற்ற 14 வயது பிரிவினருக்கான ஆட்டத்தில் ஸ்கந்தவரேதயாக் கல்லூரி 1:0 என்ற கோல்கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

16 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களை போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

18,20 வயதுப் பிரிவுகளின் ஆட்டங்களில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் இரு பிரிவுகளிலும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிகளை வெற்றி கொண்டது. (த-23)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

## தெல்லிப்பழை கல்விக் கோட்ட உதைபந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு,ஒக்.2

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டியில் ஆறு பாடசாலை அணிகள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகளில் மோதவுள்ளன.

'ஏ' பிரிவில் மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி ஆகியனவும்,

'பி' பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகியனவும் மோதவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் லீக் முறையில் நடைபெறும். (த-86)

## பெண்களுக்கான ஈட்டி எறிதலில் பதிவாகிறது வினோஜாவின் சாதனை

வலி.வடக்கு,ஒக்.2

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய தடகள விளையாட்டுக்களில் பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.வினோஜாவின் பெறுபேறு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப்பட்டியலை பதிவு செய்ய வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எ.நித்தியா 26.78 மீற்றர் தூரம் எறிந்தும், 2009 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.வினோஜா 29.80 மீற்றர் தூரம் எறிந்தும், 2010 ஆம் ஆண்டு எம்.வினோஜா 27.0 மீற்றர் தூரம் எறிந்தும் பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.வினோஜாவின் 29.80 மீற்றர் ஈட்டி எறிதலில் பெண்களுக்கான சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

## ஹாட்லிக்குத் தங்கப் பதக்கம்



யாழ்ப்பாணம்,ஒக்.2

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் தட்டு ஏறிதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் எஸ்.ஹரிகரன் 36.90 மீற்றர் தூரத்தினை ஏறிந்து முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இவருக்கு வர்ண விருதும் வழங்கப்பட்டுள்ளது. (த-23)

## கிறீன் பீல்ட் 'ஏ', ஈச்சமோட்டை அணிகள் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக.2

கிறீன்பீல்ட் 'ஏ' அணி, ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி ஆகியவை கரப்பந்தாட்ட ஆட்டங்களில் வெற்றிபெற்றன.

கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை கிறீன் பீல்ட் சனசமூக நிலைய மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்றது.

முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் கிறீன் பீல்ட் 'ஏ' அணியை எதிர்த்து சுண்டுக்குளி விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கிறீன் பீல்ட் 'ஏ' அணி தன்னை எதிர்த்து விளையாடிய சுண்டுக்குளி விளையாட்டுக் கழக அணியை 2:0 என்ற செற் கணக்கில் வென்றது.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிறீன் பீல்ட் 'சி' விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய கிறீன் பீல்ட் 'சி' விளையாட்டுக் கழக அணியை 2:0 என்ற செற்கணக்கில் வென்றது. (த-23)

### வடமாகாண அணிகள் இன்று கொழும்புக்கு

கொழும்பு விளையாட்டு அமைச்சின் மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு கொள்வதற்காக வடமாகாண ஆண், பெண் உதைபந்தாட்ட அணிகள் இன்று சனிக்கிழமை கொழும்பு புறப்படுகின்றன. (த-23-86)

### கரம்போட்டிகள் கொழும்பில்

யாழ்ப்பாணம்,ஒக்.2

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக் கிடையிலான 10 ஆவது விளையாட்டு விழாவை முன்னிட்டு இலங்கைக் கரம் சம்மேளனத்தில் எதிர்வரும் 6ஆம், 7 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள போட்டிகளில் பங்குகொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆண்,பெண் கரம் அணியினர் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புறப்படுகின்றனர். (த-23)

## திக்கம் இளைஞர், வல்வை அணிகள் உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.2

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் போட்டிகளில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம், வல்வை விளையாட்டுக்கழகம் 'ஏ' அணி ஆகியவை வெற்றிபெற்றுள்ளன.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வியாழக்கிழமை திக்கம் முனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இரு ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை கலைமதி, விளையாட்டுக்கழக மைதானத்தில் இரு ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை கலைமதி விளையாட்டுக் கழக அணியை 5:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

இதனைத் தொடர்ந்தும் இடம் பெற்ற மற்றைய ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் வல்வை விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய நக்கீரன் விளையாட்டுக்கழக அணியை 5:1 என்ற கோல் கணக்கில் வென்றது. (த-23)



யாழ்.நகர் மைய றோட்டறட் கழகம் நடத்திய பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியும், சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொள்ளும் காட்சிகள் இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல் சட்டத்தின்படி ஜனாதிபதிதான் போட்டிகளை ஆரம்பித்து வைக்கவேண்டும்!

## இளவரசர் சார்ள்ஸ் ஆரம்பித்து வைப்பார் என்ற அறிவிப்புக்கு எதிர்ப்புக் கிளம்புகிறது

புதுடில்லி, ஒக். 02

கொமன்வெல்த் போட்டிகளை இளவரசர் சார்ள்ஸ் தொடங்கிவைப்பார் என அறிவிக்கப்பட்டதையடுத்து, அதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்திய அரசியல் சட்டத்தின்படி இந்திய ஜனாதிபதிதான் தொடக்கிவைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கொமன்வெல்த் போட்டிகளை இங்கிலாந்து ராணிதான் தொடங்கி வைப்பது பாரம்பரிய வழக்கமாக உள்ளது. ஆனால், டில்லியில் நடக்கவுள்ள கொமன்வெல்த் போட்டியைத் தொடங்கி வைக்க ராணி எலிசபெத் வரவில்லை.

அவருக்குப் பதிலாக இளவரசர் சார்ள்ஸை அனுப்பி வைக்கிறார். இதனால், போட்டிகளைத் தொடங்கி வைப்பது யார் என்ற சர்ச்சை எழுந்தது. இளவரசர் சார்ள்ஸ் போட்டியைத் தொடக்கி வைப்பார் என்றும், இல்லையெனில் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீல் தொடக்கிவைப்பார் என்றும் முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், சார்ள்ஸ்தான் போட்டிகளைத் தொடக்கி வைப்பார் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு ஒலிம்பிக் சங்கத்தின் மூத்த தலைவரும், இந்திய தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பின் துணைத் தலைவருமான விஜயகுமார் மல்கோத்ரா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

இந்திய அரசியல் சட்டப்படி இந்தியாவில் நடக்கும் எந்த விழாவுக்கும் ஜனாதிபதிதான் தலைமை அந்தஸ்தில் இருக்க வேண்டும்.

ஆனால், கொமன்வெல்த் போட்டிகளை இளவரசர் சார்ள்ஸ், ராணியின் உரையைப் படித்து, போட்டியைத் தொடங்கி வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது இந்திய அரசியல் சட்டத்தை மீறும் செயலாகும்.எனவே, ஜனாதிபதிதான் போட்டியைத் தொடங்கி வைக்கவேண்டும்.

- இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# டில்லி வந்தடைந்தது கொமன்வெல்த் ஜோதி

புதுடில்லி, ஒக். 02

இந்தியாவில் பல்வேறு நகரங்களில் சுற்றிய கொமன்வெல்த் விளையாட்டு ஜோதி, நேற்றுமுன்தினம் டில்லி வந்தடைந்தது.

71 நாடுகள் பங்கேற்கும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், இந்தியத் தலைநகர் டில்லியில் நாளை கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது. இதனால், போட்டியில் பங்கேற்பதற்காக வெளிநாட்டு வீரர், வீராங்கனைகள் தொடர்ந்து டில்லியில் குவிந்தவண்ணம் உள்ளனர்.

மொத்தம் 7 ஆயிரத்து 200 வீரர், வீராங்கனைகள் இந்த விளையாட்டு விழாவில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விழாவையொட்டி கொமன்வெல்த் விளையாட்டு ஜோதி 100 நாள் தொடர் ஓட்டமாக இந்தியா முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது.

28 மாநிலங்கள், 7 யூனியன் பிரதேசங்களில் மொத்தம் 20 ஆயிரம் கிலோ மீற்றர் சுற்றிவந்த கொமன்வெல்த் ஜோதி, நேற்றுமுன்தினம் போட்டி நடக்கும் இடமான டில்லி வந்துசேர்ந்தது.

டில்லியில் ஜோதிக்கு, கலை நிகழ்ச்சிகளுடன் உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.

போட்டி ஒருங்கிணைப்புக் குழுத் தலைமையகத்தில் நடந்த வண்ணமிகு நிகழ்ச்சியில், டில்லி ஆளுநர் தேஜேந்திர கண்ணா, டில்லி முதலமைச்சர் ஷீலா தீட்சித், போட்டி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாடி ஆகியோர் இதனைப் பெற்றுக்கொண்டனர்.

பின்னர் ஜோதி, நேற்று டில்லியில் புகழ்பெற்ற முக்கிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதேபோல ஜோதியை, கொமன்வெல்த் கிராமத்திற்கு, ஒலிம்பிக் நாயகன் அபினவ் பந்த்ரா இன்று எடுத்துச் செல்வார்.

இதேவேளை,



சூதாட்டச் சர்ச்சையில் சிக்கிக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்துவீச்சாளர் முகமது ஆசிப் திருமண வரவேற்பு நிகழ்வி மனைவியுடன் அமர்ந்திருக்கிறார்.

# இரண்டாவது இடமே இந்தியாவின் இலக்கு

புதுடில்லி, ஒக். 02

''கொமன்வெல்த் விளையாட்டில் மிகச்சிறந்த நிலையாக இந்த முறை பதக்கப் பட்டியலில் 2 ஆவது இடத்தைப் பிடிப்போம்.'' - என்று இந்தியக்குழுவின்தலைமை நிர்வாகி புபனேஷ்வர் கலிட்டா கூறியுள்ளார்.

2002 மற்றும் 2006ஆம் ஆண்டு கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 4ஆவது இடத்தைப் பிடித்திருந்தது.

இந்த நிலையில் புபனேஷ்வர் கலிட்டா நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில்,

''எங்களது திறமை மீது எங்களுக்கு அபார நம்பிக்கை உள்ளது. கடந்த முறையை விட இந்தத் தடவை இன்னும் சிறப்பாகச் செயற்படுவோம் என்று நம்புகிறேன்.

பதக்கப்பட்டியலில் இந்த முறை 2ஆவது இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே எங்களது இலக்கு. அது முடியாவிட்டாலும் 3ஆவது இடத்திற்குக் கீழே போக மாட்டோம்.

மொத்தம் 17 வகையான விளையாட்டுகள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு விளையாட்டிலும் குறைந்தது 8 முதல் 9 பதக்கங்களைப் பெறுவோம் என்று நம்புகிறேன்.

நீச்சல், வில்வித்தை, குத்துச் சண்டை, துப்பாக்கி சுடுதல், ஸ்குவாஷ் ஆகியவற்றில் அதிக பதக்கங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்தியா, போட்டியை நடத்தும் நாடு என்பதால் இங்கிருந்து நிறைய வீரர்கள் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டியில் பெருமளமான வீரர்கள் பங்கேற்கும் அணியாக நாங்கள் இருப்போம். - என்றார்.

2006ஆம் ஆண்டு மெல்போர்ன் கொமன்வெல்த் போட்டியில் இந்தியா 22 தங்கங்கள் உட்பட 49 பதக்கங்களை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




2020ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த இந்திய ஒலிம்பிக் சங்கம் முயற்சித்து வருகிறது. ஆனால், இந்த விடயத்தில் இந்திய ஒலிம்பிக் சங்கத்திற்கும், மத்திய விளையாட்டு அமைச்சகத்திற்கும் இடையே மோதல்போக்கு இருந்துவருகிறது.

அரசின் சம்மதம் இல்லாமல் ஒலிம்பிக்போட்டியை நடத்தும் வாய்ப்பைப் பெறும் முயற்சியில் வெற்றி பெற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# சகலதுறை வீரர் அப்ரிடி வருத்தம்

''பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, தங்களது பிரச்சினைகளுக்காக இந்தியா, இலங்கை அல்லது வேறு எந்த நாட்டு கிரிக்கெட் சபையையோ நம்புவதை அடியோடு நிறுத்த வேண்டும்.''

- இவ்வாறு பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரரான அப்ரிடி தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சம்பியன்ஸ் லீக் போன்ற கிரிக்கெட் தொடரை விட்டுத் தள்ளுங்கள், எப்போதாவது பாகிஸ்தான் கிரிக்கெட்டை இந்தியா ஆதரித்ததுண்டா என்பதை எனக்குக் கூறுங்கள்.

உண்மை என்னவெனில் நாங்கள் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்குப் பிரச்சினை ஏற்பட்டபோது ஆதரவளித்தோம். ஆனால், எங்களுக்குப் பிரச்சினை என்றால் இவர்கள் என்றாவது துணையிருந்திருக்கிறார்களா?

ஆகவே, 'நம் கையே நமக்கு உதவி' என்ற அறிவை இப்போதாவது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உணர்ந்துகொள்வது நல்லது.

பாகிஸ்தான் அணிக்கு இந்தியா, இலங்கை மட்டுமல்ல உலகில் நண்பர்கள் இல்லை என்பதை நாம் இப்போதாவது உணரவேண்டும்.''

- இப்படி அப்ரிடி வருத்தம் தெரிவித்துள்ளார்.

## ஹைதராபாத் மைதானத்தில் பல வருடங்களின் பின் டெஸ்ட்

எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, ஹைதராபாத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ராஜீவ்காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

1988ஆம் ஆண்டிற்குப் பிறகு ஹைதராபாத்தில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். 1988ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக விளையாடப்பட்ட டெஸ்ட் கிரிக்கெட்தான் அங்கு நடைபெற்ற கடைசி டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

# சூதாட்ட சர்ச்சையில் சிக்கிய வீரர்களுக்கு எந்தவித உதவியும் செய்யமாட்டோம்!

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவிப்பு

லாகூர், ஒக். 02

''சூதாட்டத்தில் சிக்கி, சர்வதேச போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களான முகமது ஆஸிப், சல்மான் பட், முகமது அமீர் ஆகியோருக்கு சட்ட உதவியோ அல்லது பண உதவியோ செய்யமாட்டோம்'' - என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

3 வீரர்களும் தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபித்தால் மட்டுமே அவர்கள் விடயத்தில் இனித் தலையிடுவோம் என்றும் கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

கிரிக்கெட் சபை உதவ மறுத்துவிட்டமையால், 3 வீரர்களும் அவர்கள் சார்பாக வாதாட, தனித்தனியாக சட்டத்தரணிகளை நியமித்துள்ளனர்.

3 வீரர்கள் மீதும் கூறப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்து, எதிர்வரும் 5ஆம் திகதிக்குள் அவர்கள் விளக்கமளிக்கவேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போட்டிகளில் பங்கேற்க
# டில்லி சென்றது இலங்கைக் குழு

கொழும்பு, ஒக். 02

19ஆவது கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் வீரர், வீராங்கனைகள் மற்றும் அலுவலர்களைக் கொண்ட அணி நேற்றுமுன்தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ளது.

நாளை புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ள கொமன்வெல்த் போட்டிகளில் கலந்துகொள்வதற்குச் சுமார் 175 வீரர், வீராங்கனைகள் அடங்கலாக 200 பேர்வரை அடங்கிய குழு இலங்கை ஒலிம்பிக்குழுவின் ஏற்பாட்டில் டில்லி சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் குழுவில் வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சின்னத்துரை அண்ணாத்துரையும் இடம்பிடித்துள்ளார்.

# தாய்லாந்து ஓப்பின் டென்னிஸ்: பயஸ்-பூபதி ஜோடி தோல்வி!

பாங்கொக், ஒக். 02

தாய்லாந்து ஓப்பின் டென்னிஸ் தொடரின் இரட்டையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியது.

தாய்லாந்து ஓப்பின் டென்னிஸ் தொடர், பாங்கொக்கில் நடந்து வருகிறது. இதன் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஜோடி, ஜேர்மனியின் டானியல் பிராண்ட்ஸ் - குரோஷியாவின் இவான் ரோடிக் ஜோடியை எதிர் கொண்டது.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியின் முதல் செற்றை ஜேர்மனி-குரோஷியா ஜோடி 7- 6 என்ற கணக்கில் கைப்பற்றியது. பின்னர் எழுச்சி கண்ட இந்திய ஜோடி, 2ஆவது செற்றை 7-6 என்ற கணக்கில் தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தது.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதிச் சுற்றை இந்திய ஜோடி, 4-10 என்ற கணக்கில் இழந்தது. இறுதியில் பயஸ்-பூபதி ஜோடி 6-7, 7-6, 4-10 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறியது. கொமன்வெல்த் போட்டி ஆரம்பமாகவுள்ள நிலையில், பயஸ்-பூபதி ஜோடி முதல் சுற்றோடு வெளியேறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள் தேவை (பெண்)

சுன்னாகத்தில் இயங்கி வரும் பிரபல Net Cafe Computer type Seting தெரிந்த பெண் பிள்ளை வேலைக்குத் தேவை. தகைமைச் சான்றிதழ்களுடன் பின்வரும் முகவரிக்கு இன்று (02.10.2010) சனிக்கிழமை மாலை 4 - 6 மணி வரை நேரில் வரவும். சுன்னாகம் நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

முகவரி: **அபிஷேக் மல்ரி ஸ்ரோர்.**
இராமநாதன் கல்லூரி முன்பாக, மருதனார்மடம்
தொடர்பு: 0777238478, 0718334264


## நெடுந்தீவு வைத்தியசாலைக்கு ஓட்டோ அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.2

அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதாரக் கழகத்தினால் நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு ஓட்டோ ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஓட்டோ நெடுந்தீவு வைத்தியசாலையிலிருந்து அம்புலன்ஸ் படகுக்கு நோயாளர்களை ஏற்றிச்செல்ல பயன்படுத்த வுள்ளதாகயாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-16)

## யாழ். நாவலர் ம.வி.யில் இரத்த தானம்

யாழ்ப்பாணம், ஒக்.2

யூனியன் அஸ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவன உத்தியோகத்தர்கள் மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழக அனுசரணையுடன் இன்று காலை 8 மணி முதல் 10 மணிவரையாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் வைத்து இரத்த தானம் வழங்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் இரத்த தானம் செய்ய விரும்புவோர் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரைத் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ- 16)

## சாட்டி கடற்கரையில் சவுக்கு மரங்கள்

வேலணை பிரதேச சபை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரிவினர் உதவியுடன் சாட்டி கடற்கரையில் சவுக்கு மரக்கன்றுகளை மழைக் காலத்திற்கு முன்னதாக நடுகை செய்யத்திட்டமிட்டுள்ளது.

அத்துடன் இப் பகுதியில் உள்ள அந்தியேட்டி மடத்தை 1.6 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கவும் வேலணை பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக சபையின் செயலாளர் கே.தவராஜா தெரிவித்தார். (த-7)


SPC

## இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
## கட்டட வசதிகளை பெற்றுக் கொள்ளுதல்
## யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரங்களில் 03 – 05 வருடங்களுக்கு வாடகை/குத்தகை அடிப்படையில் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் ரஜ ஒசுசல இன் கிளைகளை தாபிப்பதற்கு தேவையான கட்டிடங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

தேவைப்படும் கட்டிடமானது நிலத்தளத்தில் 1200 சதுர அடிக்கும் 1500 சதுர அடிக்குமிடையிலான விஸ்தீரணத்தைக் கொண்டிருப்பதுடன் மேற்படி நகரங்களின் மையப்பகுதியில் 03 இணைப்பு மின்சாரம், நீர், தொலைபேசி மற்றும் வாகன தரிப்பிட வசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது, குளிரூட்டப்பட்ட கட்டிடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஒரு சதுர அடிக்கு எதிர்பார்க்கப்படும் வாடகை, மொத்த சதுர அடிகளின் எண்ணிக்கை, கட்டிட வரைபடம் மற்றும் அமைவிடம் போன்ற விபரங்களை உள்ளடக்கிய மூடிய கேள்வி மனுக்கள் "தலைவர் - வழங்கல் குழு" எனக்குறிப்பிட்டு கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் 2010.10.15 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் மேற்குறித்த திகதிக்கு முன்னதாக இடுதல் வேண்டும்.

தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் "ROS-BLDG" எனக்குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் கட்டிட உரிமையாளரின் பெயர், வசிப்பிட முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் உள்ளடங்கலான அனைத்து விபரங்களையும் விண்ணப்பத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.

தலைவர் - வழங்கல் குழு
இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
75, சேர் பரோன் ஜயதிலக மாவத்தை
கொழும்பு 01
தொலைபேசி 2320356



## பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில்
## கட்டடத் தொகுதியின் பகுதியை இடித்து அகற்றுதல்
## கேள்வி அறிவித்தல்

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள பழைய கட்டடத்தின் பகுதியைப் புதிய கட்டட அமைப்புக்காக இடித்து அப்புறப்படுத்தப்படவுள்ளது. இதில் மீள் பாவனைக்குரிய கட்டுமாணப் பொருள்களும் உண்டு. இவற்றுக்கானபகிரங்க விற்பனைக்கான கேள்வி கோரப்படுகின்றது. கூடுதலான விலை கோருபவருக்கு கட்டடப் பொருள்கள் வழங்கப்படும்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 04.10.2010 முதல் 12.10.2010 மதியம் 12 மணிவரை.
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 13.10.2010 மதியம் 12 மணிவரை.
3. கேள்வி திறக்கப்படும் திகதி 13.10.2010 பி.ப. 2 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. பூரணமற்ற நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
5. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை (இருப்பின்) என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் இடப்பட்ட இரு பிரதிகளையும் பிறதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்ட ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் இடல் வேண்டும்.
6. கட்டடத்தினை இடித்து அகற்றும் வேலை கீழ்வருவனவற்றினைக் கொண்டிருக்கும்.
   1. கூரை ஓடுகள், மரங்களை அகற்றுதல்.
   2. யன்னல் கதவுகள், கதவுநிலைகள் அகற்றுதல்.
   3. சுவர், தூண், சிமெந்துக்கல் என்பவற்றை நிலமட்டத்துக்கு ஒப்புரவாக்கல்.
   4. கட்டடத்தினை இடித்தழிக்கும் போதும் வெளியகற்றும் போதும் ஏற்படும் குழிகள் பள்ளங்கள் அனைத்தும் நிரப்புதல்.
7. பொருள்களுக்கான கேள்வி மேற்படி வேலைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
8. இடிபாடுகள் அனைத்தும் பிரதேச செயலக வளவில் இருந்து அகற்றப்படுவதுடன் ஏதும் மீதம் இருக்க அனுமதிக்கப்பட மாட்டாது.
9. இடித்தழிக்கும் நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மேற்பார்வை செய்யப்படும்.
10. வேலைகள் நடைபெறும்போது அயலிலுள்ள கட்டடங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
11. மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 15,000.00 செலுத்தப்பட வேண்டும். இவை தினமும் அலுவலக நாள்களில் பிற்பகல் 3 மணிவரை செலுத்தப்பட முடியும். இவற்றுக்கான இறுதித் திகதி 12.10.2010 ஆகும்.
12. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையினை 18.10.2010 இற்கு முன்னர் அல்லது பொருள்களை பிரதேச செயலக வளாகத்திலிருந்து அகற்றுவதற்கு முன்னர் இதில் எது முந்தியதோ அதற்குள் செலுத்தப்'படல் வேண்டும்.
13. கட்டடத்தினைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாள்களில் காலை 9 தொடக்கம் பி.ப. 3.30 வரை பிரதேச செயலரின் அனுமதி பெற்றுப் பார்வையிடலாம்.

பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், உடுவில்.

(ஙி/571522)



## NEW SCIENCE HALL, JAFFNA

## G.C.E. [A/L] இணைந்த கணிதம்

Mr.S.பிரேம்நாத் B.Sc.

சனி,ஞாயிறு வகுப்புகள்

| பிரிவு | நேரம் | பாடப்பரப்பு |
|---|---|---|
| 2011 | 12.30 - 2.00 | வரிசை மாற்றமும் சேர்மானமும் |
| 2012 | 11.00 - 12.30 | தொடர்பு வேகம் |
| மீட்டல் பிரிவு பரீட்சைக்குத் தோற்றியவர் களுக்குரியது | 8.00- 11.00 | அலகு ரீதியில் முழுப்பாடப் பரப்புக்குரிய துரித மீட்டல் வினாவிடை வகுப்பு |

**ஆரம்பம்-02-10-2010 (சனி)**

குறிப்பு- ★மாணவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன் கூட்டியே பதிவுகளை மேற் கொள்ளவும்.
★குறித்தவொரு பாடப்பரப்பு ஆரம்பித்த பின்னர் அது முடியும் வரை இடைநடுவில் புதிய அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(101724)



## 5 ஆவது பிறந்த நாளும் ஆம் மாத நினைவு நாளும்



செல்வி யோகநாதன் திவ்யா

மலர்வு: 02.10.2005
உதிர்வு: 31.05.2010

உன் உடல்தான் எம்மைவிட்டு மறைந்தது
உன் உருவமும் உன் மழலைப் பேச்சும்
என்றும் எம்மைவிட்டு மறையாது

என்றும் உன் நினைவுகளுடன்:
அப்பா-யோகநாதன், அம்மா-கல்யாணி
தம்பி-திசாணன்.

மீசாலை கிழக்கு, மீசாலை.

(சீ-571523)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தேவை

★ யாழ் நகரில் அமைந்துள்ள எமது ஸ்தாபனத்துக்கு மார்கெட்டிங் executive தேவை
★ திறமைக்கு ஏற்ற சம்பளம்+ கமிஷன் வழங்கப்படும்
★ மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி C/O 4078, உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி :suren@ metrohomesl.k.


# 31ஆம் நாள் நினைஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 01 - 02 - 1940



உதிர்வு 02 - 09 - 2010

## அமரர் சதாசிவம் தவபலநாதன்

எங்கள் பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து கடந்த 02.09.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவு கேட்டு நேரடியாக அனுதாபம் செலுத்தியோருக்கும் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் பல வழிகளில் உதவிகள் செய்தவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (02.10.2010) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

காவலூர்,
புளியங்கூடல்.
தொ.பே.: 0778059230.

குடும்பத்தினர்.

(104099)

# அம்பாறையில் சடலம் மீட்பு

அம்பாறை நகரசபை மைதானத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அம்பாறை ரஜவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதான எஸ். அனுர பெரேரா என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் அம்பாறை நீர் வழங்கல் வடிகாலமைப்புப் பிராந்திய அலுவலகத்தின் உத்தியோகத்தர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(சி)


## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியிலும், நாவலர் வீதியிலும் வீடும் கடையும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு : 222 3479, 0215670313

## விற்பனைக்கு

Laptop Computer

விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு : 0771267309

## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு, 6 ஆம் கட்டையடியில் பருத்தித்துறை வீதியில் சிறிய வீடு, கிணற்றுடன் கூடிய 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கு : 0776660740, 0776979762, 0712123811

## கோஷின் ஹோம் நேசிங்

மேற்படி நிறுவனத்திற்கு இல்லங்களில் பணியாற்றுவதற்கு பெண் பணியாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

கோஷின் ஹோம் நேசிங்
81, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
0778035211, 021 222 2227


# மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு பெண் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு,ஒக்.02

சிறுவர் அபிவிருத்தி ,மகளிர் விவகார அமைச்சில் வெற்றிடமாகவுள்ள மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு தகைமை பெற்ற பெண்களிடமிருந்து விண்னப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த விண்ணப்பதாரர் விண்ணப்பம் கோரம்படும் இறுதித் திகதியில் 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் நன்நடத்தை உடையவராகவும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். (பட்டத்திற்காக மனோ தத்துவம்,மனோவியலல், சமூகவியல் பொருளாதாரம்,சட்டம் ஆகியவற்றைக் கொண்டவர்கள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படும்.)

1674ஆம் இலக்க ஒக்ரோபர் 1 திகதிய அரச வர்த்தமானியில் உள்ளவாறான மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்பதாக செயலாளர்,சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு, இல.175ஏ, நாவல வீதி ,நுகேகொட என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இந்தப் பதவிக்கு வடக்கு மாகாணத்தில் 23 பதவிகளும் கிழக்கு மாகாணத்தில் 29 பதவிகளும் வெற்றிடமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## கைதடி மாணவன் சிறந்த பெறுபேறு

யாழ்ப்பாணம், ஒக்.2

கைதடி சேது காவலர் வித்தியாலயத்தில் கடந்த ஏழு வருடங்களில் முதன் முதலாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய சிவநாதன் அகிலன் 157 புள்ளிகளைப் பெற்று அப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் தோற்றிய மாணவர்களில் ஏழு பேர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சான்றிதழ் பெற தகுதி பெற்றுள்ளனர்.

(ஒ-ஐ)

## சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் சங்கக் கூட்டம்

நவாலி,ஒக்.2

சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் சங்கங்களின் விசேட கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முதியோர் தின விழா தொடர்பாகக் கலந்துரையாட ஏற்பாடாகி இருப்பதால் அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

(ஒ-100)

# நல்லூர் பிரதேச சபை

## திருநெல்வேலிச் சந்தை புனரமைப்பு வேலைக்கான கூலி அடிப்படையிலான ஒப்பந்தகாரருக்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2010

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-7 (C8) அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை உடைய பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திர கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 04.10.2010 தொடக்கம் 15.10.2010 பி.ப. 3.00 மணிவரை.

02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 18.10.2010 நண்பகல் 12.00 மணி வரை

03. கேள்வி திறக்கப்படும் திகதி 18.10.2010 பி.ப. 2.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)

04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.

05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப் புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு கிடைக்ககூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

08. மேலதிக விவரங்களை அலுவலக பிரதான நிறைவேற்று அதிகாரி, உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரையகம், இல. 8, நல்லூர் குறுக்குத் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி | NBT |
|---|---|---|---|---|---|
| 01 | கடைத் தொகுதிக்கான புதிய மாடிக்கட்டடம் | 50000.00 | 500.00 | 60.00 | 15.00 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.
01.10.2010

மே.சாந்தசீலன்
செயலாளர்
நல்லூர் பிரதேசசபை

(C/571530)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னையா வைராத்தை
### (சின்னத்தங்கம்)

மாவிலங்கையடி, அல்வாய் வட மத்தி, அல்வாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா வைராத்தை நேற்று (01.10.2010) வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பொன்னையாவின் அன்பு மனைவியும், அமரர் வல்லிபுரம் ஆறுமுகத்தின் சகோதரியும், மரகத்தின் மைத்துனியும் சிவகங்கை, கனகரத்தினம், தேவராசா (லண்டன்), குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கந்தசாமி, பாலேஸ்வரி, புவனேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதாஷ் (லண்டன்), சுதேஷ் (ஆசிரியர் ,யா/அனலை தீவு சதாசிவம் ம.வி.), சதீஷ் (யாழ்.பல்கலைக்கழக மாணவன்), சுதர்சன் (லண்டன்), சயந்தன் (மாணவன், பேராதனைப் பல்கலைக் கழகம்), நிதர்சன், நிரோசன், சிந்துஜன், நிஷாந்தன், வியாசர் (லண்டன்), வசிகர் (லண்டன்), ரூபவாஹினி (லண்டன்), சிவாஜினி, சுகாஜினி, சிந்துஜா, நிரோசா, நிவேதிகா, ரமேஸ்குமார், சுகந்தி (லண்டன்), சுரேஜினி ஆகியோரின் பேர்த்தியும், சரண்யா, அபிநயா, அட்சயன், யதுஷன், அருண்யா, சந்தோஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.10.2010) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவிலங்கையடி,
அல்வாய் வட மத்தி,அல்வாய்.
(C/571535)

தகவல்;
குடும்பத்தினர்.

## அ.ச.வி. மரியநாயகம்
### (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



கட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 70, 6ஆம் குறுக்குத் தெருவை வதிவிடமாகவும் கொண்ட அ.ச.வி.மரியநாயம் 27.09.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி - பாவிலா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பிளேவியன் - மேரிமெக்டலின் மேரி கிறேஸ் தம்பதியரின் மருமகனும் றீற்றா வின் அன்புத் துணைவரும் காமலிற்றாவின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (02.10.2010) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70, 6ஆம்
குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
ச.வி.ம.றீற்றா
புளோறன்ஸ்(மனைவி ),
ச.வி.ம.காமலிற்றா (மகள்).

(104085)

## கந்தவனம் பரமநாதன்



குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் உத்தியோகப் பற்றற்ற நீதிவானும் ஆகிய கந்தவனம் பரமநாதன் நேற்றுமுன்திம் (30.09.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் - மாணிக்கம் தம்பதியரின் புதல்வனும் பரிபூரணத்தின் அன்புக் கணவரும் மங்கையர்க்கரசி (லண்டன்), அருள்ராஜன் (லண்டன்), யசோதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுணகுமாரியின் (ஜேர்மனி) பெரிய தந்தையும் சிவகுமார் (லண்டன்), ராஜினி (லண்டன்), விஜயராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் இளமாறன் (லண்டன்), அருண், தருண் (லண்டன்), சிந்துஜா, ஹரிசன் (கனடா) ஆகியோரின் பேரனும் தவமணி (கனடா), பார்வதி (குப்பிளான்), ஆனந்தநாதன் (கனடா), சிவசாமி அம்மை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் செல்லமணி (கனடா), சண்முகலிங்கம் (கனடா) ஆகியோ ரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் காடாகரம்பை மயானத்தில் தகனம் செய்யப்படுழ்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தியடி,
குப்பிளாண்,ஏழாலை.
தொ.பே.: 0213210430, 0776636469

தகவல் :
மனைவி,
பிள்ளைகள்.
(104086)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

## கட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளை, இதே அறையில் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அரச தரப்பு எம்.பி. சந்தன கத்திரியாராய்ச்சியும் சிறை வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சரத் பொன்சேகா வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்து வரப்படுவதற்கு சிலமணி நேரத்துக்கு முன்னர் அறையிலிருந்த கட்டிலும், இரண்டு மின் விசிறிகளும் அப்புறப்படுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(சி)

## மன்னிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவுக்கு 30 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனையை இரண்டாவது இராணுவ நீதிமன்றம் விதித்துள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்தத் தண்டனையானது அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்பட்டது அல்ல என்று பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

மூன்றாம் தரப்பினரின் அழுத்தங்களின் ஊடாகவோ அல்லது போராட்டங்களின் மூலமோ சரத் பொன்சேகாவுக்கு விடுதலைப் பெற்றுக்கொடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

**கோரமாட்டார் மன்னிப்பு**

சரத் பொன்சேகா ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரமாட்டார் என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் கூறினார்.

சரத் பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்டுள்ள இத் தீர்ப்பானது ஓர் அரசியல் பழிவாங்கலே என்றும் அவர் சொன்னார்.

அத்துடன், சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்காக நாடு முழுவதிலும் இருந்து பொதுமக்களின் ஆதரவு திரட்டப்படும் எனவும், சிவில் நீதிமன்றத்தினூடாக சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் என்றும் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, சர்வதேச நாடாளுமன்ற ஒன்றிய கூட்டங்களில் அரசுக்கு எதிராகக் கருத்துகளை வெளியிடுவதன் மூலம் சரத் பொன்சேகாவை விடுவிக்க முடியாது என பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

(இ)

**விசாலமான வீடு வாடகைக்குத் தேவை**

திருநெல்வேலி, கோப்பாய், இருபாலை, நீர்வேலி, கொக்குவில், தாவடி, இணுவில், ஆறுகால்மடம் ஆகிய பிரதேசங்களில் அமைந்திருத்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு : 0777771782

**LOGIC Paper Class - 2011**

(Model)

Sat., Sun - 11 a.m. - 12 noon

ஆரம்பம் - Sun - 11 a.m. (03-10-2010)

B. காசல் NEC- ஆனைப்பந்தி

**A/L Day Class**

**கலை, வர்த்தகப் பிரிவு**

ஆரம்பம் : 04 10 2010 திங்கள் 8.00 மணி

பாடம் மாறிக் கற்போருக்கு விசேட பிரிவுகள்.

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**



01. Home Theater (Pineor, Sony, Tomshon,Techines)
02. Laptop Pentium III
03. Desktop Computers
04. Computer Parts
05. Phones (Samsung, Nokia, Sony)
06. Car Radio

தொடர்புகளுக்கு:

தனு ஸ்ரூடியோ, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

தொ.பே: தனு ஸ்ரூடியோ: 0776569831

0777068587, 0776510233.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிள்களில் தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் சென்றுக்கொண்டிருந்த போது, அதில் ஒரு மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதி விபத்து ஏற் பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயம டைந்த மேலும் இருவர் எப்பா வல வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

(சி)

## மீள்குடியமர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டிருந்தது. எனினும், நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் 65ஆவது உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதி சென்றதன் காரணமாக இந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை.

ஜனாதிபதி தற்போது நாடு திரும்பியுள்ளதால் பேச்சுக்கு அழைப்பு விடுப்பார் எனத் தாம் நம்புகிறார் என்று மாவை சேனாதிராஜா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(உ-சி)

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளார். அவர்கள் அனைவரும் முன்னாள் இராணுவத் தளபதி பக்கம் இருக்கின்றனர். அத்துடன் மூன்று தசாப் தங்களாக நீடித்த கொடூர பயங்கர வாதத்தை முற்றாக ஒழித்து, நாட்டு மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வழி செய்தார்.

அரசியலில் ஈடுபட்டமைக் காக அவர் பழிவாங்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி நியமித்த மோசடியான இராணுவ நீதிமன்றம் வழங்கிய முறையற்ற தீர்ப்புக்கு அவரே ஒப்புதலும் வழங்கியுள்ளார்

ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக அரசியல் ரீதியாக செயற் பட்டால் இப்படித்தான் நடக்கும் என இந்த மோசடித் தீர்ப்பு கோடிட்டுக்காட்டியுள்ளது.

இலங்கை அரசியலில் இது மிகவும் மோசமான, கண்டிக்கத் தக்க செயலாகும். ஊடகவியலா ளர்கள் கொல்லப்பட்டனர், தாக் கப்பட்டனர். இன்று ஜனநாயக ரீதியில் சுவரொட்டிகளை அச்சிட முடியாது, உரிமையாளர்கள், ஊழியர்கள் கைதுசெய்யப்படுகின்ற னர்.

எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும்படி நான்கு பீடங் களைச் சேர்ந்த மகாநாயக்கர் களும் ஜனாதிபதியிடம் வேண்டு கோள் விடுத்திருந்தனர்.

நாங்கள் இந்தத் தீர்ப்பை எதிர்த்து இன்றுமுதல் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தவுள்ளோம். அத்துடன் சரத் பொன்சேகா எம்.பியை விடுதலை செய்யும்படி மகஜரொன்றை மக் களது கையெழுத்துகளுடன் முன் வைக்கவுள்ளோம்.

அனைத்துக்கும் நாம் எமது முறைப்பாடுகளை மக்கள்முன் வைப்போம். மக்களே இவற்றுக் குத் தீர்ப்பு வழங்குவர். இறுதி யில் மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.

- இவ்வாறு அவர் சொன்னார்.

(உ-சி)

**வெளிவந்து விற்பனையாகின்றது**

- முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை வழிகாட்டி ரூபா 250/-
- புகையிரத திணைக்கள அதிபர் பரீட்சை வழிகாட்டி ரூபா 250/-
- கல்வி சாரா ஊழியர் பரீட்சை வழிகாட்டி ரூபா 200/-

BY: P. காசல்தாசன்

பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா - யாழ்ப்பாணம்

பிள்ளையார் புத்தகசாலை -கிளிநொச்சி.

**A/L DAY CLASS**

**கணக்கீடு**

**AP.பகீரதன் B.B.A (FM Spl)**

- ★ வாரத்தில் ஐந்து நாள்களும் வகுப்புக்கள் (mon-Fri 8-10 Am)
- ★ வார இறுதியில் விசேட Paper Class (sat-sun 11-12 Am)
- ★ தொடர்ச்சியான பரீட்சைகளும் [10மாதிரிப்பரீட்சைகள்] அவற்றுக்கான கருத்தரங்குகளும் (Fri2.30- 5.00Pm)
- ★ முழுமையான பாடத்திட்டமும் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
- ★ பாடம் மாறிக்கற்போர், வெளிமாவட்ட மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்.

ஆரம்பம்: 04.10.2010 திங்கள் 8.00மணி

NEC பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.

## கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி கப்பல் பணியாளர்களை விடுவிப்பதற்காக சோமாலியக் கடற்கொள்ளையர்களுடனான தொடர்பை ஏற்படுத்தித் தருமாறு கென்யாவிலுள்ள இலங்கைத் தூதரகம் ஏற்கனவே கோரியிருந்தது.

## அரசசார்பற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி மக்களுக்கு நிறையத் தேவைகள் இருக்கின்றன. அவர்கள் யுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வர்கள். அவர்க ளுடைய தேவைகள் இன் னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கின் றன. இந்த மாவட்டத்தில் பணி புரிவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் இந்த மக்களின் தேவைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யமுடியும்.

இங்கு பணியாற்றும் நிறுவனங்கள் அரசின் திட்டங்கள் எண்ணங்களுக்கு அமைவாகவே செயற்படவேண்டும் என்றும் -

மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கின்றது. அதனைக் கருத்திற்கொண்டு அந்த நிறுவனங்கள் அந்தப் பகுதிகளில் செயலாற்ற முன்வரவேண்டும்.

வன்னிப் பிரதேசத்துக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏ-9 வீதியால் சென்றுவர பாதுகாப்பு அமைச்சிடம் ஒவ்வொரு தடவையும் அனுமதியைப் பெறவேண் டும். ஆனால் தற்போது அந்த அனுமதி மூன்று மாதகாலத்துக்கு வழங்கப்படுகின்றது - என்றார்.

(ஒ-15)

## சிங்களக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் பெயர்களை வெளியிட வேண்டாம் என அவர்கள் அனைவரும் கேட்டுக்கொண்டனர்.

''இலங்கையின் பெரும்பான்மைக் கட்சிகள் யாவும் தமிழர்களுக்குத் தீர்வெதுவும் கொடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளன'' என்றார் யாழ். பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் ஒருவர்.

''புலிகள் தோற்கடிக்கப்பட்டதால் தீர்வு தேவையில்லை என்று சொல்வது தமிழர்களை முட்டாள்களாக்குகின்ற சொலலாகும். தமிழர்களுடைய பிரச்சினை களையே கொச்சைப்படுத்துவதாகும். விடுதலைப் புலிகள் தோன்றுவதற்கு முன்னரே இந்த நாட்டில் தமிழர்களுக்குப் பிரச்சினை உள்ளது. தந்தை செல்வா காலத்திலே அகிம்சை வழியில் எடுத்துரைக்கப்பட்டது. பின்னர் தமிழர்களுக்குத் தீர்வு வேண்டும் என்று ஆயுத ரீதியாக விடுதலைப்புலிகள் போராடினார்கள். அந்தப் போராட்டம் இன்று மழுங்கடிக்கப்பட்டுவிட்டது. இருப்பினும் தமிழர்களுடைய பிரச்சினை இன்னும் அப்படியே இருக்கிறது'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

''ஐக்கிய தேசியக் கட்சிதான் தமிழர்களுடைய இத்தனை அழிவுகளுக்கும் முழுக்காரணம் அந்தக்கட்சி பசுத்தோல் போர்த்திய புலிபோலத்தான் தமிழர்களுடைய பிரச்சினையைக் கையாண்டு வருகிறது. ஆயுதப் போராட்டம் வீழ்த்தப்பட்டதற்காகத் தமிழர்களுக்கு இனிமேல் தீர்வு தேவையில்லை என்று கூறிவிட முடியாது'' என்று தெரிவித்தார் பாடசாலை ஆசிரியர் ஒருவர்.

''1977ஆம், 1983ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரம் ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்திலே நடந்தேறியது. அந்தக்கட்சி தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளது. இந்த அரசும் அப்படியே தனது பதவியைத் தக்க வைப்பதில் காட்டும் ஆர்வத்தைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி செலுத்த மறுக்கிறார்'' - என்றார் நகர பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த ஒருவர்.

(உ-9)

## விசுவமடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சியமளித்தவர்களில் ஒருவர் 60 வயதுப் பெண்மணி ஆவார். அவர் தெரிவிக்கையில், ''நாங்கள் எமது வீட்டைப் பார்ப்பதற்குச் சென்றபோது இராணுவம் அதற்கான அனுமதியை வழங்காததால் அயலில் உள்ள எமக்குத் தெரிந்தவர்களின் வீட்டில் எனது மகள், பிள்ளைகளுடன் குறித்த தினத்தன்று தங்கினோம்.

அன்று பகல் வேளையில் நாம் இருந்த வீட்டைத் தாண்டிச் சென்ற இராணுவச் சிப்பாய்கள் இருவர் எம்மிடம் வந்து இந்த வீட்டுப் பெண்மணியின் கணவர் எங்கே என விசாரித்தனர்.

அந்த பெண்ணின் கணவர் வவுனியா சென்று விட்டார் என்றும் இன்று பிற்பகல் திரும்பி விடுவார் என்றும் கூறினேன்.

அன்றிரவு நான் எனது 40 வயது மகளுடனும், பிள்ளைகளுடனும் குறிப்பிட்ட அயல்வீட்டுப் பெண்ணின் வீட்டில் தங்கியபோது அப்பெண்ணின் பிள்ளைகள் மற்றும் தம்பியாரும் அங்கு இருந்தனர். தம்பியார் வீட்டின் முகப்பில் உறங்கினார். வீட்டுக்காரப் பெண் வீட்டின் உள்ளே இரு பிள்ளைகளுடன் உறங்கினார்.

அன்று நள்ளிரவு வேளையில் 4 பேர் எம்மை தட்டி எழுப்பினர். வந்தோர்களில் ஒருவர் வீட்டின் உள்ளே சென்று வீட்டுக்காரப் பெண்ணைத் தொந்தரவு செய்தார். பின்னர் மூவராகச் சேர்ந்து வீட்டுக்காரப் பெண்ணை வெளியே கொண்டு சென்றனர். அவ்வேளையில் அவரது குழந்தைகள் (ஒருவர் 10வயது, மற்றையவர் 4 வயது) தமது தாயை விட்டு விடும்படி கதறி அழுதனர்.

இருப்பினும், அவர்கள் அப்பெண்ணைக் கொண்டு சென்றனர். அப்போது நான்காவது நபர் எனது மகளைக் கூட்டிக்கொண்டு சென்றார். நான் உடனே ஏனைய பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வெளியே ஓடிவிட்டேன். காலையில் மகளையும் வீட்டுக்காரப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு போய் பொலிஸில் முறையிட்டோம்'' - என்றார்.

இரண்டாவது நபர் சாட்சியமளிக்கையில், ''சம்பவ தினம் நானும் எனது தாயாரும் வீட்டைப் பார்க்க வந்து அயல் வீட்டில் தங்கிப் படுத்திருந்தோம். அன்றிரவு எனது உடலை யாரோ நெருடியதுபோல இருந்தது. விழித்துப் பார்த்தபோது அங்கு மூவர் சிவிலில் நின்றுகொண்டிருந்தனர். அந்த மூவரும் பின்னர் வீட்டுக்காரப் பெண்ணை வெளியே கொண்டு சென்றனர்.

மற்றவர்களில் ஒருவர் கத்தியைக் காட்டி என்னை மிரட்டினார். எனக்குச் சுகமில்லை என்று நான் அவரிடம் மன்றாட்டமாகக் கூறினேன். ஆனால், அவர் என்னைக் கூட்டிச் சென்று எனது உடைகளைப் பலாத்காரமாகக் கழற்றி சோதனை செய்தார். பின்னர் எனது கைகளைக் கட்டிவிட்டு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

கை கட்டுக்களை சிறிது நேரத்துக்குப் பின் நான் அவிழ்த்துக்கொண்டு வீட்டுக்குள் சென்று பார்த்தபோது அங்கு எவருமே இருக்கவில்லை. அச்சத்தில் உறைந்து போயிருந்தேன். அப்போது வீட்டுக்காரப் பெண் அழுது கொண்டு வந்தார். அவருடன் சேர்ந்து அவரது தாயாரும் அழுது கொண்டு வந்தார்.

அவருடன் சேர்ந்து அவரது தாயார் வீட்டுக்குச் சென்றோம். அங்கும் எவரும் இல்லை. அவர்கள் எனது தாயாருடன் சேர்ந்து இராணுவ முகாமிற்கு முறையிடச் சென்றிருந்தார்கள். அதன் பின்னர் அடுத்த நாள் பொலிஸாரும், இராணுவத்தினரும் எமது வாக்குமூலங்களைப் பதிவு செய்து கொண்டார்கள்'' - என்றார்.

சாட்சியங்களை அடுத்து சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்குமாறும், அவர்களின் குடும்பம் வருவாயின்றி அவதிப் படுவதாகவும், அவர்களது சம்பளப் பணத்தில் தான் அவர்களது குடும்பம் வாழ்க்கை நடத்துவதாகவும் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி யூலியானா கொஸ்வத்தை விண்ணப்பம் செய்தார்.

இதற்கு கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பாதிக்கப்பட்டோர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் ஆகிய இருவரும் கடும் எதிர்ப்புத் தெவித்தனர்.

சந்தேக நபர்களின் உரிமைகள் மட்டுமல்லாது பாதிக்கப்பட்டோரின் நலனும் கவனிக்கப்பட வேண்டும். மிகவும் வறியவர்கள் இவர்கள், மிகக் கொடூரமான விதத்தில் பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் அநாகரீகமான மற்றும் இயற்கைக்கு மாறான காம இச்சையைத் தீர்த்துக் கொண்டுள்ளனர். அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று பாதிக்கப் பட்டவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

சாட்சிகள் மற்றும் வாதங்களை அவதானித்த நீதிவான் சந்தேக நபர்களுக்கான பிணை மனுவை நிராகரித்து வழக்கு விசாரணையை நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org